

# சாதனை நாயகன்
# எம்.ஜி.ஆர்.

புகைப்பட
ஆல்பம்-2

அருள் மொழி பதிப்பகம்

விலை ரூ. 35/-



Priya
சல்வார் கமீஸ்
எண்ண முடியாத நட்சத்திரங்கள்
விண்ணிலே !
பூமியிலோ... எண்ணிலடங்கா
வடிவங்களில் 'ப்ரியா'
சல்வார் கமீஸ் & சுடிதார் !
'ப்ரியா' நிறுவனம்
அவ்வப்போது நடத்தும்
பரிசுப் போட்டி விற்பனையும்
உண்டு
எதை எடுப்பது ? எதை விடுவது ?
ப்ரியா வெரைட்டிகளை
தமிழகமெங்கும்
தேர்ந்தெடுக்க திணறும்
வாடிக்கையாளர்கள் உண்டு !
Priya சல்வார் கமீஸ்
159 பவுண்டன் பிளாசா,
பாந்தியன் ரோடு, எழும்பூர்,
சென்னை- 600 008. போன்: 8267917





குழந்தைகளுடன் எம்.ஜி.ஆர். கொஞ்சி மகிழ்கிறார்.



கே.ஆர்.நாராயணன் (இன்றைய துணை ஜனாதிபதி), எம்.ஜி.ஆர்.



மூதறிஞர் ராஜாஜியுடன்



'சினிமா கதிர்' பரிசளிப்பு விழாவில் முதல்வர் காமராஜரிடம் சிறந்த நடிகர் விருது பெறும் எம்.ஜி.ஆர்.



வேட்டைக்காரன் 100-வது நாள் விழாவில் எம்.ஆர்.ராதா, எம்.ஜி.ஆர்., பேபி ஷகீலா



குண்டடிபட்டு மருத்துவமனையில் எம்.ஜி.ஆர். சிகிச்சை பெற்றபோது அவரைச் சந்தித்து சி.பா.ஆதித்தனார் உரையாடிய காட்சி. அருகில் நாஞ்சில் மனோகரன்.



ரஷ்ய திரைப்படக் கலைஞர்கள் சென்னை வந்திருந்த போது, நடிகர் சங்கம் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் ஒரு நடிகைக்கு, சேலை கட்டிவிடும் எம்.ஜி.ஆர்.



பின்னணிப் பாடகர் ஜேசுதாஸ், எம்.ஜி.ஆர்.



'பத்மஸ்ரீ' பட்டம் பெற்ற சிவாஜிக்கு மாலையணிவித்து பாராட்டுகிறார் எம்.ஜி.ஆர். ('முகராசி' ஒப்பணையில்)



'வேட்டைக்காரன்' படப் பிடிப்பில் இயக்குநர் கே.சங்கர், ஜெமினி, எம்.ஜி.ஆர். ஆகியோர் பழரசம் அருந்தும் வேடிக்கையான காட்சி.

'காவல்காரன்' வெற்றி விழாவில் நாகேஷ், நம்பியார், மனோகர், எம்.ஜி.ஆர்.





'ராஜபார்வை' 100வது பட விழாவுக்கு வருகை தரும் முதல்வர் எம்.ஜி.ஆருடன் கமல்ஹாசன்.



'தெய்வத்தாய்' படப்பிடிப்பில் இயக்குநர் பி.மாதவன்., சரோஜாதேவி, எம்.ஜி.ஆர்.



'நாடோடி மன்னன்' படத்திற்காக நம்பியாரை இயக்கும் எம்.ஜி.ஆர்.



'நினைத்தை முடிப்பவன்' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர்., மஞ்சுளாவுடன் ப.நீலகண்டன்.



'தெய்வத்தாய்' படத்திற்காக அசோகனுக்கு சண்டைப் பயிற்சி தரும் எம்.ஜி.ஆர்.



'உழைக்கும் கரங்கள்' படப்பிடிப்பில் குண்டுராவ் (கர்நாடக முன்னாள் முதல்வர்), எம்.ஜி.ஆர்., கோவை செழியன்.

ரஷ்யாவுக்கு சென்றிருந்த போது எம்.ஜி.ஆருடன் லதா.





நடிகர் சங்க விழாவொன்றில் - பழம்பெரும் இயக்குநர் கே.சுப்ரமணியம், எம்.ஜி.ஆர்.



'அரசிளங்குமரி' படத்தின் தொடக்க விழாவில் இயக்குநர் ஏ.எஸ்.ஏ.சாமியுடன் எம்.ஜி.ஆர்.



'பரிசு' படப்பிடிப்பில் சாவித்திரி, எம்.ஜி.ஆருடன் அயல்நாட்டுப் பெண்கள்.



'நினைத்ததை முடிப்பவன்' படப்பிடிப்பு காஷ்மீரில் நடைபெற்றபோது அதில் பங்கு கொண்ட துணை நடிகையர் மற்றும் படப்பிடிப்பு உதவியாளர்களுடன் எம்.ஜி.ஆர்.



'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திற்காக ஜப்பான் புறப்படுகையில் லதா, சந்திரகலா, எம்.ஜி.ஆர்., மஞ்சுளா.

  

# ராமாவரம் தோட்டத்தில்... 30 ஆண்டுகளுக்கு முன்

பரங்கிமலையிலிருந்து பூவிருந்தவல்லிக்குப் போகும் சாலையிலிருக்கும் தமது தோட்டத்தில், எங்களை இன் முகத்தோடு கைகூப்பி வரவேற்றார் திரு. எம்.ஜி. 'ராமச்சந்திரன். படப்பிடிப்பு முடிந்த களைப்புத் தீர குளித்து விட்டு 'ஜில்'லென்று காட்சி தந்த அவரைப் பார்த்ததும் மனத்திற்குக் குளிர்ச்சியாக இருந்தது. 'எம்.ஜி.ஆர். தோட்டம்' என்று புகழ்பெற்ற அந்த இடத்தைக் காண வேண்டும் என்ற ஆவலில் 'தோட்டத்தைச் சுற்றி பார்க்கலாமா?' என்று கேட்டேன்.

''தோட்டத்திலே என்ன இருக்கு? ரொம்ப சாதாரணமா. ஏதோ...'' என்று அடக்கத்துடன் கூறினார் அவர்.

''ஒரு கரடி இருக்கிறதாமே...?''

''இருந்தது. பாவம், அது பத்து நாட்களுக்கு முன்னே இறந்து விட்டது. அது ரொம்பப் பொல்லாத குட்டி! அடங்கவே இல்லை. மூக்கு குத்தி வளையம் மாட்டி கயிறு கட்டினால்தான் வழிக்கு வரும்னு, ஆஸ்பத்திரிக்கு அனுப்பிச்சேன். அங்கே துளை போட்டதும், இரத்தம் கொட்டி செத்துடுச்சு. மிருகக்காட்சி சாலைக்குக் கொடுக்கணும்னு நினைச்சுக்கிட்டிருந்தேன்... என்ன செய்யறது...? இதோ பார்த்தீங்களா, மான் குட்டிங்க... அறந்தாங்கி தோழர்கள் அன்புடன் கொடுத்தாங்க...'' என்று அருகிலிருந்த மான்களை சுட்டிக் காட்டினார். அந்தக் குட்டிகளும் ஒரு துள்ளுத் துள்ளி எழுந்து கண்களை உருட்டிப் பார்த்தன.

ஏழரை ஏக்கர் பரப்புள்ள அந்தத் தோட்டத்தில் வாழை மரங்களையும், மாமரங்களையும் தவிர காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. நெல் விளைச்சலும் உண்டு. மத்தியில் ஒரு நீச்சல் குளம் இருக்கிறது. படம் போட்டுப் பார்க்க ஒரு சிறு தியேட்டரும் இருக்கிறது. தேகப்பயிற்சி செய்வதற்காக ஓர் இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

அந்தத் தோட்டத்தினுள் இருக்கும் அழகான பங்களாவுக்குத் தாயின் நினைவாக 'அன்னை நிலையம்' என்று பெயரிட்டிருக்கிறார் எம்.ஜி.ஆர். அதற்கு கிழக்கே ஒரு மண்டபம் தென்பட்டது.

''அது என்ன மண்டபம்?'' என்று கேட்டேன் நான்.

''அதுதான் கோயில்?''

''என்ன, கோயிலா?''

''ஆமாம். என் தாயாருடைய கோயில். அங்கே என் அன்னையின் படம் இருக்கிறது. அவர்தான் நான் வணங்கும் கடவுள்''

''சினிமாவில் கோயில் காட்சிகளில் தோன்றி நடிப்பதில்லை என்ற கொள்கையை ஏன் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று, பெற்ற அன்னைக்குக் கோயில் கட்டிக் கும்பிடும் எம்.ஜி. ஆரிடம் கேட்டேன்.

''அப்படியொரு கொள்கையே எனக்குக் கிடையாதே, எதனால் இப்படிக் கேட்கிறீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் அவர்.

''காஞ்சி தலைவனில் நீங்

கள் கோயிலுக்குள் நுழைவது போலவும், வெளியே வருவது போலவும் ஒரு காட்சி வருகிறதே, அது ஏன்?''

''அந்தக் காட்சியை முதலில் நினைத்தபடி எடுக்க முடியாமல் போனதுதான் அதற்குக் காரணம். என்னைப் பற்றி ஒரு தவறான எண்ணம் பரவியிருக்கிறது. நானோ, கழகமோ கோயிலுக்குப் போகக் கூடாது என்றோ, கடவுள் இல்லை என்றோ பிரசாரம் செய்ததில்லை. கடவுள் பெயரால் நாட்டில் மூட நம்பிக்கைகள் பெருகுவதையும், சோம்பேறித்தனம் வளருவதையும்தான் எதிர்த்து வந்திருக்கிறோம். 'ஜெனோவா' படத்தில் நான் நடிக்கவில்லையா? இப்போது 'பரம பிதா'வில் நடிக்கிறேனே, அதுவும் மத சம்பந்தமான கதைதானே? 'பெரிய இடத்துப் பெண்'ணில் எல்லோரையும் நான் கோயிலுக்குள் அழைத்துச் செல்வது போல் ஒரு காட்சி வருகிறதே! சினிமா இருக்கட்டும். சமீபத்தில் மருதமலை கோயிலுக்குச் சென்று விளக்கேற்றி வைத்தேனே, அதற்கு என்ன சொல்கிறீர்கள்?''

பேசிக் கொண்டே மேற்குப் புறமிருந்த ஒரு சிறு வீட்டினுள் நுழைந்தோம். அது ஒரு 'அவுட் ஹவுஸ்' மாதிரி இருந்தது. அதை முழுவதும் சாம்பிராணி புகைப்படலம் சூழ்ந்திருந்தது.

''இந்த இடத்தை ஒரு கலைக் கூடமாக்கத் திட்டமிட்டிருக்கிறேன். இன்னும் படங்களெல்லாம் வரவில்லை'' என்று எம்.ஜி. ஆர். சொன்னதும், அந்த அறையில் ஒரு வவ்வால் பறந்து வந்து எங்களை வட்டமிட்டது. சாம்பிராணி மணமும், வவ்வால் ஓட்டமும் சேர்ந்து அவ்விடம் ஒரு கலைக்கோயிலாகவே காட்சியளித்தது!

நாங்கள் அமர்ந்தோம். சிற்றுண்டி வந்தது. ஐஸ்கிரீமும் காப்பியும் வந்தன. அவற்றைக் கொண்டு வந்த தோழரைப் பார்த்து எம்.ஜி.ஆர்., ''இவங்க வந்த டாக்சி வெளியே நிக்குதே, அந்த டிரைவருக்குப் பலகாரம் கொடுத்தீங்களா?'' என்று குரலைச் சற்றுத் தாழ்த்திக் கேட்டார்.

''ஓ, கொடுத்து விட்டேனே'' என்றார் அனுபவமிக்க அந்தத் தோழர்.

சிற்றுண்டிக்குப் பிறகு, ''வருகிறீர்களா, என் பாதாள அறையைக் காட்டுகிறேன்'' என்று அழைத்தார், எம்.ஜி.ஆர்.



'நல்லவன் வாழ்வான்' படத்தில் ஒரு அழகுத் தோற்றம்.

நான் மரத்துக்கு மரம் தாவும் வண்டு அல்ல. பழத்தோடு இருந்து பழத்தோடவே அழிஞ்சி போகுதே, அந்த வண்டு இனத்த சேர்ந்தவன்.

-எங்க வீட்டு பிள்ளை

> என்னை நம்பிக் கெட்டவர்கள் யாரும் இல்லை. என்னை நம்பாமல் கெட்டவர்கள் பலர் உண்டு.
>
> -நாடோடி மன்னன்

எனக்குத் தூக்குவாரிப் போட்டது.

''ரகசிய அறையைக் காட்டுகிறேன். வாருங்கள் என்று அழைக்கும் துணிச்சல் உங்களுக்குத்தான் வரும்'' என்று நான் சொன்னதும், ''வந்து பாருங்கள். மறைப்பதற்கு ஒன்றுமில்லை'' என்றார் அவர் புன்முறுவலுடன்.

அவரைப் பின் தொடர்ந்தோம். அடுத்த அறைக்குள் சென்று தரையிலிருந்த ஒரு கதவைத் திறந்தார் அவர். ''பின்னாலேயே வாருங்கள்'' என்று சொல்லியபடியே கீழே இறங்கினார். சினிமாவில் 'கிளைமாக்ஸ் சீன்' சண்டை நடப்பதற்காக ஒரு படிக்கட்டு வழியாகக் கீழே இறங்கிப் போவார்களே, அது மாதிரி சென்றோம்.

கீழே இருந்த அறையில், எம்.ஜி.ஆர். மறைத்து வைத்திருந்த 'செல்வங்க'ளைக் கண்டு மலைத்துப் போனோம். அழகான அந்த அறையின் சுவரை மகான்களின் படங்கள் அலங்கரித்து இருந்தன. காந்திஜி, நேருஜி, தாகூர், விவேகானந்தர், ஏசுநாதர், புத்தர், ராமலிங்க சுவாமிகள், சாரதாமணி என்று 'அன்பு செல்வங்கள்' வரிசையாக அங்கு கொலு வீற்றிருந்த காட்சி உள்ளத்தைக் கொள்ளை கொண்டு எங்களை ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்தியது. மானசீகமாக அத்தனை பேருக்கும் அஞ்சலி செலுத்தி விட்டு, இத்தனை ஆழமான பக்தியும், பண்பும் குடிகொண்டிருக்கும் மக்கள் திலகத்தை மனமார வாழ்த்தினோம்.

பிறகு ''கீழே கட்டி வைத்திருக்கும் புத்தகங்கள் எல்லாம் என்ன?'' என்று கேட்டேன்.

''அத்தனை நூல்களும் இம்மகான்களைப் பற்றிய கருத்தோவியங்கள். அவர்கள் சிந்தனையில் பிறந்த அறிவுரைகளும் இருக்கின்றன'' என்று சொன்னார் அருகிலிருந்த வித்வான் வே. லட்சுமணன்.

''இந்த இடத்தை ஒரு சிறந்த நூல் நிலையமாக்க வேண்டும் என்பது என் அவா. இங்கு சற்று உரக்கப் பேசினாலும் எதிரொலி எழும்பும். ஆகவே இங்கு வருபவர்கள் பேசாமல் அமைதியாக அறிவுச் செல்வங்களில் மனத்தைப் பறிகொடுக்க வேண்டும் என்றே இப்படியொரு அறையைக் கட்டச் சொன்னேன். புற வாழ்க்கையிலிருந்து நிம்மதி பெறுவதற்காக எனக்கு மட்டுமின்றி, என் அருமைத் தோழர்களுக்கு பயனளிக்கும் வகையில் இந்நூல் நிலையத்தை அமைத்திருக்கிறேன். என் காலத்திற்குப் பிறகு இதுவும், மேலேயுள்ள கலைக் கோயிலும் பொதுச் சொத்தாக ஆவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறேன்'' என்று புன்முறுவலுக்கிடையே தன்னடக்கத்துடன் கூறினார் எம்.ஜி.ஆர்.

அறிவும் ஆன்மீகமும் இணைந்து புனிதமாக்கப்பட்ட அந்த இடத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் மேலே ஏறி வந்தோம்.

பிறகு எல்லோரும் அமர்ந்து பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

எம்.ஜி.ஆரின் லாயிட்ஸ் ரோடு வீட்டின் வாசலிலும், தோட்டத்தின் வாசலிலும் எப்போதும் ஒரு சிறு கூட்டம் நின்று கொண்டிருப்பதை அநேகர் கவனித்திருப்பார்கள். அவர்களில் பெரும்பாலோர் இளைஞர்களாக இருப்பார்கள். அதைப் பற்றித்தான் முதலில் பேச்சு ஆரம்பமாயிற்று.

''அவர்களையெல்லாம் உங்களால் சந்திக்க முடிகிறதா? அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய முடிகிறதா?''

''கலைப் பணியும் பொதுப்



ராமாபுரம் தோட்டத்து வீட்டினுள் பாதாள அறையில் அடுக்கப்பட்டு உள்ள அறிவு நூல்களும் (இன்று நினைவு இல்லத்தில் இருக்கின்றன) மகான்களின் படங்களும்.




'மலைக்கள்ளன்' படப்பிடிப்பில் (வலமிருந்து இடமாக) என்.டி.ராமராவ், எம்.ஜி.ஆர்., ஸ்ரீராம், நடுவில் சந்தியா (ஜெயலலிதாவின் தாயார்), அவருக்கு நேர் பின்புறம் எம்.ஜி.சக்ரபாணி, சேரில் அமர்ந்திருப்பவர் இயக்குநர் ஸ்ரீராமுலு நாயுடு, கடைசியாக பானுமதி.

பணியும் எனக்கு இரண்டு கண்கள் போன்றவை. என்னிடம் பெரும் நம்பிக்கை வைத்து உதவி நாடி தினம் அநேகர் வந்து கொண்டே யிருக்கிறார்கள். எல்லோரையும் நான் நேரில் பார்ப்பது என்பது முடியாத காரியம். ஆகவே என் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் அத்துறையைக் கவனித்துக் கொள் கிறார்கள். சிலர் படிப்புக்குப் பணம் கேட்டு வருகிறார்கள். உடல் உறுப்புகளை இழந்த சிலர், உழைத்துப் பிழைக்க முடியாமல் உதவி கேட்டு வருகிறார்கள். சிலரோ தொழில் நடத்துவதற் கான முதலீடு கொடுத்து உதவும் படி கேட்கிறார்கள். என்னால் முடிந்த வரையில் உதவி செய்கி றேன். ஒரு தனிப்பட்ட மனிதன் எல்லோரையும் திருப்தி செய்வது என்பது முடியாத காரியம் அல் லவா? ஆகவே ஓரிருவர் ஏமாற்ற மடைந்து போக நேரிடுகிறது. அது வும் தவிர, தகுதியற்றவர்களும், ஏமாற்றும் எண்ணத்துடன் வருப வர்களும் சில சமயம் உதவி பெற் றுச் சென்று விடுவதால், உண் மையாகக் கஷ்டப்படுகிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதை நினைக்கும்போதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது''

''சினிமாத் துறையில் புதுப் புது நடிகர்களும், நடிகைகளும் தோன்ற வேண்டும் என்று சொல் கிறார்களே, அதற்கு நீங்கள் கூறும் வழியென்ன?''

''நான் வெகு நாட்களாகவே இந்தப் பிரச்சினைப் பற்றித் தீவிர மாகச் சிந்தித்து வந்திருக்கிறேன். 1948-ம் வருஷமே கோயம்புத்தூ ரில் ஜூபிடர் சோமு அவர்களிடம் இதைப் பற்றி விவாதித்திருக்கி றேன். நாடகக் கம்பெனிகள் நடத்தி அதில் சிறப்பாக நடிப்ப வர்களுக்குச் சினிமாவில் சான்ஸ் கொடுக்க வேண்டும் என்றும், அப்படி சினிமாவில் நடிப்பதற்கா கத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள், அவ்வப்போது நாடகங்களில் பங்கு கொள்ளவும் அனுமதிக்கப் பட வேண்டும் என்றும் ஒரு யோசனை உருவாகியது. அதை எல்லோரும் வரவேற்கிறார்கள். ஆனால் ஏனோ தெரியவில்லை,



ரசிகர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்ட புகைப்படங்களில் இதுவும் ஒன்று.

அது யோசனை அளவிலேயே நின்று விட்டது.

பிறகு, சில வருடங்களுக்கு முன் நடிகர் சங்கத்தில் இந்தப் பிரச் சினையைக் கொண்டு வந்து விவா தித்தோம். நடிகர் சங்கத்தின் சார் பில் 'சிறந்த எழுத்தாளர்களைக் கொண்டு நாடகங்கள் எழுதச் சொல்லி அதில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து, அமெச்சூர் நடிகர் களைக் கொண்டு அவற்றை நடிக்க வேண்டும்; பட முதலாளி கள் சிலர் நீதிபதிகளாக அமர்ந்து, திறமைமிக்க நடிகர்களைத் தேர்ந் தெடுக்க வேண்டும்; அவர்களுக் குத் தங்கள் படங்களில் நடிக்க வாய்ப்புத் தர வேண்டும்' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி னோம். ஏனோ தெரியவில்லை. அது தீர்மானமாகவே இருந்து விட்டது. நாடகங்களும் வர வில்லை. நடிப்பதற்குக் கலைஞர் களும் முன்வரவில்லை.

அதற்குப் பிறகு நான் பிலிம் வர்த்தக சபையில் மற்றொரு யோசனையை வெளியிட்டேன். அதாவது, முன்னணியில் உள்ள ஒரு நடிகர் ஒரே சமயத்தில் ஆறு படங்களில்தான் நடிக்க ஒப்பந்தம் செய்யப்படலாம். அவரை எந்த படத் தயாரிப்பாளரும் ஏழாவது படத்தில் ஒப்பந்தம் செய்யக் கூடாது. அதாவது, ஒரு நடிகர் ஒரே சமயத்தில் நடிக்கும் படங்க ளுக்கு உச்சவரம்பு இருக்க வேண் டும் என்று கூறினேன். இதன்படி புது நடிகர்களைப் புகுத்துவது எளிதாகும் என்று கருதினேன். ஆனால் இந்த ஏற்பாடும் ஏனோ நடைமுறைக்கு வராமலே போய் விட்டது''

''பிரபல நடிகர்களின் பெய ரில் கலை மன்றங்கள் தோன்றுவ தால் வீண் சச்சரவுகள் வளரும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?''

''நான் அப்படி நினைக்க வில்லை. கலைமன்றங்கள் அமைப்பது ரசிகர்களைப் பொறுத்த விஷயம். என் பெய ருள்ள மன்றங்களில் கழகத் தோழர்கள் மட்டும்தான் இருக்கி றார்கள் என்று நினைப்பது தவறு. மற்றக் கட்சித் தோழர்களும் கூட இருக்கிறார்கள். அரசியல் நோக் கமே இல்லாமல் கலைக்காகவே அதில் அநேகர் இருக்கின்றனர். இந்த மன்றங்களை நான் பணம் கொடுத்து நடத்துவதாகச் சிலர் சொல்வதை நான் மறுக்கிறேன்''

''சினிமா போஸ்டர்களையும் 'பானர்'களையும் கிழித்தும், அவற்றின் மீது சேற்றை வாரி அடித்தும் ஆபாசப் படுத்துவதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர் கள்?''

''சாதாரணமாக என் படங்க ளும், சிவாஜிகணேசனின் படங்க ளும்தான் இம்மாதிரி அவதிக்கு ஆளாகின்றன. நானோ, சிவா

ஜியோ ஆட்களைத் தூண்டிவிட்டு இப்படிச் செய்வதாக அநேகர் நினைக்கிறார்கள். இந்தக் குற்றச் சாட்டை நான் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. ஆர்வமிக்க எங்களுடைய ரசிகர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்பதையும் நான் நம்பவில்லை. போஸ்டரைக் கிழிப்பது, நாசப்படுத்துவது போன்ற காரியங்களில் சாதாரணமாகப் பொழுது போகாதவர்கள்தான் ஈடுபடுவது வழக்கம்'' என்று சொல்லிவிட்டு விளம்பர 'பானர்' களைக் கிழிப்பதைப் பற்றி அவர் ஒரு சுவையான நிகழ்ச்சியைக் கூறினார்.

அடையார் நெப்ட்யூன் ஸ்டுடியோ அருகில் 'பணக்கார குடும்ப'த்தின் பானர் ஒன்று வைக்கப் பட்டிருந்தது. தினந்தோறும் அதில் சிறு சிறு பொத்தல்கள் தெரிய ஆரம்பித்தன. இதைப் பற்றி எல்லோரும் எம்.ஜி.ஆரிடம் புகார் செய்யவே, அவர் அதைப் பற்றி கவனிப்பதாகக் கூறினார். இரண்டு நாட்கள், மறைவிலிருந்து பார்த்ததில், ஒரு திசையிலிருந்து சிறு கற்கள் வருவதைப் பார்த்தார் அவர். பிறகு இரு நண்பர்களுடன் கற்கள் வந்த திசையை நோக்கிச் சென்றார். எதிரிலிருந்த வாராவதிக்குக் கீழே விளையாடிக் கொண்டிருந்த மாடு மேய்க்கும் சிறுவர்கள்தான் கற்களை வீசி எறிகிறார்கள் என்பது தெரியவந்தது. அவர்களிடம் சென்று விசாரித்தபோது உண்மை விளங்கியது. 'பானர்' துணி, சட்டங்களில் இழுத்துக் கட்டப்பட்டிருப்பதால், அதன் மீது சிறு கற்கள் படும்போது 'டங்' 'டங்'கென்று ஒரு சத்தம் கேட்குமல்லவா? அது காதுக்கு இனிமையாக இருக்கிறது என்பதற்காகவே அவர்கள் அம்மாதிரியான விளையாட்டில் ஈடுபட்டார்கள் என்பதை அறிந்து, பையன்களை மிரட்டி விட்டுத் திரும்பி விட்டார்கள்.

எம்.ஜி.ஆர். காப்பி அருந்துவதில்லை. வெற்றிலை சுவைப்பதில்லை. புகை பிடிப்பதில்லை. ஆகவே, அவருடைய நண்பர்களில் சிலர் தம் எதிரில் புகை பிடிக்கத் தயங்குவதாகக் கூறினார்



'மதுரை வீரன்' வெற்றி விழாவில் பெற்ற தங்கவாளுடன் எம்.ஜி.ஆர்.

அவர். இவரிடம் பெருமதிப்புக் கொண்ட ஒரு மதுரை நண்பர், எம்.ஜி.ஆரின் உருவத்தைப் போஸ்டரில் கண்டால் கூட சிகரெட்டை மறைத்துக் கொண்டு விடுவாராம்! சற்றுத் தொலைவு சென்ற பிறகுதான் மீண்டும் புகைப்பாராம்.

''சில வருடங்கள் நடிகராக இருந்து விட்ட அனுபவத்தைக் கொண்டே படத்தின் டைரக்டராகி விடலாம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?''

''என்னை மனத்தில் வைத்து கொண்டே இந்தக் கேள்வியைக் கேட்பதாகத் தோன்றுகிறது. நான் டைரக்டர் ராஜா சந்திரசேகரின் மாணாக்கன். அவரிடம் டைரக்ஷனின் நுணுக்கங்களை நிறையப் பயின்றிருக்கிறேன். டைரக்ஷன் என்பது சாதாரணவிஷயம் அல்ல. கதையைப் பற்றியும், கதாபாத்திரங்களைப் பற்றியும் ஒரு கதாசிரியனுக்கு தெரிந்ததற்கு மேல் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். தன் மனத்தில் உருவாகும் கற்பனைக் காட்சியை எந்த அளவுக்கு காமிரா படம் பிடிக்கும் என்று தெரிய வேண்டும். தாம் எதிர் பார்க்கும் உணர்ச்சியை எந்த அளவுக்கு நடிகர் பிரதிபலிக்க முடியும் என்பதும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு காட்சியைப் படமாக்கும்போது, அந்தக் காட்சி, படத்தை முழுமையாகப் பார்க்கும்போது எவ்வாறு இருக்கும் என்று முன் கூட்டியே தீர்மானிக்கும் திறமையும் இருக்க வேண்டும். கதாபாத்திரங்களின் தன்மையும், கதையின் ஓட்டமும் பாதிக்கப்படாமல் படத்தை எடுத்து முடிக்க வேண்டும். இதில் முன்னணி நடிகர்களின் ஒத்துழைப்பு மிகமிகத் தேவை. அவர்கள் தங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்காமல், படம் வெற்றிகரமாக ஓடுவதற்காகப் பிறருடன் ஒத்துழைக்க வேண்டும். படம் நன்றாக ஓடினால்தான் எல்லோருக்கும் நல்லது''

''நாடகத்திலிருந்து சினிமாவுக்கு வந்தீர்களே, முதலில் இரண்டுக்குமிடையே நீங்கள் கண்ட வேற்றுமை என்ன?''

''நிறைய இருக்கிறது. ஓர் உதாரணம் மட்டும் சொல்கிறேன். நான் நாடகங்களில், அதுவும் முக்கியமாக 'என் தங்கை' நாடகத்தில் நன்றாக அழுவேன். வேண்டும் போது உணர்ச்சிவசப்பட்டு துயரத்தை வரவழைத்துக் கொள்வேன். அது ரொம்பவும் இயற்கையாக இருக்கும். சினிமாவிலும் அம்மாதிரியே இயற்கையாக அழ வேண்டும் என்ற ஆசை எனக்கு. ஆகவே 'கிளிசரின்' போட்டுக் கொள்ள மாட்டேன் என்று முதலில் பிடிவாதமாக இருந்தேன். அதேபோல் படப்பிடிப்பின் போது இயற்கையாகவே அழுதேன். அந்தக் காட்சியைத் திரையில் பார்க்கும்போது நான் அழுத மாதிரியே தெரியவில்லை. ஏனெனில் இயற்கையாக அழுததால், அந்த விளக்குச் சூட்டில் கண்ணீர் கன்னத்துக்கு வரும் முன்பே

உலர்ந்து போய் விட்டது. பிறகு தான் சினிமா வேறு, நாடகம் வேறு என்று புரிந்து கொண்டேன். நானும் பிறரைப் போல் 'கிளிசரின்' போட்டுக் கொள்ள ஆரம்பித்தேன்''

''கல்கியின் நாவலான 'பொன்னியின் செல்வனை'ப் படமாக்கப் போவதாக அறிவித்திருந்தீர்களே, அது எந்த நிலையில் இருக்கிறது?''

''படப்பிடிப்பு ஆரம்பமாவதற்கான வேலைகள் மும்மரமாக நடந்து கொண்டிருக்கின்றன. அதைக் கலரில் எடுக்கப் போகிறேன். ஆங்கிலத்திலும் எடுக்க வேண்டும் என்ற ஓர் எண்ணம் இருக்கிறது. ஆங்கில வசனங்களை அண்ணாவை எழுதும்படி கேட்கப் போகிறேன்''

''உங்களுக்கு வெளிநாடுகளுக்குப் போக வேண்டுமென்ற விருப்பம் இல்லையா?''

''நிறைய இருக்கிறது. நாடகக் கம்பெனியுடன் ஒரு முறை பர்மாவுக்குச் சென்றிருக்கிறேன்.



வேறு எங்கும் போனது கிடையாது. இலங்கையிலிருந்து ஒரு முறை அழைப்பு வந்தது. 'விசா'வும் கிடைத்தது. ஆனால் நமது சர்க்கார் என்ன காரணத்தாலோ 'பாஸ் போர்ட்' கொடுக்க மறுத்து விட்டார்கள். இந்த வருஷம் செப்டம்பர் மாதம் மலேயாவில் ஒரு கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்படி ஓர் அழைப்பு வந்திருக்கிறது. மறுபடியும் சர்க்காரை அனுமதி கேட்கப் போகிறேன். பாஸ் போர்ட் கிடைத்தால் போய் வருவேன்'' என்றார் அவர் பொருள் பொதிந்த புன்முறுவலுடன்.

நாங்களும் 'போய் வருகிறோம்' என்று அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டோம். சினிமாவில் குத்துச் சண்டையும் கத்திச் சண்டையும் போடும் புரட்சி நடிகர், நேரில் பார்க்க இத்தனை சாதுவாக இருக்கிறாரே என்று வியந்து கொண்டே வீடு திரும்பினோம்.

*(1964-ல் 'ஆனந்தவிகடனில்' இடம்பெற்ற பேட்டியிலிருந்து.)*


*With best compliments from*

A.K. SATTISH

Managing Partner.

**Singapore Travels**

(Tour Operators)

*Concessional Air Tickets, A/c Coaches*

*Tourist A/c Cars, Hotel Reservations*

**Hotel Atlantic Buildings,**

**2, Montieth Road, Egmore, Madras - 600 008.**

**Phone : 8554419**

**Fax : 91-44-8554930**

நல்வாழ்த்துக்கள்

தினமலர்

சென்னை ★ வேலூர் ★ பாண்டி ★ ஈரோடு ★
கோவை ★ திருச்சி ★ மதுரை ★ நெல்லை





எம்.ஜி.ஆர். வளர்த்த கரடி

எம்.ஜி.ஆரது ராமாவரம் தோட்டத்தில் எத்தனையோ உயிர்ப்பிராணிகள் வளர்ந்திருக்கின்றன. சிங்கம், சிறுத்தை போன்ற விலங்கினங்களையும் வளர்த்திருக்கிறார். அப்படி அவர் கரடிக்குட்டி ஒன்றையும் வளர்த்தார்.

எம்.ஜி.ஆருக்கு படப்பிடிப்பு இல்லாத போது தோட்டத்தில் அவர் அதன் பின்னால் சுற்றுவதும், அது எம்.ஜி.ஆர். பின்னால் சுற்றுவதும் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும்.

ஒரு சமயம் எம்.ஜி.ஆர். அந்த கரடியிடம் கொண்ட கோபத்தில் அதன் மூக்கில் தட்டிவிட, அதற்கும் வந்ததே கோபம் தோட்டத்தில் மற்ற யாரிடம் சகஜமாக இருந்தாலும் எம்.ஜி.ஆரைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொண்டது. அதை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கே எம்.ஜி.ஆருக்கு பல நாட்கள் ஆனதாம்.

அது சைவக் கரடி. பால், தயிர்சாதம் அதற்கு முக்கிய உணவு.

விஞ்ஞான ரீதியில் முயன்று பறக்கும் தட்டை செய்து படமாக்கப்பட்ட ஒரே தமிழ்ப்படம் 'கலை அரசி.'

தமிழ்ப் படங்களிலேயே இரண்டாம் வெளியீட்டில் 100 நாள் ஓடியவை எம்.ஜி.ஆர். நடித்த 'நாடோடி மன்னன்' - திருவண்ணாமலை, எங்க 'வீட்டுப்பிள்ளை'

மாடர்ன் தியேட்டர்ஸ், சரவணா பிலிம்ஸ், விஜயா கம்பைன்ஸ், ஆர்.ஆர். பிச்சர்ஸ், ஏவி.எம்., ஜெமினி, சத்யா மூவிஸ் ஆகிய நிறுவனங்கள் தயாரித்த முதல் தமிழ் வண்ணப் படங்களில் கதாநாயகன் எம்.ஜி.ஆர். அவர்களே! (தேவர் படம் உட்பட)




எம்.ஜி.ஆர். மறைந்து ஆண்டுகள் கடந்து வருகின்றன என்றாலும் அவர் மறையவில்லை. இன்னும் வாழ்கிறார் என்பதற்கு நாட்டில் அவ்வப்போது நடைபெறும் சம்பவங்கள் சாட்சியாக உள்ளன. அவர் அறிமுகம் செய்த 'இரட்டை இலை' சின்னத்தை தவறாகப் பயன்படுத்த முடியாது என்பதை நடந்து முடிந்த தேர்தல்கள் நிருபித்தன. அவரது அன்புக்குரிய மனைவி கடந்த 19-5-96 அன்று காலமான போது, அவருக்கு பெருந்திரளாக அஞ்சலி செலுத்த வந்த மக்கள் கூட்டம் மற்றொரு நிரூபணம். எம்.ஜி.ஆரது பழைய படங்கள் இன்றும் பரபரப்பாக வசூலாகிக் கொண்டிருக்கிறது.

எம்.ஜி.ஆர். அரசியலை இப்போதும் கவர்ச்சி அரசியல் என்றகிறார்கள். அவர்கள் எல்லாம் தங்கள் முகத்தை கண்ணாடியிலே பார்த்துதான் இப்படி சொல்கிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. எம்.ஜி.ஆரை 1955 முதலே கிழட்டு நடிகன் என்று விமர்சனம் செய்தார்கள் இவர்கள். எம்.ஜி.ஆரால் தி.மு.க. வளர்ந்ததா, தி.மு.க.வால் எம்.ஜி.ஆர். வளர்ந்தாரா என்பதை நாம் விமர்சனம் செய்வதற்கில்லை. ஆனால் எம்.ஜி.ஆர். என்பவரின் எழுச்சி, வீழ்ச்சி எல்லாமும் அவர் ஒருவருக்கே சொந்தம். அவர் வாழ்க்கையின் எல்லா பக்கங்களையும் அலசி ஆராயும்போது தன் முன்னேற்றத்திற்காக எப்படியெல்லாம் பாடுபட்டிருக்கிறார் என்பது சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடியதல்ல. எம்.ஜி.ஆர். வசூல் சக்கரவர்த்தி என்பது அவரது ஐம்பது வயதுக்கப்புறமே நிகழ்ந்திருக்கிறது. வயதான காலத்தில் தான் அவர் மகத்தான வெற்றிகளை ஈட்டியிருக்கிறார். அவரது இளமைக்காலம் பூராவும் சோதனை மயம்தான். அந்த சோதனைகளை புன்சிரிப்போடு கடந்து வந்ததுதான் அவரது பின்னைய வெற்றிகளுக்கு அடித்தளமாக அமைந்தது.

உடலைக் கட்டுப்பாட்டோடு வைத்துக் கொள்வதில் எம்.ஜி.ஆருக்கு இணை எவருமில்லை. கதாநாயகனாக நடிக்க ஆரம்பித்து புரட்சி நடிகர் என்று புகழ் பெற்ற பின்பும் அவருக்கு ஒரு கால கட்டத்தில் படங்கள் இல்லாமல் இருந்தது. புகழ் பெற்ற நடிகராக இருந்த அவரே வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு இளைஞருக்குச் சொன்னது இது. ''உடலைக் கட்டுப்பாடாக பயிற்சிகள் மூலம் காத்துக் கொள்வது நல்லது. நமக்கு வாழ்வில் நல்ல சந்தர்ப்பங்கள் வயதான காலத்தில் கூட வரலாம். அப்போது உழைப்பதற்கு உடலில் தெம்பு வேண்டும்'' என்று கூறியதோடு அல்லாமல் அதன்படியே வாழ்ந்தவர் அவர்.

எம்.ஜி.ஆரின் இருபத்தைந்து ஆண்டு இமாலய வெற்றிகளின் பின்னே ஐம்பதாண்டு கால வாழ்க்கை சோதனைகள்ளைக் கண்டிருக்கிறது. இளமைக் காலத்தில் இல்லற சுகம் என்பது அவருக்கு கானல் நீர். அதை வயதான காலத்தில் சில நடிகைகள் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர் உடல் நலம் பாதிக்கப்பட அந்த நடிகைகளே காரணம் என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

எம்.ஜி.ஆரின் பார்வை படாத இடமே தமிழ் நாட்டில் இல்லை. தி.மு.க.வில் சேருவதற்கு முன்னும் பின்னும் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் மக்களை அவர் சந்திக்க தவறியதில்லை. வெளியூர் போகும்போதெல்லாம் சூட்கேஸில் பணம் நிறைய எடுத்துச் செல்வாராம். சூட்கேஸ் கொள்ளாத போது பெரிய துணியில் பொட்டலம் கட்டிக் கொள்வாராம். விளம்பரத்திற்காக கொடுத்த வள்ளல் என்றும் அவர் விமர்சிக்கப்பட்டிருக்கிறார். பத்திரிகையில் வராத அளவில் எவ்வளவோ கொடுத்திருக்கிறார். அவர் மறைந்த பின்பே அவரைப் பற்றிய உண்மைகளெல்லாம் வெளி வர ஆரம்பித்துள்ளன.

எம்.ஜி.ஆர். போல் ஆகிவிட முடியும் என்று இன்றைக்கு நடிகர்கள் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கனவில் கூட அது நடக்காது. எம்.ஜி. ஆர். மக்களின் உணர்வில் கலந்தவர். அத்தகையவரின் பெயரை சொல்லிக் கொண்டு அரசியல் நடத்தும் தலைவர்களால் கூட அவர் போல் ஆகி விட முடியாது. எம்.ஜி.ஆரின் பெயரால் பிழைப்பு நடத்தும் அவர்களை காலம்தான் ஒதுக்கித் தள்ள வேண்டும். எம்.ஜி.ஆரின் பெயரைச் சொல்ல அவர்களில் எவருக்குமே அருகதை இல்லை என்பதை எம்.ஜி.ஆரின் உயிராக, உணர்வாக இருப்பவர்களுக்கு இந்த நாளில் தெரிவிப்பதை நம் கடமையாக கருதுகிறோம். ஏனெனில் எம்.ஜி.ஆர். ஒரு மனிதாபிமானி!

## சட்டசபையில் கண்ணியம் என்றால்...

1977-ல் எம்.ஜி.ஆர் தமிழக முதல்வராக ஆட்சிப் பொறுப்பேற்கிறார். சட்டசபையில் உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட முதல் நாளன்று ஐந்து நிமிடம் முன்னதாகவே சட்டசபைக்கு வந்தார் முதல்வர் எம்.ஜி.ஆர். அன்று காலை 9.55 மணி முதல் பிற்பகல் 1.55 மணி வரை தனது இருக்கையிலிருந்து ஒரு நிமிடம் கூட எழுந்திருக்காமல் பொறுமையுடன் அமர்ந்திருந்தார் அவர்.

கருணாநிதி சபைக்குள் வந்தவுடன் எம்.ஜி.ஆர். அவருக்கு வணக்கம் தெரிவித்தார். ஆனால் குனிந்தவாறு வந்து கொண்டிருந்த நிலையில் கருணாநிதி அதைக் கவனிக்கவில்லை. இதை உணர்ந்த எம்.ஜி. ஆர். மீண்டும் ஒரு முறை அவருக்கு வணக்கம் கூற, அதைப் பார்த்த கருணாநிதி உடனே பதிலுக்கு வணக்கம் தெரிவித்தார். முதல் நாளன்று எம்.ஜி.ஆரும்.கருணாநிதியும் சட்டசபையில் பேசிக் கொள்ளாமல் இருந்தார்கள். கருணாநிதியும், நாஞ்சில் மனோகரனும்தான் பேசிக் கொண்டார்கள். பத்திரிகை நிருபர்கள் எதிர் பார்த்ததற்கு மாறாக இரண்டாம் நாளன்று கருணாநிதியும், எம்.ஜி.ஆரும் சாதாரண தோழமை உணர்வில் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

நன்றி: ஆனந்தவிகடன்





கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி சிறுமியாக இருந்தபோது எம்.ஜி.ஆருடன் ஒரு மகிழ்ச்சியான காட்சி.

# எனக்குத் தெரிந்த எம்.ஜி.ஆர்.!

புரொபசர் ராமு

"சின்னவர் (எம்.ஜி.ஆர்.) படப்பிடிப்பில் இருக்கார். கொஞ்ச நேரத்துல கூப்பிடுவார். உட்காருங்க" - எங்களை உபசரித்து, அமர வைக்கிறார் திரு.ஆர்.எம். வீரப்பன். அமர்கிறோம். இடம்: சத்யா ஸ்டுடியோ.

நான் அப்போது, பச்சையப்பன் கல்லூரி மாணவர் பேரவைச் செயலர்.

இன்று, சென்னை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கும் டாக்டர் மா.செல்வராசன், அப்போது மாணவர் பேரவைத் தலைவர்.

எங்களுடன் இன்னும் மூன்று மாணவர்கள் இருக்கிறார்கள்.

நான் அதற்கு முன்பு, எத்தனையோ பொது விழாக்களில் எம்.ஜி.ஆர். அருகே செல்லும் வாய்ப்பு இருந்தும், அறிமுகப்படுத்திக் கொண்டதில்லை. இன்று முதன் முதலாக எம்.ஜி.ஆருடன் பேசப் போகிறோம் என்று நினைத்தபோது, மனதில் ஒரு பரவசம்.

காரணம்?

வெண்திரையில், கனவு மனிதராய் புன்னகை பூக்கும் அந்த கம்பீரக்கலைஞரை, நேரில் சந்திக்கும் வாய்ப்பு சாதரணமானதா?

'கண்ணன் என் காதலன்' படத்தின் காட்சிகள் எடுக்கப்படுவதாக அறிந்தோம்.

மாணவர்களான நாங்கள் ஏன் எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்திக்க வந்தோம்?

அப்போது - அண்ணா, தமிழ் நாட்டின் முதல் அமைச்சர் - கலைஞர் போக்குவரத்துத் துறை அமைச்சர்.

எங்கள் கல்லூரியில், மிகப் பெரிய விழா நடத்தி மூன்று சான்றோர்களின், மிகப் பெரிய வண்ணப் படங்களைத் திறந்து வைக்க முடிவு செய்தோம்.

ஓவிய மன்னர் மாதவன், நடராசன் இருவரும் அந்த படங்களைத் தயார் செய்து விட்டார்கள்.

டாக்டர் மு.வரதராசனார் படத்தை அண்ணாவும், பாரதிதாசன் படத்தை கலைஞரும் திறக்க ஒப்புதல் வாங்கிவிட்டோம்.

அண்ணாவின் படத்தைத் திறந்து வைக்க எம்.ஜி.ஆர். அவர்களின் இசைவு பெறுவதற்காகத்தான் காத்திருந்தோம்.

''சின்னவர் அழைக்கிறார்'' - என்று அறிவித்த ஆர். எம்.வீ. எங்களைப் படப்பிடிப்புக் களத்துக்குள் அழைத்துச் செல்கிறார்.

மிகப்பெரிய அரங்கம்.

புன்னகைத்த முகத்தோடு, எங்கள் ஒவ்வொருவர் கையையும் அன்புடன் பற்றி, அமரவைக்கிறார். எங்கள் எதிரே அவர் அமர்கிறார்.

''அப்புறம்!'' - ஒற்றைச் சொல்லோடு நிறுத்துகிறார். அப்படிக் கேட்கும்போது, அவர் முகத்தில் காணப்படும் வசீகரம் வெண்திரை காணாத வெளிச்ச மின்னல்! விழாவுக்கு அழைக்கிறோம்.

''ஓயாத படப் பிடிப்பு, காய்ச்சலோடு நடித்துக் கொண்டிருக்கிறேன்'' - என்று சொன்ன அவர், என் கையைப் பற்றி தம் நெற்றிமீது வைக்கிறார். காய்ச்சலின் வெப்பம் கடுமையாக இருக்கிறது.

''இப்போது வேண்டாம். அடுத்த மாதம் நீங்கள் வசதிப்பட்ட தேதியில் வாருங்கள்'' - அன்புடன் சொல்கிறார் நண்பர் செல்வராசன்.

அடுத்து எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்ன வார்த்தைகள், எங்களைப் புண்படுத்தியது. மாணவப் பருவம் அல்லவா!

கோபம், பளிச்செனப் பற்றியது. என்ன சொன்னார் எம்.ஜி.ஆர்? ''இந்த வருடம் முழுக்க, இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள எனக்கு நேரம் இல்லை. தொகை நிரப்பப்படாத செக்கில் கையெழுத்து போட்டுத் தருகிறேன். தொகையை எழுதி, கல்லூரிக்கு நன்கொடையாக வைத்துக் கொள்ளுங்கள்'' - என்று அமைதியாகச் சொன்னார்.

''பணக்காரரைத்தான் விழாவுக்கு அழைக்க வேண்டும் என்று நினைத்திருந்தால், பொள்ளாச்சி மகாலிங்கத்தை அழைத்திருப்போம். நடிகர்தான் தேவை என்றால், சிவாஜியைக் கேட்டிருப்போம்.

அண்ணாவுடன் நெருங்கிய, அவரை நேசிக்கும் மனிதர் என்பதால் உங்களிடம் வந்தோம். விழாவுக்கு வரமுடியுமா? முடியாதா?'' - முரட்டுத்தனமாகக் கேட்டேன் நான்.

ஆழமாக ஒரு பார்வை பார்த்தார். ''ஓய்வு இல்லாத, என்னுடைய பணிகளை நீங்கள் நினைத்துப் பாருங்கள்'' என்றார் எம்.ஜி.ஆர். என்னைவிடக் கோபக்காரர், மாணவர் தலைவர் செல்வராசன்.

அவர், ''உங்களுக்கு ஆயிரம் பணிகள் இருக்கலாம். நீங்கள் இப்போது சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள். எனவே, பொது விழாக்களுக்கு வரவேண்டியது உங்கள் கடமை. முடியவில்லையா, உங்கள் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்யுங்கள்'' - என்று கடுமையாகச் சொல்லி விட்டார்.

சுற்றி இருந்தவர்கள் அதிர்ந்து போனார்கள். ஆனால்,



- எம்.ஜி.ஆருடன் ராமு.

எம்.ஜி.ஆர். என்ன செய்தார் தெரியுமா? சிரித்தார். ''தம்பி, நீங்க எல்லாரும் வக்கீல் வேலைக்குப் படிச்சா பின்னால பெரிய ஆளா வருவீங்க'' - என்றார்.

கிண்டலா? பாராட்டா? அப்போது எங்களுக்குப் புரியவில்லை.

கொஞ்ச நேரம் எங்களை பார்த்தபடி அமைதியாக இருந்தார்.

''சரி, கண்டிப்பாக உங்கள் விழாவுக்கு வருகிறேன். அடுத்த முறை சந்திக்கும்போது, நேரத்தையும் இடத்தையும் சொல்லி விடுங்கள். நானே வந்து விடுகிறேன்'' என்றார்.

மகிழ்ச்சியுடன் விடை பெற்றோம்.

விழாவுக்கு வரும் அவருக்கு, வித்தியாசமான பரிசு ஏதாவது தரவேண்டும். என்ன தருவது? விவாதித்தோம்.

இறுதியாக, அவர் விரல்களுக்கு மோதிரம் அணிவிக்கலாம் என்று முடிவு செய்தோம். மோதிரம் செய்வதற்கு, அளவு வேண்டுமே. அதை எப்படிப் பெறுவது? சிந்தித்தோம். நான் ஒரு உபாயம் சொன்னேன். நண்பர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

அழைப்பு கொடுக்கச் சென்றோம். அன்பாக பேசினார். அவருடைய விரல்களை கவனித்தோம். மோதிரம் இல்லை!

ஆனால், தங்கத்தாலான சிறிய வளையம் ஒன்றை அணிந்திருந்தார்.

அந்த விரல்களைப் பார்த்து, வளையத்தை நன்றாக கவனித்தேன். உடனே, கையை இழுத்துக் கொண்டார். "எங்கள் மீது நம்பிக்கை இல்லையா? தங்கத்தை எடுத்துக் கொள்வோம் என்று நினைக்கிறீர்களா?'' - என்று கேட்டேன்.

உடனே, புன்னகைத்த முகத்துடன், தங்க வளையத்தைக் கழற்றி என்னிடம் கொடுத்தார். பேசிக் கொண்டிருக்கும்போதே, அவருக்குத் தெரியாமல் அந்த வளையத்தை பேப்பரில் வைத்து, பேனாவால் அளவெடுத்துக் கொண்டேன். விடை பெறும்போது, வளையத்தை அவரிடம் கொடுத்து விட்டேன்.

படத் திறப்பு விழா. மிகப்பெரிய கூட்டம். நான் வரவேற்புரை பேசுகிறேன். ''அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள், நாங்கள் அணிவிக்கும் மோதிரத்தை என்றும் விரலில் அணிந்திருக்க வேண்டும். கழற்றி விடக்கூடாது'' என்று சொல்லி, அவர் விரலில் அணிவித்தேன். அந்த சம்பவத்தை, மகிழ்ச்சி மிக்க ஒரு நிகழ்ச்சியாகக் கருதினேனே தவிர, வேறு எதுவும் நினைக்கவில்லை.

ஆனால், பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஒருநாள் மின்னல் போல ஒரு எண்ணம் பளிச்சிட்டது. யார் கரத்தில் நான் மோதிரம் அணிவித்தேன்? வாழ்நாள் முழுக்க மற்றவர்களுக்கு வாரி வாரி வழங்கிய வள்ளலின் திருக்கரங்களுக்கு அல்லவா வளையம் அணிவித்திருக்கிறேன். மகிழ்ச்சிப் பெருக்கில் உடல் அதிர்ந்தது. உணர்ச்சிவசப்பட்ட என் கண்களில் குபுக்கெனப் படர்ந்தது, கண்ணீர் வெள்ளம்.

அண்ணாவின் படத்தைத் திறந்து வைத்து, சிறப்புரை ஆற்றுகிறார் எம்.ஜி.ஆர். மிகப் பெரிய கூட்டம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

அண்ணாவின் அரசியல் பணிகள் பற்றி பேசத் தொடங்கினார் எம்.ஜி.ஆர். அப்போது, கூட்டத்தில் இருந்த வேறு ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த மாணவர் ஒருவர், உரத்த குரலில் ''அரசியல் பேசாதீர்கள்'' - என்று எம்.ஜி. ஆரை நோக்கிச் சொன்னார்.

அடுத்து என்ன நடக்கும்? மாணவர்களுக்குள் கலவரம் மூண்டு விடுமோ என்று அஞ்சுகிறார்கள், ஆசிரியர் பெருமக்கள். பேசவேண்டாம் என்று தம்மைக் கேட்ட மாணவரை நோக்கி, அன்புடன் சிரித்தார் எம்.ஜி.ஆர். அடுத்து அவர் பேசியவை, பேச்சுக் கலையில் ஒரு புதிய பரிமாணம்!

அப்படி என்ன பேசினார்?

''பொதுவாக, நான் கல்லூரி மேடைகளில் அரசியல் பேசுவதில்லை.



புரொபசர் ராமு

முதல் காரணம் - நான் சொல்லித்தான் அரசியலைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் நீங்கள் இல்லை'' மாணவர்கள் கவனத்தோடு பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொடர்கிறார் எம்.ஜி.ஆர்.

''இரண்டாவது காரணம் - உங்களிடம் சொல்லித்தான் கட்சியை வளர்க்க வேண்டும் என்னும் பரிதாப நிலை எங்களுக்கு இல்லை'' - முத்தாய்ப்பு வைக்கிறார்.

கடல் அலைபோல கைதட்டல், விழா மண்டபத்தை அதிர வைக்கிறது. இதோடு பேச்சை முடித்திருந்தால், நிலைமையை லாவகமாகச் சமாளித்த நல்ல அரசியல்வாதியாகத் தான் அவர் காட்சி அளித்திருப்பார். ஆனால், அடுத்து பேசிய பேச்சுதான் அவரது இத்தனை தெளிவுக்கும் நாவன்மைக்கும் நிலைத்த ஒரு சான்று.

''இத்தனை விபரம் தெரிந்தும், நீ ஏன் அரசியல் பேசினாய் என்று அந்த மாணவர் நினைக்கக் கூடும். அறிஞர் அண்ணா படித்த கல்லூரியில், அவர் படத்தைத் திறந்து வைக்கிறேன். அவர் வாழ்வின் பல துறை வெற்றிகளைப் பற்றிப் பேசும் நான், அவர் அரசியல் வாழ்வு பற்றிப் பேசவில்லையென்றால், அழகான முகம் வரைந்து, கண்களை வரைய மறந்த அரைகுறை ஓவியன் போல் ஆகிவிடுவேன். அதனால் தான் பேசினேன். அப்படி நான் பேசுவது கூட, தமது உள்ளத்தைப் புண்படுத்துகிறது என்று அந்த மாணவர் நினைத்தால் நான் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். பேசவா, வேண்டாமா?'' என்று சொன்ன எம்.ஜி.ஆர். அந்த மாணவரைப் பார்த்தார். ''பேசுங்கள், பேசுங்கள்'' - உற்சாக முழக்கமிட்ட கூட்டத்தில், அந்த மாணவரின் குரலும் இணைந்திருந்தது!

அதற்குப் பிறகு, குணச்சித்திர நடிகர் அசோகன் அவர்களிடம் நெருங்கிப் பழகியதால், நான் நாள்தோறும் எம்.ஜி. ஆர். அவர்களைச் சந்திக்கவும், அவரைப் பல்வேறு கோணங்களில் புரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது. எம்.ஜி.ஆர். தோட்டம், சத்யா ஸ்டுடியோ நான் நாள்தோறும் செல்ல வேண்டிய தவிர்க்க முடியாத இடங்களாகி விட்டன. இந்தக் காலகட்டத்தில், எம்.ஜி.ஆர். அவர்களின் நிறைகளையும் குறைகளையும் நேரிலும், செவி வழியாக கேட்டும் உணரக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

எம்.ஜி.ஆர். யார்?

குறைபாடுகளே இல்லாத குணக்குன்றா? அல்லது

குறைகள் நிறைந்த சராசரி மனிதரா? இரண்டுமே உரிய கணிப்பு ஆகாது. அவரிடத்தில் எந்த மனிதரிடமும் காணமுடியாத உன்னத குணங்கள் இருந்தன. அதே நேரம், தனிமனிதர் குறைகளும் இருந்தன.

எம்.ஜி.ஆர். ஒரு குழப்பவாதி - அவரால் வாழ்வு பெற்ற சிலரே சொல்லக் கேட்டிருக்கிறேன். மாறுபட்ட நடவடிக்கைகளால் மற்றவர்களை அவர் குழப்புவார் - அவரால் சூடு பட்டவர்கள் எரிச்சலோடு பேசி இருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். எப்போதும் குழம்பியதில்லை. அவரைச் சுற்றி இருந்த பலபேர்தான், அவரை உணரமுடியால் குழம்பித்தவித்திருக்கிறார்கள். எம்.ஜி.ஆரின் ஒவ்வொரு செயலுக்கும் ஓரிரு காரணம் இருக்கும். அது எப்போதும், எல்லோருக்கும் புரியாது.

ஆனால், அவரை மிகச் சரியாக உணர்ந்த மிகச் சிலரில் நானும் ஒருவன்.

சான்று?

தனி வாழ்வு முதல், அரசியல் வாழ்வு வரை இப்படி முடிவு எடுப்பார் என்று நான் முன் கூட்டிக் கணித்துச் சொன்ன செய்திகள் யாவும் அப்படியே நடந்திருக்கின்றன.

நான் சொல்வது உண்மை என்பதை மறைந்த அசோகன், மாண்புமிகு ஆர்.எம்.வீரப்பன் போன்ற, எம்.ஜி.ஆரை நெருக்கமாக அறிந்தவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

எம்.ஜி.ஆர். நல்லவரா? கெட்டவரா? கேள்வி பயங்கரமானது. ஆனால், விளக்கம் எளிமையானது. பெரும்பாலான அரசியல் தலைவர்கள், கலைஞர்களுக்கு இருக்கக் கூடிய தனிமனித பலவீனங்கள் எம்.ஜி.ஆரிடமும் இருந்தன.

அதனால், 'அவர் ஒரு வேடதாரி' என்று நான் கடுமையாகப் பேசிய காலமும் உண்டு.

ஆனால், காலம் எனக்கு உண்மையை உணர்த்தியது. சராசரி மனிதர்களுக்குரிய பொதுவான பலவீனங்களை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், தமிழக வரலாற்றில் எம்.ஜி.ஆருக்கு நிகரான மனிதர் எவரும் இல்லை!

இருநூறு ஆண்டுகள் வாழ்ந்தால் கூட, மனிதர்கள் பெறமுடியாத முதிர்ச்சியை, எழுபது ஆண்டுகளுக்குள் பெற்ற ஞானி அவர்.

தாய் மார்பில் இயல்பாகச் சுரக்கும் பால்போல, கருணை உணர்வும் வாரி வழங்கும் வள்ளல் தன்மையும் அவர் இதயத்தின் கனிந்த வெளிப்பாடு. கலை உலகிலும், அரசியல் உலகிலும் எம்.ஜி.ஆருக்கு முன்பும் பின்பும் புகழ் பெற்ற பல மனிதர்கள் இருந்திருக்கிறார்கள்.

ஆனால், மக்கள் மத்தியில் இவர் பெற்ற மதிப்பு வேறு எவரும் பெற்றதில்லை. என்ன காரணம்?

எம்.ஜி.ஆருக்கு அது தெரிந்திருந்தது. எந்த சுயநல நோக்கமும் இல்லாமல் அவரை நேசிக்கும் எளிய மக்களுக்குப் புரிந்திருக்கிறது.

நமக்குப் புரியவில்லை ஏன்? நாம் அறிவு ஜீவிகள். இதயத்தை, அறிவால் உணர முயலும் அற்புதப் பிறவிகள். அறிவு என்னும் அறியாமையை அகற்றி, உளமார யோசித்து அவரை உணர முயன்றால், நாமும் அவரைப் புரிந்து கொள்ள முடியும். புரிந்து கொண்டால், அந்தப் 'பாரத ரத்னா'வின் ஒளிச்சுடர், நமது இதயங்களின் இருளைத் துரத்தும்.

அந்த உண்மையை நேசிப்போம். அதனால், நாம் வெளிச்சம் பெறுவோம். வரலாற்றில் நிலைத்து விட்ட அந்த வனப்புச் சந்திரனை அன்புடன் போற்றுவோம். அதனால், நமது இதய மலர்கள் இனிமையோடு மலரும்.

வாழ்க எம்.ஜி.ஆர்!

வளர்க அவர்தம் நிலைத்த புகழ்!

(16.8.95-ல் மறைந்த 'புரொபசர் ராமு' அவர்கள் எம்.ஜி.ஆரைப் பற்றி எழுதிய கடைசி கட்டுரை - அதை அவரது நினைவஞ்சலியாக வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.)

---

சென்னையில் இருந்து திருப்பதிக்கு ஜெ.ஜெ. பஸ் விடப்பட்டுள்ளது. சூப்பர் டீலக்ஸ் வசதி கொண்ட இந்த பஸ்சில் வீடியோ வசதியும் உள்ளது.

இந்த பஸ்சில் பயணிகள் திருப்பதிக்கு சென்றார்கள். மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். நடித்த 'வேட்டைக்காரன்' படம் வீடியோவில் ஒளிபரப்பப்பட்டது.

சென்னையில் இருந்து புறப்பட்ட பஸ் 2.45 மணி நேரத்தில் திருப்பதி போய் சேர்ந்தது. பஸ் திருப்பதி சென்றடைந்த பின்னரும் பயணிகள் பஸ்சைவிட்டு இறங்கவில்லை. காரணம் 'வேட்டைக்காரன்' படத்தில் லயித்திருந்த பயணிகள் இறங்க மனமில்லாமல் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

பயணிகள் இறங்காமல் இருப்பதை பார்த்த பஸ் கண்டக்டர் படத்தை ஆப் செய்து விட்டு பயணிகளை பார்த்து ''உங்களுக்கு மேல் திருப்பதி செல்ல பஸ் தயாராக இருக்கிறது. இறங்குங்கள்'' என்று கூறினார்.

ஆனால் பயணிகளோ ''நாங்கள் மேல் திருப்பதிக்கு அப்புறம் போகிறோம். முதலில் படத்தைப் போடு'' என்று கூறினார்கள். இதனால் வேறு வழியில்லாமல் கண்டக்டர் மீண்டும் வீடியோவை ஆன் செய்தார். படம் முழுவதும் பார்த்து விட்ட பிறகுதான் பஸ்சைவிட்டு இறங்கி சென்றார்கள்.

16.10.94.

நன்றி-'தினபூமி'

# எம்.ஜி.ஆரின் உயிர்காக்க உதவிய மருந்து

ஏ.கே.சதீஷ்,
சிங்கப்பூர் டிராவல்ஸ்,
சென்னை



1961 ம் ஆண்டு. 'திருடாதே' படத்தின் 100-வது நாள் வெற்றி விழா நெல்லை பார்வதி தியேட்டரில் நடைபெற்றது. விழா முடிவில் பாளையங்கோட்டை தெற்கு பஜார் எம்.ஜி.ஆர். மன்றத்தில் புரட்சி நடிகருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. நான் எம்.ஜி.ஆர். மன்றத்தின் செயலாளர் என்ற முறையில் வரவேற்புரை வாசித்தேன். தலைவர் பொன்னு வாத்தியாரும், மற்ற உறுப்பினர்களும் வேஷ்டியில் இருக்க, நான் மட்டும் அரை டிராயரில்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு நான் மாலை போட்டதும், என்னை கட்டிப் பிடித்துக் கொண்டு 'எந்த பள்ளியில் படிக்கிறாய்?' என்று ஆர்வத்துடன் கேட்டார்.



அவர் என்னைக் கட்டிப் பிடித்த அந்த கணத்தில் என் உயிரையே அவரிடம் பறிகொடுத்தேன். அடுத்த நாள் நான் படித்த தூய சவேரியார் கல்லூரி பள்ளி முழுவதும் பரபரப்பாக பேசப்பட்டு பெரிய ஹீரோ ஆனேன்.

பின்னாளில் அப்பல்லோவில் எம்.ஜி.ஆர். உயிருக்கு போராடிய நேரத்தில், அவருக்கு தேவைப் பட்ட உயிர் காக்கும் மருந்தை வெளிநாட்டிலிருந்து எனது குடும்ப நண்பரும், எம்.ஜி.ஆர். மீது பாசம் நிறைந்தவர்களுமான திரு. எம்.எஸ்.மணியம், திரு. ராமலிங்கம் அவர்கள் மூலம் ஒரே

நாளில் (மருந்தை) தருவித்து, எம்.ஜி.ஆரது உயிர் காக்க உதவிய நிகழ்ச்சி இன்று நினைத்தாலும் புல்லரிக்கிறது. அவர் உயிர் பிழைத்து வந்ததும், மறு வருடம் அவரோடு ஜப்பான் நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பரிவும் என் இதயத்தில் இதமான அனுபவமாக அமைந்தது.

தமிழக அரசின் 'பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்திற்கு' கப்பல் வாங்குவதற்காக தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். தலைமையில் 14 பேர் அடங்கிய குழு ஜப்பான் சென்றது. நான் பூஜை பொருட்களை வாங்கிக் கொண்டு சிங்கப்பூர் வழியாக ஜப்பான் சென்றேன்.

ஜப்பானில் ஹிடாச்சி கப்பல் கம்பெனியிடம் வாங்கப்பட்ட கப்பல்களுக்கு தமிழ்ப் பெரியார், தமிழ் அண்ணா என்று பெயரிடப்பட்டன. அந்த விழாவில் நானும் கலந்து கொண்டேன்.

எம்.ஜி.ஆர். உட்பட நாங்களெல்லாம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலுள்ள நியூ ஓட்டானி ஹோட்டலில் தங்கியிருந்தோம். ஒரு நாள் மாலையில் கப்பல் வாங்கியமைக்காக நடத்தப்பட்ட விருந்தில் கலந்து கொள்வதற்காக புறப்பட்ட எம்.ஜி.ஆர். தமிழகத்திலிருந்து வந்த குழுவினரோடு நின்று வரிசையாக புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தார். நான் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தேன். என்னைக் கவனித்த எம்.ஜி.ஆர். தன் அருகே அழைத்தார். ஏதோ யோசனை செய்தவர். 'கொஞ்சம் இரு' என்று தன் அறைக்குள் போனார். அதுவரை வேஷ்டி, சட்டையிலிருந்தவர், மீண்டும் அறையிலிருந்து வெளிப்பட்ட போது கோட்டும், சூட்டும் அணிந்து வந்தார். அந்த அழகில், எனது கண்கள் கொஞ்சம் பிரமித்தன என்றே சொல்ல வேண்டும்.

என்னருகில் வந்த எம்.ஜி.



ஆர். வரதராஜன் எம்.பி.யிடம் எங்களை படமெடுக்கச் சொன்னார். அவர் தயாரானபோது அவரை கொஞ்சம் தாமதிக்கச் சொல்லி, எங்கள் பின்புறம் பூந்தொட்டியொன்றைக் கொண்டு வந்து வைக்கச் சொன்னார், அழகிய பின்னணிக்காக. இவ்வளவும் பார்த்து புகைப்படமெடுத்த பின், எனது கேமராவை தனது உதவியாளர் மாணிக்கத்திடம் கொடுத்து இன்னொரு படமெடுக்கச் செய்தார். அந்த உடையில் அவர் என்னோடு மட்டுமே புகைப்படமெடுத்துக் கொண்டது என் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு என்று நினைத்து பூரிப்படைந்தேன்.

ஜப்பானில் 'எக்ஸ்போ 70 கண்காட்சி' நடந்த அதே ஓசாகா நகரில் 'எக்ஸ்போ 85' கண்காட்சியும் அப்போது நடந்து கொண்டிருந்தது. அதற்கும் எங்களை அழைத்துச் சென்றார். ஒவ்வொரு நாட்டின் அரங்கையும் சளைக்காமல் ஆர்வத்துடன் பார்த்தார். எங்களையும் பார்க்கத் தூண்டினார்.

ஓசாகாவிலிருந்து புல்லட் டிரெயினில் டோக்கியோ திரும்பிக் கொண்டிருந்தோம். வழியில் நயாகா என்ற நிலையத்தில் ரயில் நின்றது. அங்கு அதிகபட்சமாக ஒரு நிமிடம் நிற்கும் என்ற அறிவிப்பைக் கேட்ட எம்.ஜி.ஆர்., எதிரே பிளாட்பாரக் கடையில் மணிலாக் கொட்டை பாலிதீன் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு என்னை அழைத்து வாங்கி வரச் சொன்னார். நான் வேகமாக ஓடிச் சென்று இரண்டு பாக்கெட்டுகள் வாங்கி வந்தேன். அதைப் பார்த்த எம்.ஜி.ஆர். போதாதென்று கடையிலிருந்த அத்தனை பாக்கெட்டுகளையும் வாங்கி வரச் சொன்னார். நானும் ரயில் புறப்படுவதற்குள் வாங்கிவர வேண்டும் என்ற பதற்றத்துடன் சென்று எல்லா பாக்கெட்டுகளையும் அள்ளிக் கொண்டு வந்து கொடுத்தேன். எம்.ஜி.ஆர். மணிலாக் கொட்டையை தன் கைக்குட்டையை விரித்து அதில் கொட்டி அதை ரயிலில் இருந்த தன் குழுவினர் அத்தனை பேர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணச் செய்தார். எந்த நாட்டில் இருந்தாலும் எம்.ஜி. ஆரது பகிர்ந்துண்ணும் பண்பைக் கண்டு வியந்து போனேன்.

இந்தியா திரும்பிய பின் எம்.ஜி.ஆருடன் நான் இருக்கும் புகைப்படமொன்றின் பிரதி எடுத்துச் சென்று அவரிடம் காண்பித்தேன். கோட்டும் சூட்டும் அணிந்து தான் இளமையாய், அழகாய் இருப்பது கண்டு எம்.ஜி.ஆர். கண் கலங்கி விட்டார். எம்.ஜி.ஆரை எத்தனையோ முறை சந்தித்திருக்கிறேன் என்றாலும் இந்த ஒரு சில சந்திப்புகளை என் வாழ்நாளில் மறக்க முடியாது.

# நான் தமிழன் தான்



"மக்கள் உள்ளும் புறமும் தூய்மையுடன் துலங்க வேண்டும். புறத்தே நல்லவனாகவும் உள்ளத்தே வஞ்சக னாகவும் இருப்பது தகாது.

"சிறு வயதில் நான் பட்ட துன்பங்களை அனுப வித்த கஷ்டங்களை நான் மறக்க வில்லை. நான் தமிழகத்திற்கு வந்த போது குடியிருக்க எனக்கு குடிசை கூடக் கிடைக்கவில்லை"

"இதனால் தான் பிறரின் கஷ்ட நஷ்டங்களை, என்னால் நன்கு உணர முடிகிறது. இதனால் தான் இயன்ற வரை, உதவி வருகிறேன். நான் இன்று மக்களின் அன்புக்கு இலக்காகி இருப்பதும், முன்னேற்றம் கண்டி ருப்பதும் என்னை ஈன்றெடுத்து ஆளாக்கிவிட்ட அருமை அன்னையைச் சேரும்."

"என் தாய்க்கு எழுதப் படிக்கத் தெரியாது என்றாலும், ஸ்லோகங்கள், பிரார்த்தனை கீதங்கள் இவற்றில் யாராவது தவறு செய்தால், உடனே 'அது தவறு, இது தான் சரி' என்று சுட்டிக் காட்டும் அளவிற்கு அவைகளில் தேர்ச்சி படைத்தவர். ஏதோ எனக்கு சில நற்பழக்கங்கள் இருப்பது என் தாயால் தான். என் இறந்து போன தாயின் அன்பை, இங்கே வீற்றிருக்கும் ஒவ்வொ ருவருடைய உள்ளத்திலும் காண்கிறேன்" எனக் கூறிய பொழுது அவரது நா தழுதழுத்தது.

"மன்னத் பத்மநாபன் கேரளத்தின் பிரபல அரசியல் தலைவர்களில் ஒருவர். அவர் இறந்ததைக் கேள்விப் பட்டதும், அவருக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, கேரளாவிற்குச் சென்று மரியாதை செலுத்தி வந்தேன். அடுத்த நாள் ஒரு பத்திரிகை, 'மலையாளியான எம்.ஜி.ஆர்.' மலையாளியான மன்னத் பத்மநாபன் இறுதியாத்திரையில் கலந்து கொண்டார்' என்று செய்தி பிரசுரித்திருந்தது. இதனைப் படித்ததும் என் உள்ளம் மிக மிக வேதனை அடைந்தது. எங்கிருந் தாலும் என்னை வளர்த்து, புகழுடன் அன்புடன் இருக் கும்படி செய்தது தமிழகம், தமிழ் மக்கள், ஆகையால் நான் தமிழன் தான் என்று என் மனம் பறைசாற்றிக் கொண்டே இருக்கும். இன்று என் மனம் மிக மிக மகிழ்ச்சியுற்றது. இன்பக் கடலில் நீந்துகிறேன். ஏன் தெரியுமா? சங்கத் தலைவர் வரவேற்புரையில் 'தமிழ் நடிகர் எம்.ஜி.ஆர்.' என்று வாய் நிறைய வாழ்த்தினார். தமிழ்ச் சங்கம் தமிழன் என்று என்னை ஏற்று கொண்டு விட்டது. என் கவலை எல்லாம், வருத்தமெல்லாம் பறந்து விட்டது".

"நான் மருத்துவமனையில் கால் ஒடிந்து படுத்து இருந்த பொழுது, என்னைக் காண இருவர் வந்தனர். என் கால்களைத் தொட்டுப் பார்த்து — மிக வருந்தி, 'ஐயா நலமா?' என்றார்கள். என் கையில் மாம்பழத்தை யும் கொடுத்தார்கள். அவர்கள் கண் பார்வை அற்றவர் கள். 'எதற்காக இவ்வளவு சிரமப்பட்டு என்னைப் பார்க்க வேண்டும்?' என்று நான் கேட்ட பொழுது, 'உங்களை பார்த்து விட்டு போக வேண்டும் என்ற ஆர்வம் தான்!' என்றார்கள். அவர்களின் அன்பு என்னை நெகிழ வைத்து விட்டது. அதே போல் இங்கும் எனக்கு மாலை அணிவித்த தம்பி ஒருவனுக்கும் இரு கால்களும் முடம். இவர்கள் செலுத்தும் அன்பிற்கு நான் தகுதியா என்று தான் கேட்கத் தோன்றுகிறது?"

(1970-ல் பம்பாய் தமிழ்ச் சங்கம் அளித்த வரவேற் பின் போது எம்.ஜி.ஆர் பேசியது)

# 100 நாட்களை கடந்த எம்.ஜி.ஆர் படங்கள்



1. சதிலீலாவதி
2. இரு சகோதரர்கள்
3. தட்சயக்ஞம்
4. மாயமச்சீந்திரா
5. பிரகலாதா
6. அசோக்குமார்
7. அரிச்சந்திரா
8. சாலிவாகனன்
9. மீரா
10. ஸ்ரீ முருகன்
11. ராஜகுமாரி
12. பைத்தியக்காரன்
13. அபிமன்யூ
14. மோகினி
15. மருதநாட்டு இளவரசி
16. மந்திரிகுமாரி
17. மர்மயோகி
18. சர்வாதிகாரி
19. அந்தமான் கைதி
20. என் தங்கை
21. ஜெனோவா
22. மலைக்கள்ளன்
23. அலிபாபாவும் 40 திருடர்களும்
24. குலேபகாவலி
25. மதுரை வீரன்
(தமிழ்நாட்டில் 35 திரையரங்கில் 100 நாள். இலங்கை, பெங்களூரில் 100 நாள் ஓடியது. சென்னையில் நான்கு தியேட்டர்களில் முதல் முறையாக 100 நாள்)
26. தாய்க்குப்பின் தாரம்
27. சக்கரவர்த்தி திருமகள்
28. புதுமைப்பித்தன்
29. மகாதேவி
30. நாடோடி மன்னன்
31. பாக்தாத் திருடன்
(மதுரையில் மட்டும் 100 நாள்)
32. திருடாதே
33. தாய் சொல்லைத் தட்டாதே
34. தாயைக்காத்த தனயன்
35. குடும்பத் தலைவன்
36. தர்மம் தலைகாக்கும்
(கோவை ராயல் மட்டும்)
37. பரிசு (சேலம் மட்டும்)
38. நீதிக்குப் பின் பாசம் (சேலம் மட்டும்)
39. பெரிய இடத்துப் பெண்
40. வேட்டைக்காரன்
41. பணக்கார குடும்பம்
42. தெய்வத்தாய்
43. படகோட்டி
44. எங்க வீட்டுப்பிள்ளை
45. ஆயிரத்தில் ஒருவன்
46. அன்பே வா
47. முகராசி (சென்னை கெயிட்டி மட்டும்)
48. பெற்றால்தான் பிள்ளையா?
49. காவல்காரன்
50. ரகசிய போலீஸ்-115
51. குடியிருந்த கோயில்
52. ஒளிவிளக்கு
53. அடிமைப்பெண்
54. நம்நாடு
55. மாட்டுக்கார வேலன்
56. என் அண்ணன்
57. எங்கள் தங்கம்
58. குமரிக்கோட்டம்
59. ரிக்‌ஷாக்காரன்

60. நீரும் நெருப்பும் (இலங்கை யாழ் ராணி)
61. நல்ல நேரம்
62. இதயவீணை
63. உலகம் சுற்றும் வாலிபன்
64. ராமன் தேடிய சீதை (இலங்கையில் மட்டும்)
65. நேற்று இன்று நாளை
66. உரிமைக்குரல்
67. இதயக்கனி
68. பல்லாண்டு வாழ்க
69. சிரித்து வாழ வேண்டும்
70. நீதிக்குத் தலை வணங்கு
71. நினைத்ததை முடிப்பவன்
72. நாளை நமதே
(இலங்கை-கொழும்பு- சமந்தா)
73. உழைக்கும் கரங்கள் (இலங்கை மட்டும்)
74. ஊருக்கு உழைப்பவன்
(இலங்கை- கொழும்பு செல்லமஹால், யாழ் மனோகரா மட்டும்)
75. இன்று போல் என்றும் வாழ்க
76. மீனவ நண்பன்

**தொகுப்பு: கலைவேந்தன் எம்.ஜி.ஆர். பக்தர்கள், முப்பிறவி எம்.ஜி.ஆர் பக்தர்கள், சென்னை.**

## எம்.ஜி.ஆர். நடித்த படங்களில் வெள்ளி விழா கண்டவை

1. தட்சயக்ஞம்
(இதுவே தமிழின் முதல் வெள்ளி விழா படம்)
2. அசோக்குமார்
3. மதுரை வீரன்
4. நாடோடி மன்னன்
5. எங்க வீட்டு பிள்ளை
(கலையுலகில் நடிக்கும் வரை அதிக திரையரங்கில் (7) வெள்ளி விழா ஓடிய ஒரே படம்)
6. ஒளி விளக்கு
( இலங்கையில் மட்டும்)
7. அடிமைப்பெண்
8. மாட்டுக்கார வேலன்
9. உலகம் சுற்றும் வாலிபன்
10. உரிமைக்குரல்
11. நாளை நமதே
(இலங்கையில் மட்டும்)



படிக்கிறவங்க புத்திசாலியாகலாம்- எல்லோரும் அறிவாளி ஆக முடியாது. அனுபவந்தான் அத தர முடியும்.

-நாடோடி





# சிரித்து சிரித்து சிறையிலிட்ட மன்னவன்!

'எங்கவீட்டுப்பிள்ளை' தொடக்க விழாவில் எம்.ஜி.ஆருடன், வாகினி அதிபர் பி.நாகிரெட்டி.



'நான் ஏன் பிறந்தேன்' படப்பிடிப்'பில் கே.ஆர். விஜயாவின் கணவர் வேலா யுதன் நாயர்.



எங்கள் தங்கம்



நினைத்ததை முடிப்பவன்



'தெய்வத்தாய்' ஆரம்பவிழாவில் ஏ.வி.மெய்யப்ப செட்டியார், நீதிபதி ராஜமன்னார், எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி.



அண்ணா உரை
கேட்டு மகிழும்
எம்.ஜி.ஆர்.,
பின்புறம்
ஆர்.எம்.வீரப்பன்

காவல்காரன்





'அன்னமிட்ட கை'



அண்ணா, நெடுஞ்செழியன்,
கே.ஆர்.ராமசாமி, எம்.ஜி.ஆர்.,



நடிகர் சங்க விழாவில்
டி.என்.சிவதாணு,
டி.வி. நாராயணசாமி,
தங்கவேலு, எம்.ஜி.ஆர்.,
பார்த்திபன் (வீரபாண்டிய
கட்டபொம்மன் படத்தில்
ஜாக்சன் துரையாக நடித்தவர்)



'நீதிக்குப்பின் பாசம்' படத்தில் எம்.ஆர்.ராதாவுடன்



'இதயக்கனி' தொடக்க நாளில் திருச்சி
சௌந்தர்ராஜன், சித்ரா கிருஷ்ணசாமி,
எம்.ஜி.ஆர்.,



இயக்குநர் ஸ்ரீதருடன்



பாரதியுடன் எம்.ஜி.ஆர்., 'அன்னமிட்டகை' படத்தில்



தனிப்பிறவி.




உலகப் புகழ் பெற்ற 'ஆக்ஸ்ஃபோர்டு யுனிவர்சிட்டி பிரஸ்' பிரிட்டிஷ் ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டுடன் இணைந்து வெளியிட்டுள்ள 'இந்திய சினிமாவின் கலைக்களஞ்சியம் **(ENCYCLOPAEDIA OF INDIAN CINEMA)** என்ற நூலின் அட்டை முகப்பில் சத்யஜித்ரே, நர்கீஸ், அமிதாப்பச்சன், தேவ் ஆனந்த், ஷபனா ஆஸ்மி ஆகியோரோடு தென்னகக் கலைஞர்களில் எம்.ஜி.ஆரது படம் மட்டுமே பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதன் விலை ஆயிரம் ரூபாய்.

# கலை உலகில் நான் கடந்து வந்த பாதை!



**எம்.ஜி.ஆர்.**

நடிப்பு தொழில்தான் நான் கற்றுக் கொண்ட முதல் தொழில். கலையின் மேல் கொண்ட ஆர்வத்தினால் மட்டும் ஏற்றுக் கொண்ட தொழில் என்று சொன்னால் அது உண்மைக்கு புறம்பாகி மாறுபட்டதாகி விடும். நடிக்க வேண்டும். நடிகனாக வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டதும் உண்மையிலும் உண்மை.

ஆனால் வயிற்றுக்கு சோறு தேவை. ஏறத்தாழ 7 வயது அளவில் எனக்கு இருந்த ஒரே நிலை என்னை நாடக கம்பெனிக்கு உந்தி தள்ளியது. அதற்கு ஒரே சக்தி வாய்ந்த ஆயுதம் வயிற்றுக்கு சோறு வேண்டும் என்பதுதான்.

என்னை பெற்றவரும் என்னை வளர்த்தவரும் எனக்காக வெளியே கடன் கேட்கக் கூடாது. கடன் கேட்பது என்பது கவுரமாக சொல்லக் கூடிய வார்த்தை. ஆனால் அதை திருப்பி கொடுக்க முடிந்தால் அல்லவா அதற்கு பெயர் கடன். அந்த பெயரும் பொருத்தமாகும். திருப்பி கொடுக்க முடியாது என்பதை தெரிந்தேதான்

கேட்டு வாங்க வேண்டியதிருந்தது. உண்மையை சொல்லப்போனால் பிச்சை போடுங்கள் என்ற வார்த்தையை பயன்படுத்தலாம். பிச்சை கேட்கும் முறை அது. அப்படிப்பட்ட முறையில் தான் நடிகனாக வேலை செய்ய அந்த தொழிலை ஏற்றேன்.

தொழிலை நான் ஏற்றுக் கொண்டேனா அல்லது தொழில் என்னை ஏற்றுக் கொண்டதா என்பதுதான் அடிப்படை கேள்வி.

**ஏற்றுக் கொண்டதா?**

என்னை பொறுத்தவரையில் 7 வயதில் நான் நடிப்புத் தொழிலில் ஈடுபட்ட பிறகு இன்று வரை இந்த தொழில் என்னை ஏற்றுக் கொண்டு விட்டதா என்பதற்கு உத்தரவாதம் எனக்கு இதுவரை கிடைத்ததாக நம்பமுடியவில்லை. தொழிலை ஒரு மனிதன் ஏற்றுக் கொள்வது வேறு. அந்த மனிதனை தொழில் ஏற்றுக் கொள்வது வேறு. இப்படிப்பட்ட என் தொழில் நிலைமையில் ஈடுபட்ட தொழிலில் இந்த சூழ்நிலையில்தான் நான் இத்தனை ஆண்டுகள் பலபடிகளை மைல் கற்களை கடந்து வந்திருக்கிறேன்.



**'சாயா' படத்தில் எம்.ஜி.ஆரும், டி.வி.குமுதினியும்**

ஒரு படத்தை ஒரு மைல் கல் என்று வைத்துக் கொண்டாலும் சரி, அல்லது சினிமா தொழிலில் நான் ஈடுபட்ட ஒவ்வொரு ஆண்டையும் ஒவ்வொரு மைல் கல்லாக வைத்துக் கொண்டாலும் சரி, அது எத்தனை மைல்கல் என்று அதிகமாகவோ குறைவாகவோ கணக்கிடப்பட்டாலும் சரி, என்னை பொறுத்தவரையில் இந்த தொழிலில் நான் மனநிறைவோடு குறிப்பிடத் தக்க ஒரு மைல் கல்லை கடந்து வந்தேன் என்று சொல்ல முடியவில்லை என்பதைத் தான் வேதனையுடன் குறிப்பிட வேண்டியதிருக்கிறது.

**என்றும் பதினாறு!**

மார்கண்டேயனுக்கு என்றும் பதினாறு என்று சொல்லப்படுகிறது. எத்தனை ஆண்டுகளுக்கு முன் அப்படி சொன்னார்களோ அதை கணக்கிட முடியாது.



**'அசோக்குமார்' படத்தில் தியாகராஜ பாகவதருடன்**

அத்தனை ஆண்டுகள் கழித்தும் மார்க்கண்டேயனுக்கு பதினாறு வயது என்றுதான் சொல்லப்படுகிறது.

சிலர் சில ஆண்டு வாழ்ந்து முடியும்போதே பிறரால் எத்தனை ஆண்டு வாழ்ந்துவிட்டான், இந்த பூமியில் என்று சொல்லப்படுகிற கேலிக்குரிய பேச்சையும், நாமும் கேட்கிறோம்.

நான் கடந்து வந்த பாதையில் நான் நடித்து முடித்துவிட்டதாக சொல்லப்படுகின்ற 100 படங்களை எண்ணி பார்க்கும்போது இத்தனை நாளில் இத்தனை படங்களை முடித்து விட்டானே (பாவி) என்று சொல்லுகின்ற - சொல்லப்படுகின்ற நிலை கூட இருக்குமோ என்னவோ!

**புரையோடிப்போன!**

ஆனால் நான் முடித்த படங்களைவிட முடிக்காமல் விடப்பட்டு விட்ட படங்களில் நான் பங்கு கொண்ட நேரத்தில், முடிவாக பங்கு பெறமுடியாத நேரத்தில் ஒரு சில மணிநேரமே ஆனாலும், அந்த காலம் நான் 100 ஆண்டு கடந்து வந்திருந்தால்கூட அதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு அந்த சிலமணி நேரம் என் வாழ்க்கையில், நான் நடந்து வந்த பாதையில் வேதனையையும் துன்பத்தையும் தலைக்குனிவையும் ஏற்படுத்திவிட்ட மிக மோசமான பாதையாக இருந்தது என்பதை மட்டும் நான் நல்லுணர்வில் தெளிவாக சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

உள்ளத்திலிருந்து அகற்ற முடியாத புரையோடிப் போன ஒரு புண்ணாக இருக்கும் அந்த நிகழ்ச்சியை நான் சொல்வது என் உள்ளத்திற்கு பெருத்த ஆறுதலையும் சிறிதளவாவது மன நிம்மதியையும் தரும் என்று கருதி இங்கே சொல்ல முனைகிறேன்.

முதல் முதலாக ஒரு முழுபடத்தில் நல்லதொரு

கம்பெனியில் அதாவது சிறந்த - சீராக - ஒழுங்கான வசதிகள் கூடிய படம் எடுக்கும் கம்பெனியில் தகுதி வளர்ந்த ஒரு இயக்குனரின் கீழ் கதாநாயகனாக நடிக்கும் பெருத்த வாய்ப்பு எனக்கு கிடைத்தது. எப்படிப்பட்ட நேரத்தில் அந்த வாய்ப்பு கிடைத்தது தெரியுமா?

**ஜப்பான் படையெடுப்பு!**

அதுவரையில் எனக்கு ஆதரவாக இருந்த மிகச் சிறந்த ஒரு இயக்குநர் என் மீது தவறான கருத்தைக் கொண்டு வேறுபடக்கூடிய சூழ்நிலை உருவாகி விட்டது. அந்த நேரத்தில் ஜப்பான் படையெடுப்பு நடந்து கொண்டிருந்தது. எனக்கு இருந்த ஒரே ஆதரவான இயக்குனரும் என்னை வெறுத்துவிட்டதாலும், வேறு எந்த இயக்குனரிடமோ அல்லது பட முதலாளியிடமோ சென்று வேலை கேட்டு வாங்க தெரியாததாலும் (அப்படி பழக்கமே இல்லையே), சினிமாவில் எனக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்று விட்டதாலும், அந்த நேரத்தில் எளிதாக கிடைக்கக்கூடிய எனக்கு இருந்த ஒரே வழி - நிச்சயம் கிடைக்கும் என்று நான் நம்பிய ஒரே வேலை, பட்டாளத்தில் ராணுவ வீரனாக சேருவதே.

அதற்கு ஏற்றாற்போல் விளம்பரமும் வெளியிடப்பட்டிருந்தது. ரூ.125 சம்பளம் என்றும், 5 பேர்களுக்கு தலைவனாக பணியாற்றும் ஜமேதார் பதவி என்றும், குதிரை ஏற்றம் தெரிந்து இருக்க வேண்டும் என்றும்,





'மாயா மச்சீந்திரா' படத்தில் எம்.கே.ராதா, ராதாபாய் ஆகியோருடன் வாளை ஓங்கியபடி இருப்பவர் எம்.ஜி.ஆர். இதில் அவர் வில்லனாக நடித்திருக்கிறார்.

# திக்குவாய்

திக்குவாய்

திக்குவாய்

திக்குவாய்

- திக்கிப் பேசுவது பிறவி நோய் இல்லை.
- அது ஒரு நோயே இல்லை.
- அது பழக்கத்தால் வருவது தான்.
- பய உணர்வால் வருவது.
- அதை முழுமையாக நீக்க இயலும்.

ஆறு நாட்களில்
நவீன செயற் சிகிச்சை மூலம்
பூரண குணம் பெற
அணுகவும் :

இந்திய திக்குவாய் நீக்கு நிறுவனம்,
த.பெ.எண். 3607,
3/499, நால்வர் நகர், வடமதுரை,
கோவை - 641 017.
போன் : (0422) 422909


ஆங்கிலத்தில் பேச மட்டும் தெரிந்து இருந்தால் போதும் வேறு எந்தவித அத்தாட்சி பத்திரமும் தேவை இல்லை என்றும், உயரம் எடை முதலியவற்றை குறிப்பிட்டும் அந்த விளம்பரத்தில் தெளிவாக போடப்பட்டிருந்தது.

ஓரளவு எனக்கு குதிரை ஏற்றம் தெரியும். உடலை பருமனாக்கிக் கொள்வதற்கு தேகப் பயிற்சியை தொடர்ந் தேன்.

வீட்டிலே என் தாய்க்கோ தமையனுக்கோ தெரிந் தால் பட்டாளத்தில் சேர அனுமதிக்க மாட்டார்கள் என்ற காரணத்தால் அவர்களிடம் பெரிய பொய்யை சொன் னேன்.

### ஆங்கிலம் படிக்க

ஆங்கிலம் தெரிந்தாலன்று இனிமேல் சினிமா உலகில் மதிப்பு இருக்காது. வேடம் கிடைக்காது என்று சொல்லி நம்ப வைத்து ஆங்கிலம் கற்றுத்தர ஒரு ஆசிரியரையும் ஒப்பந்தம் செய்து கொண்டேன். ஒப்பந் தம் எப்படி என்றாலும் 3 மாதத்திற்குள் என்னை ஆங்கிலம் பேச வைத்து விடவேண்டும் என்பதே.

அதே நேரத்தில் தாய்க்கும் அண்ணன் மற்றும் நெருங்கிய நண்பர்களுக்கும் நம்பிக்கை ஏற்படுத்துவதற் காக சங்கீத வித்வான் ஒருவரையும் ஏற்பாடு செய்து கொண்டேன்.

அதிகாலை 4 மணிக்கு எழுந்து கத்த வேண்டியது. தொண்டை புண்ணாகி விடும். அதற்காக என்மீது அக்கறை கொண்ட என் தாய் வெண்ணை, சூப் போன்ற சத்துள்ள ஆகாரமாக கொடுப்பார்கள். அதை சாப்பிட வேண்டியது. தேகப் பயிற்சி செய்வது என்று இரண்டு மாதங்கள் கழிந்தது. என் உடலும் பெருத்தது.

அசோக்குமார் படத்தில் என் சம்பந்தப்பட்ட காட்சி களும் படமாக்கப்பட்டு முடிந்தது. இன்னும் இரண்டு மாதத்தில் ராணுவ வீரனாக ஆக விண்ணப்பம் அனுப்பும் நாளையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆங்கில வார்த்தைகளையும் ஓரளவுக்கு பேசி கற்றுக் கொண்டேன்.

### அழைப்பு வந்தது!

ராணுவ அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த எனக்கு திடீர் என்று வேறு ஓர் இடத்திலிருந்து ஒரு அழைப்பு வந்தது. போனேன் நல்ல சிறந்த பட முதலாளி என்று குறிப்பிட்டேனே அவர் முன்னிலையில் நிறுத்தப் பட்டேன்.

நிறுத்தப்பட்டவுடன் அவர் என்னை அங்கு உட் கார்ந்து இருந்த திறமை வாய்ந்த டைரக்டரை (இயக்கு னர்) நந்தலால் ஜெஸ்வந்தலாலிடம் (அவரை. நந்தலால் என்றுதான் எல்லோரும் அழைப்பது வழக்கம்) அறிமு கப்படுத்தினார்கள்.

''அசோக்குமார் படத்தில் பார்த்தோமே அது இந்த பையன்தான்'' என்று சொன்னார்கள். என்னை உற்றுப் பார்த்த டைரக்டர் 'சட்டையை கழற்று, பனியனை

கழற்று' என்று சொல்லி என் உடற்கட்டை பார்க்க விரும்பினார்கள்.

நானும் சட்டை, பாடியை கழற்றி காட்டினேன். அப்போதுதான் தொடங்கிய தேகப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அவர்கள் விரும்பியதற்கு பொருத்தமாக அமைந்துவிட்டது போலும். அவர் ஒத்துக் கொண்டார்.

அன்போடும் கனிவோடும் என்னை பாராட்டினார்கள். முதலில் என்னை ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

வயிற்று பிழைப்புக்காக பட்டாளத்து வீரனாக் போக இருந்த நான், நாட்டுபற்றுக் கொண்ட விடுதலை வேட்கை நிறைந்த ரஜபுத்திர வீரனாக கதாநாயகனாக என் வாழ்க்கையிலே முதன் முறையாக கதாநாயகனாக நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டேன்.

சென்னையிலே பாதுகாப்பு படையினர் நடத்தி வந்த குதிரை ஏற்றம் சொல்லிக் கொடுக்கும் பள்ளிக்கூடத்தில் முதலாளியின் செலவில் முறைப்படி எனக்கு குதிரை ஏற்றம் பயிற்றுவிக்கப்பட்டது.

ஏதாவது ஒரு வேடம் குறிப்பிடத்தக்கதாக இல்லாவிட்டாலும், பத்தோடு பதினொன்று ஆகவாவது ஒரு சிறுவேடம்கூட கிடைக்காது என்ற நிலை ஏற்பட்டு விட்டபிறகுதான் பட்டாளத்து வீரனாக முயன்றேன். அதற்காக என்னை நான் தயார்படுத்தி ஏற்றவனாக என்னை உருவாக்கி கொண்டதாக நம்பிக் கொண்டிருந்த நேரத்தில் என்னுடைய அந்த பாதையில் ஒரு தடை போடப்பட்டது.

### மாதசம்பளம்

புதிதாக சேர்ந்த கம்பெனியின் நல்ல முதலாளியால் 8 மாதங்களுக்கு மேல் பட்டாளத்தில் வீரனாக தேர்ந்தெடுத்து என்ன சம்பளம் கொடுப்பார்களோ அதைவிட மூன்று மடங்கு மாதாமாதம் சம்பளம் தரப்பட்டது.

படமுதலாளிக்கோ, டைரக்டருக்கோ, ஒளிப்பதிவாளருக்கோ, ஒலிப்பதிவாளருக்கோ, ஆசிரியருக்கோ, என்னைப் பற்றி எந்த குறையும் இருந்ததில்லை. அப்படி இருந்தும் நான் அந்த படத்தில் நடிக்க முடியாதவன் ஆக்கப்பட்டேன்.

அப்போது எனக்கு நண்பர்களால் சொல்லப்பட்ட ஆறுதல் வார்த்தை 'நீ விளம்பரம் பெறாத நடிகனாக இருப்பதாலும் இதற்கு முன் கதாநாயகனாக நடிக்காது இருந்த காரணத்தாலும் உன்னை வைத்து தொடர்ந்து படம் எடுக்க முடியவில்லை'' என்பது தான்.

### லாயக்கு இல்லை!

ஆனால் சினிமா உலகில் பேசப்பட்டதோ 'எம்.ஜி. ராமச்சந்திரன் கதாநாயகன் வேடத்திற்கு தகுதி இல்லை. லாயக்கு இல்லை. எனவே மாற்றி விட்டார்கள்'' என்பது தான்.

பட்டாளத்து வீரனாக போக இருந்த பாதைக்கு தடையாக இருந்த சினிமா துறைக்கு இழுத்து வருவானேன்.



ஒரு நடிகனுடைய ஆசையும் உச்சக்கட்ட எல்லைக் கோடு அநேகமாக முதலில் கதாநாயகன் ஆக வேண்டும் என்பதாகத் தான் இருக்கும் என்பதை இன்னும் நம்புகிறேன்.

குணச்சித்திர வேடப்பாத்திரம் தாங்கி நடிப்பது என்பது கதாநாயகன் தகுதியைப் பெற்று, தான் ஆசைப்பட்ட புகழை அடைந்து வருமானத்தால் வசதிகளை பெற்று அனுபவித்து அதோடு மேலே சொன்ன நடிப்பு திறமையை காட்டுவதற்கும் முயல்வது இயற்கை.

என்னைப் பொறுத்தவரையில் ஏதாவது சிறு வேடம் கிடைத்தால் போதும் என்று ஆசை வைத்திருந்த என்னை - அப்படி ஏதாவது கிடைக்காதா என்று எண்ணிக் கொண்டிருந்த என்னை - கதாநாயகனுக்கு அதிலும் எல்லோருடைய மதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமான எம்.கே.தியாகராஜ பாகவதருக்கு தகுந்த கதாநாயகியாக நடித்த நடிகையுடன் கதாநாயகனாக நடிப்பதற்கு வாய்ப்பு தந்து, 6000 அடி நீளம் படமாக்கப்பட்டு, இயக்குனரால் வெள்ளிகரண்டி, அவர் படம் போன்றவைகளை நற்சாட்சி பத்திரமாக பெற எல்லா வாய்ப்பினும் தந்து அதற்கு பிறகு ''நீ கதாநாயகன் வேடத்திற்கு லாயக்கு இல்லை'' என்று தூக்கி எறியப்பட்டால் என்னுடைய எதிர்காலம் என்னவாகி இருக்கும்? எப்படி இருந்து இருப்பேன்.

பின் கோவையில் இருந்து சென்னைக்கு வந்த போது, என் மீது உண்மையில் அன்பும் நல்ல நிலைக்கு வர வேண்டும் என்று ஆசையும் கொண்டவர்கள்

என்னை பார்த்து பேசும் போது கூட என் உள்ளத்தில் சந்தேகம் ஏற்படும். அவர்கள் கேலி செய்கிறார்களோ என்று.

இப்படி நிமிடத்திற்கு நிமிடம் என் மேல் அளவற்ற பாசம் கொண்டவர்கள் மீது சந்தேகப்படும் மன நிலை ஆகிவிட்டது. அப்படியென்றால் நான் எத்தகைய உள்ள குமுறல்களோடும் நொந்து போன உள்ளத்தோடும் வாழ்ந்து இருப்பேன் என்பதை ரசிகபெருமக்களே தீர்மானித்துக் கொள்ளலாம்.

அந்த நேரத்தில் எனக்கு ஆறுதல் கூறியவர்களில் நான் கதாநாயகனாக நடித்து வெளியேற்றப்பட்ட கதைக்கு உரையாடல் எழுதிய சி.ஏ.லட்சுமணதாஸ் என்பவரும் ஒருவராவார்.

அவர் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களை 'என்னடா... கிருஷ்ணா' என்று அழைக்கும் தகுதியை பெற்றிருந்தார். நல்ல தமிழார்வமும் அறிவும் கொண்டவர். சிறந்த பாடலாசிரியர். இத்தனை தகுதிகளையும் பெற்றவர் கலைஞர்களுக்காக போராடுவதில் முன் வரிசையில் முதலில் நிற்பவர்.

அப்படிப்பட்டவர் எனக்கு தன் கைப்பட எழுதிய கடிதத்தின் மூலமாக எனக்கு ஆறுதல் கூறியவைகளைத் தான் அன்று நான் அனுபவித்த துன்பங்களை போன்ற வேதனை சுழலில் இன்று உளன்று கொண்டிருக்கும் கலை அன்பர்களுக்கு என் அனுபவத்தை சொல்வதின் மூலம் நம்பிக்கை ஒளியை உண்டாக்குவது நியாயமானது என்று நான் நம்புகிறேன்.

மனிதனுடைய முயற்சியின்றி முன்னேற முடியாது. அவைகளில் தடை ஏற்படுவதோ அந்த தடைகள் ஏற்படுவதன் முடிவில் நமக்கு தரப்படும் தெளிவான பதில்களோ நிச்சயமாக நமது கையில் இல்லை.

**திரும்பிப் பார்!**

நம்மை எல்லாம் ஆட்டி படைக்கின்ற மாபெரும் சக்தி தான் அவைகளுக்கு பொறுப்பு ஏற்றிருக்கிறதே தவிர நம்மால் தான் எல்லாம் முடியும்.நம்மால் தான் எல்லாம் நடக்கிறது என்று தப்பு கணக்கு போடுவோமேயானால் நாம் கடந்து வந்த பாதையை திரும்பி பார்த்து நிம்மதியும், மகிழ்ச்சியும் மேலும் முன்னேற வேண்டும் என்ற துடிப்பும் பெற முடியாது.

நாம் முன்னேறி செல்ல வேண்டிய பாதை நீண்டதொரு பாதை. கடக்க வேண்டிய தடைகள் மிகப் பெரியவைகள் என்பதை உணர்ந்து மேலும் எச்சரிக்கையோடு தக்க துணையோடு நல்லோரின் ஆதரவோடு நம்மக்களின் ஆசியோடு என்னை போன்றவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற கலை தொழிலை தெய்வீக சக்தி வாய்ந்த புனிதமான ஒரு பணி என்று உணர்ந்து சிக்கலை அறுப்பதன் மூலமாகத் தான் தீர்க்க முடியும்.

நூலுக்கும் கேடின்றி முயற்சிகள் தோல்வி அடைந்து விடாத வகையில் பொறுமையுடன் நம்பிக்கையுடன் செயல்படுவதற்கு என்னுடைய அனுபவம் பயன்பட



'மதுரைவீரன்'

வேண்டும் என்று விரும்புகிறேன்.

கலைஞர்களுடைய மனம் மென்மையானது, அதை யாரும் எளிதில் கவர முடியும். கடினமான மனதை பெற தொடர்ந்து ஒரு கலைஞன் அரும்பாடுபட்டாலன்றி கடுமையான மனதை பெற முடியாது.

அப்படிப்பட்ட கலைஞர்களின் மனதை புண்படுத்தி நடைபெறமுடியாத — கூடாத கடுமையான உள்ளத்தை கொண்ட கலைஞர்களை எதிர்காலத்தில் தோற்றுவித்து விடாதீர்கள் என்று தான் என் மதிப்புக்குரிய நண்பர்களை தாள்பணிந்து வேண்டிக் கொள்கிறேன்.

குறையற்ற மனிதன் உலகில் எங்குமே இருக்க முடியாது. புனிதமான தத்துவங்களை சொல்கிறவர்கள் அப்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள், வாழ்க்கை குறிப்புகளில் உணர்ந்து இருப்பதை அறிந்து இருக்கிறோம்.

இயற்கை, செயற்கையின் வலிவு மிக்க தாக்குதலில் சில வேளைகளில் நிகழ்ந்து விடுகிறது என்றால் செயற்கை முறையையே தொழிலாக கொண்ட கலைஞர்களிடம் குறைகளே இல்லை என்று சொல்வது உண்மைக்கு புறம்பானது. இப்போது இருக்கும் கலைஞர்கள் யாரும் அப்படி சொல்லவில்லை என்பதை துணிவோடு சொல்வேன்.



ஆனால் குற்றங்கள் செய்வதற்காகத் தான் இந்த தொழிலில் இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுவதையும் எங்களால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

ஆகவே நண்பர்கள் எங்கள் நிலையை உணர்ந்து நியாயமான காரணங்களின் அடிப்படையில் எங்களைப் பற்றி அனுதாபத்தோடு முடிவு செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.

நான் கடந்து வந்த பாதையில் எனக்கு உறுதுணையாக இருந்து உதவி செய்தவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்கா. அவர்களுக்கு எல்லாம் தனித்தனியாக நன்றி கூறுவதற்கு முயன்றால் இடம் காணாது. நேரமும் போதாது.

கலைத் தொழிலில் ஈடுபடும் போதும் சரி, எனது வாழ்க்கையிலே முன்னேறும் போதும் சரி, என்னுடைய நன்மையை வெற்றியை - மகிழ்ச்சியை தனதாக எண்ணி அதற்காக பாடுபட்டவர்களின் மனதிற்கும் அவர்தம் பண்பு செய்கைக்கும் எனது தலை வணக்கத்தை கை கூப்பி இந்த நேரத்தில் காணிக்கை ஆக்குகிறேன்.

என்னை நாடக கம்பெனிக்கு அழைத்து வந்த என் மாமன், பின்பாட்டு நாராயண நாயர் அவர்களையும் நடிகனாக ஆவதற்கு இடம் தந்து, உணவு, உடை அளித்து நடிப்புக் கலையை கற்று கொள்வதற்கு வழி வகுத்து தந்த மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி உரிமையாளர் எஸ்.எம். சச்சிதானந்தம் பிள்ளை அவர்களையும், முதன்முதலில் எனக்கு நடிப்பு சொல்லிக் கொடுத்த 'காளி' என்.ரத்தினம் அவர்களையும், சமூக நாடகங்களில் நடிப்பதற்கு கற்றுத் தந்த கந்தசாமி முதலியார் அவர்களையும் அவ்வப்போது எனக்கு நடிப்பில் திருத்தங்கள் செய்து வைத்த ''டைகர் ஆப் தி இந்தியன் ஸ்டேக்'' என்று பட்டம் பெற்ற கே.பி.கேசவன் நாயர், பி.யு.சின்னப்பா, எம்.கே. ராதா அவர்களையும், சினிமாவில் முதன்முதலாக நடிக்க வாய்ப்பு தந்த மனோரமா பிலிம்ஸ் உரிமையாளர்கள் அபிராமி செட்டியார், நஞ்சப்ப செட்டியார், மருதாசலம் செட்டியார், கதாநாயகனாக ஆக்கப்பட்டு பின் நீக்கப்பட்ட பின் என்னை துணிந்து தங்கள் 'ராஜகுமாரி' படத்தில் கதாநாயகனாக நடிக்க வைத்து படத்தை வெற்றிப் படமாக ஆக்கிய ஜுபிடர் சோமு, முகைதீன் அவர்களையும் நான் என்றும் போற்றியே தீர வேண்டும்.

அதிலும் நான் நடித்த முதல் படத்தில் என் வாழ்விலேயே முதல் முதலாக நூறு ரூபாய் நோட்டை எனக்கு தந்த மருதாசலம் செட்டியார் அவர்களை இப்போதும் ஒவ்வொரு நூறு ரூபாய் நோட்டுகளை பார்க்கும் போது கூட அவர்களுடைய தோற்றம் அதிலே தோன்றும் என்று நான் சொல்வது மிகையே. அல்ல.

இப்படி என் வாழ்க்கையில் எனக்கு உதவி செய்தவர்கள் ஆயிரமாயிரம். என்னை வாழ்வித்தவர்களோ கோடான கோடி.

அந்த நல்லிதயங்கள் அத்தனை பேருக்கும் என் நன்றியை கூறிக் கொண்டு, நானும் குறை உள்ள மனிதன்தான். என் குறைகளை மன்னித்து விடுங்கள். என்னை நிறை உள்ளவனாக ஆக்குங்கள் என்று வேண்டிக் கொள்கிறேன்.

அன்பன்,
**எம்.ஜி.ராமச்சந்திரன்.**

(100வது படமாக 'ஒளிவிளக்கு' வெளிவந்ததை ஒட்டி 'மாலைமுரசு' 19.9.68ல் வெளியிட்ட சிறப்பு மலரில் எம்.ஜி.ஆர். எழுதிய கட்டுரை)

## யாரும் அறிந்திராத,
## எம்.ஜி.ஆரும் எழுதாத
## சிறை அனுபவங்கள்...



எஸ்.எஸ்.ஆர்., எம்.ஜி.ஆர்.

# சென்னை மத்திய சிறைச்சாலையில் எம்.ஜி.ஆரின் அந்த 5 நாட்கள்!

1994-ல் நடந்த தமிழக சட்டமன்றக் கூட்டத் தொடரில் "எம்.ஜி.ஆரை சிறையில் அடைக்க யாருக்கும் தைரியம் இருந்ததில்லை. ஆனால் அவரது சிலையை நாங்கள் ஈரோட்டில் திறந்து வைக்க முயன்றபோது அந்த சிலையையே போலீசார் சிறை வைத்துவிட்டனர்" என்று அன்றைய எம்.ஜி.ஆர். அதி.மு.க. பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு ஆளும் அ.தி.மு.க. அரசு மீது குற்றம் சாட்டி குறிப்பிட்டுப் பேசினார்.

சபாநாயகர் முத்தையா உள்பட ஆளும் கட்சியினர் பலரும் எதிர்ப்பு தெரிவித்ததோடு எம்.ஜி.ஆர். சிறை சென்றிருக்கிறார் என்று பொதுவாக குறப்பிட்டார்களே தவிர எப்போது எதற்காக என்பது போன்ற விவரங்களைத் தரவில்லை.

எம்.ஜி.ஆர். 5 நாட்கள் சிறைவாசம் அனுபவித்திருக்கிறார். அதுவும் சென்னை மத்திய சிறையில் என்பது இன்றைய அ.தி.மு.க.வினருக்கே தெரியாததில் அதிசயமில்லை. அவர் சிறையில் அடைபட்டிருந்ததும் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு. அவருடன் ஒன்றாக சிறைவாசம் அனுபவித்தவர் 'இலட்சிய நடிகர்' எஸ்.எஸ்.ராஜேந்திரன். இருவருக்குமே அதுதான் முதல் சிறைவாச அனுபவமாம். அது பற்றி விவரித்தார் எஸ்.எஸ்.ஆர்.

''1958 ஜனவரியில் தந்தை பெரியார் மற்றும் தமிழகத் தலைவர்களை பிரதமர் நேரு 'நான் சென்ஸ்' (முட்டாள்) என்று சொன்னதை கண்டித்து டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு நேரு வரும்போது கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை அறிஞர் அண்ணா அறிவித்து இருந்தார்.

''நேரு வரும் விமானம் சென்னையில் இறங்கும் போது நேருவின் கண்களுக்கு எங்கு பார்த்தாலும் கறுப்புக் கொடியாக தெரிய வேண்டும். அதற்கு தமிழகம் எங்கும் தி.மு.க. தோழர்கள் அணி திரள வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

அப்பொழுதெல்லாம் தி.மு.க.வுக்கு நிதி வசதியெல்லாம் கிடையாது. போராட்டங்களுக்கு நிதி தேவையென்றால் அண்ணன் எம்.ஜி.ஆரும், நானும்தான் சொந்தப் பணத்திலிருந்தும், கூட்டம் நடத்தி நிதி திரட்டியும் உதவுவது வழக்கம். அதன்படி கறுப்புக் கொடிகளைத் தயாரிக்கும் பொறுப்பு என்னிடமும், எம்.ஜி.ஆரிடமும் விடப்பட்டது.

எங்கள் இருவரிடமும் சொந்தமாக தையல் இயந்திரங்கள் இருந்தன. அதனால் கறுப்புத் துணிகளை பேல் பேலாக வாங்கி கொடிகளை இரவு, பகலாக தயார் செய்து கழகத் தலைமையகத்துக்கு அனுப்பும் பணிகள் துவங்கின. நாங்கள் அவ்வப்போது அவற்றை மேற்பார்வையிட்டபடி படப்பிடிப்பிற்கும் சென்று வந்தோம்.

அப்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அண்ணா கைது செய்யப்பட்டார். அவரோடு ஈ.வெ.கி. சம்பத், நெடுஞ்செழியன், கண்ணதாசன் ஆகியோரும் கைது செய்யப்பட்டார்கள். போலீஸ் எங்களையும் கண்காணித்தது.

மறுநாள் அதிகாலை 3.30-க்கு சென்னை நகர போலீஸ் துணை கமிஷனர் (எனக்கு ஏற்கனவே அவரோடு அறிமுகம் உண்டு) எனக்கு போன் செய்தார். 'உங்களை இன்னும் சிறிது நேரத்தில் கைது செய்ய வரப் போகிறோம்' என்றார். சுமார் 40 காவலர்கள் வரப் போகிறார்கள் என்று தெரிந்து அவர்களுக்காக காலை டிபன் தயார் செய்யச் சொன்னேன். வந்தவர்கள் டிபன் சாப்பிட்டு விட்டு என்னை மைலாப்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

அங்கு சென்ற பின்புதான் எனக்கு முன்பாக அண்ணன் எம்.ஜி.ஆரை கைது செய்து சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் வைத்திருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. நான் வீட்டிலிருந்து சாப்பாடு வரவழைத்தபோது எம்.ஜி.ஆருக்கும் சைதை காவல் நிலையத்துக்கு ஒரு கேரியரில் சாப்பாடு அனுப்பி வைக்கச் சொன்னேன். படிப்பதற்கு புத்தகங்கள் எல்லாம் கிடைத்தாலும் எம்.ஜி.ஆரோடு ஒரே நிலையத்தில் இருந்தால் அவருடன் பேசிக் கொண்டிருக்கலாமே என்று என் எண்ணத்தை துணை கமிஷனரிடம் தெரிவித்தேன்.

அதற்கு அவர், 'இங்கு நீங்கள் இருப்பது தெரிந்து வெளியே பெரிய கூட்டமே திரண்டிருக்கிறது. சைதாப்பேட்டை காவல் நிலையத்திற்கு வெளியேயும் பெருங்கூட்டத்தை எங்களால் சமாளிக்க முடியவில்லை. இருவரும் ஒரே இடத்தில் இருந்தால் நிலைமை மோசமாகி விடும்' என்று சொன்ன போது அதற்கு மேல் அவரை நான் வற்புறுத்தவில்லை.

அன்று இரவு காவல் நிலையங்களிலேயே எம்.ஜி.ஆருக்கும், எனக்கும் நேரம் கழிந்து போனது. மறுநாள் காலையில் என்னை மத்திய சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே முதல் மாடி



'கணவன்'

யில் முதல் வகுப்பு கைதிகளுக்கான அறையில் கொண்டு விட்டார்கள். அங்கே எனக்கு முன்பாக எம்.ஜி.ஆர். இருந்தார். இருவருக்கும் ஒரே அறை என்றதும் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பெயர்தான் முதல் வகுப்பே தவிர, மிகச் சிறிய அந்த அறையில் படுப்பதற்கு சிறிய திண்ணை போல் மேடை ஒன்று இருந்தது. அதன் மேல் அழுக்கடைந்த மூட்டைப் பூச்சிகளின் ஆக்ரமிப்பில் ஒரு மெத்தை. அதை பயன்படுத்தவே முடியாத நிலையில் கீழே தூக்கிப் போட்டோம். எங்கள் இருவருக்கும் கைகள்தான் தலையணையாக பயன்பட்டது. விரிப்பின்றி வெறும் திண்ணையிலேயே படுத்துக் கொண்டோம்.

பகல் 12.00 மணிக்கு எங்களுக்கு சிறையிலிருந்தே உணவு தரப்பட்டது. வட்ட அலுமினிய தட்டில் இருந்த அரிசி சாதமும், குழம்பும், காய்கறிகளும் எனக்கு விசித்திரமாகப்பட்டது. சிரமப்பட்டு சாப்பிட்டபடியே எம்.ஜி.ஆரைப் பார்த்தேன். அவர் எவ்வித சலனமுமின்றி சாப்பிட்டு முடித்தார். 'இது போன்ற சாப்பாடெல்லாம் நான் சிறு வயதிலேயே சாப்பிட்டிருக்கிறேன். அதனால் எனக்கு இது புதிதல்ல' என்றார்.

அங்கு ஒரு மண் பானை இருந்தது. அருகில் ஒரு தகர டப்பா. 'அதைக் கொண்டு அந்தப் பானையிலுள்ள தண்ணீரை எடுத்துக் குடித்துக் கொள்ள வேண்டும்' என்றார் எம்.ஜி.ஆர்.

அந்த பானைக்கு சற்று தள்ளி இரண்டு மண் சட்டிகள் இருந்தன. அதன் அருகில் மற்றொரு மண் பானை. அவை என்னவென்று கேட்டேன். 'அவை இரவில் நம் கழிப்பிட வசதிக்காக' என்றார். அதைப் பார்த்து நான் பயந்து போனேன்.

'எப்படிண்ணே இதெல்லாம் நாம் பயன்படுத்தறது?' என்று சங்கடத்துடன் கேட்டேன். 'இதையெல்லாம் நாம் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும். வேறு வழி?' என்ற எம்.ஜி.ஆர். சிறையில் என்னென்னவெல்லாம் அனுபவிக்க வேண்டியிருக்கும் என்று விலாவாரியாகச் சொன்னவர், ஒரே அறையில் 6 பேர், 7 பேர் தங்குகிறார்களே அவர்களது நிலையைப் பற்றி கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் என்று சொல்லி என்னை சமாதானம் செய்தார்.

முதல் நாள் சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் இருந்த போதே அங்குள்ள காவலர்களிடம் சிறை விதிமுறைகள், வசதிகள் பற்றியெல்லாம் விலாவாரியாக கேட்டுத் தெரிந்து கொண்டு விட்டதாகச் சொன்னார். இந்த முன்னெச்சரிக்கை, எதையும் எதிர்கொள்ளும் உணர்வுதான் அவரது பலம் என்று சொல்ல வேண்டும்.

மாலை 6.00 மணிக்கு மேல் நாங்கள் இருக்கும் அறைக் கதவை பூட்டிச் சென்று விடுவார்கள் என்பதால் இரவு உணவை மாலை 4.30 மணிக்கே கொண்டு வந்து கொடுத்தார்கள். புழுங்கலரிசி சாதம், குழம்பு, காய்கறிகள் என்று இருந்தன.

நாங்கள் சிறையில் இருப்பது தெரிந்து திரையுலகைச் சேர்ந்த பட அதிபர்கள், இயக்குநர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் எல்லாம் எங்களைப் பார்க்க வந்துவிட்டார்கள். வந்தவர்கள் கூடை, கூடையாக பழங்களைக் கொண்டு வந்து குவித்து விட்டார்கள். அவற்றை கட்சித் தொண்டர்களுக்கும் மற்ற சிறைக் கைதிகளுக்கும் பகிர்ந்து கொடுத்து விட்டோம்.

இப்படி எங்களை நிறைய பேர் வந்து பார்வையிட்டுச் செல்வதைக் கண்ட சிறையிலிருந்த ஆயுள் தண்டனைக் கைதிகள் 'யார் இவர்கள்?' என்று சிறைக் காவலர்களை விசாரித்திருக்கிறார்கள். அந்தக் கைதிகள் எல்லாம் கலைவாணர், தியாகராஜ பாகவதர் இருவரும் சிறைக்கு வந்த போது வந்து சேர்ந்தவர்கள். அவர்கள் எம்.ஜி.ஆரையும், என்னையும் தெரிந்திருக்கவில்லை. எங்களைப் பற்றி காவலர்கள் சொன்னபோது ''நல்லா அழகா, சிவப்பா இருக்காங்க'' என்று விமர்சனம் செய்தார்களாம்.

முதல் நாள் மாலை சரியாக 6.00 மணிக்கு காவலர்கள் வந்து எங்கள் அறையை பூட்டி விட்டுச் சென்றார்கள். முதல் நாள் இரவு எப்படியோ நாங்கள் பொழுதைக் கழித்தோம். மறுநாள் காலையில் தான் பிரச்சினை ஆரம்பமானது. காலைக் கடன்களை கழிப்பதற்கென்று சிறைக் கூடத்திற்குள் இருந்த திறந்த வெளிக் கழிப்பிடத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். நரகம் என்பார்களே அது இதுதான் என்று எண்ணிக் கொண்டேன். ஆனால் எம்.ஜி.ஆர். சமாளித்துக் கொண்டு வந்து விட்டார். எனக்கு அந்த இடம் அலர்ஜி போல் ஆகிவிட்டது. இதை எப்படி சமாளிப்பது என்று எம்.ஜி.ஆரிடம் ஆலோசனை கேட்டேன். ''இருவருமே நீர் ஆகாரங்களை, பழச்சாறு போன்றவற்றை அருந்துவோம். இயற்கை உபாதை பிரச்சினை இருக்காது'' என்றார்.

அதன்படி மறுநாள் முதல் சாப்பாட்டை ஒதுக்கிவிட்டோம். பகல் பொழுதில் சிறைக்குள் இருந்த அண்ணா மற்றும் தலைவர்களை சந்தித்துப் பேசி வருவது என்று எப்படியே நேரத்தை செலவிட்டோம். மாலை 6.00 மணியிலிருந்து மறுநாள் காலை வரை வெளிச்சம் குறைந்த அறைக்குள் அடைபட்டிருப்பதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

நாங்கள் இருந்த அறைக்கு கீழே சுற்று சுவருக்கு வெளியே ஒரு வாசல் உண்டு. நான் பிற்பகலுக்கு மேல் அந்த வாசல் அருகில் போய் உட்கார்ந்து கொள்வேன். காற்றோட்டமாகவும் இருக்கும்.

''நீங்களும் வாங்கண்ணே பேசிக் கொண்டிருக்கலாம் என்று அழைப்பேன். அது சரியல்ல ராஜேந்திரன்'' என்று மறுத்து விடுவார்.

நான் கீழ்த் தளத்து வாசலுக்கு அருகில் இருப்பதைக் கண்டு சிறைக்காவலர் சங்கடப்பட்டு என்னிடம் கெஞ்சுவார். எம்.ஜி.ஆரிடம் சென்று முறையிடுவார். எம்.ஜி.ஆர். என்னை அழைத்து 'நீங்கள் இப்படி பிடிவாதம் பிடித்தால் அந்த காவலருக்குத்தான் ஆபத்து. அவர் ஏதோ கட்சிக் கண்ணோட்டத்தோடு சலுகை தருகிறார் என்று அவரை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். அதனால் 6.00 மணிக்கு முன்னதாக இங்கு வந்து விடுங்கள்' என்று அன்போடு கண்டித்தார்.

அது மட்டுமின்றி ''நாம் சிறையில் இப்போது இருக்கும் நிலையை நன்றாக மனதில் படம் பிடித்துக் கொள்ளுங்கள். நானும் இதை மனதில் பதிய வைத்துக் கொண்டிருக்கிறேன். இதுநாள் வரை நாம் சினிமாவில் சிறைக் கூடங்களை வசதியான இடமாகவே காட்டி வந்திருக்கிறோம். இனியும் நாம் அப்படிக் காட்டி



னால் அது மக்களை ஏமாற்றுவது போலத்தான் இருக்கும். அதனால் அடுத்து வரும் படங்களில் சிறைக் கூடங்களை ஓரளவு உள்ளது உள்ள படி காட்டுவோம். அப்போதுதான் சிறையின் அவலங்கள் மக்களுக்குப் புரியும்'' என்று கூறினார்.

இந்த சிறை அவலங்களை எல்லாம் மனதில் கொண்டுதானோ என்னவோ எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக ஆட்சி பொறுப்பேற்ற பின் சிறையில் பல்வேறு சீர்த்திருத்தங்கள், வசதிகள் செய்து கொடுத்தார்.

முதலில் சிறை அனுபவங்கள் எங்களுக்கு புதிதாக, சிரமமாக இருந்தாலும் வந்த சில தினங்களிலேயே அவை எங்களுக்குப் பழகிப் போய் விட்டன. வெறுப்பாக வந்து சேர்ந்த இடம் விருப்பத்திற்குரியதாக மாறிப் போனதை நினைத்து ஆச்சரியப்பட்டோம். எம்.ஜி.ஆருக்கும் அதே எண்ணம் தான் இருந்ததாம். ''வீடு, வீடு விட்டால் ஸ்டூடியோ, மேக்கப், படப்பிடிப்பு, திரும்பத் திரும்ப ஒரே மாதிரி வேலை. அதற்கு நிவாரணமாகத்தான் இந்த இடம் இருக்கிறது'' என்றார்.

நேரு சென்னை வந்து திரும்பிச் சென்ற பின்பு அண்ணாவையும் மற்ற தலைவர்களையும் முதலில் விடுதலை செய்தார்கள். அடுத்து எம்.ஜி.ஆரையும், என்னையும் விடுதலை செய்தார்கள்.

நாங்கள் இருவரும் நேராக லாயிட்ஸ் சாலையிலுள்ள எம்.ஜி.ஆர். இல்லத்திற்கு சென்று அப்புறம் என் வீட்டிற்கு வந்தோம். எம்.ஜி.ஆர். என் தாயாரின் கையில் என் கையைப் பிடித்துக் கொடுத்து விட்டு, 'உங்கள் பிள்ளையை பத்திரமாக உங்களிடம் ஒப்படைத்து விட்டேன்' என்று கூறி விட்டுப் புறப்பட்டார்.



திண்டுக்கல் இடைத் தேர்லின் (1973–ல்) வெற்றி முடிவு தெரிந்தவுடனேயே, நுங்கம்பாக்கம் அவென்யூ சாலையிலுள்ள அண்ணா வீட்டிற்கு வந்த எம்.ஜி.ஆர்., திருமதி ராணி அண்ணாவுக்கு மரியாதை செலுத்தி விட்டு, அண்ணாவின் பேத்தியைத் தூக்கிக் கொண்டு கொஞ்சினார். குழந்தைகளின் ஆவலை நிறைவேற்ற அவர்களை தனது காரில் வைத்துக் கொண்டு தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.



# நாயகியருடன் கொஞ்சம் (கொஞ்சும்) எம்.ஜி.ஆர்.!

'பறக்கும் பாவை' - காஞ்சனாவுடன்



'தொழிலாளி' - ரத்னாவுடன்



'அன்னமிட்டகை' - பாரதியுடன்



'நினைத்ததை முடிப்பவன்' - லதா, மஞ்சுளாவுடன்



'தனிப்பிறவி' - ஜெயலலிதாவுடன்





'கொடுத்து வைத்தவள்' - எல்.விஜயலட்சுமியுடன்

'ரிக்ஷாக்காரன்' - மஞ்சுளாவுடன்



'இதயவீணை' - மஞ்சுளாவுடன்



'இன்று போல் என்றும் வாழ்க'
- ராதா சலூஜாவுடன்



படகோட்டி - சரோஜாதேவியுடன்



'நாடோடி' - பாரதியுடன்



'ஆனந்த ஜோதி' - தேவிகாவுடன்



'நேற்று இன்று நாளை'
- மஞ்சுளாவுடன்



'சோகத்திற்கு ஒன்று' -
பண்டரிபாயுடன் (குடியிருந்த கோயில்)



'பறக்கும் பாவை' - சரோஜாதேவியுடன்



அன்னமிட்டகை'-ஜெயலலிதாவுடன்.



'கூண்டுக்கிளி'யில் பி.எஸ். சரோஜாவுடன்



'நீதிக்குத் தலைவணங்கு' - லதாவுடன்



'எங்க வீட்டுப் பிள்ளை' - சரோஜாதேவியுடன்
(படத்தில் இடம் பெறாத காட்சி)



'அன்பே வா'
- சரோஜாதேவியுடன்



'உரிமைக்குரல்' - லதாவுடன்



‘உலகம் சுற்றும் வாலிபன்’
மேட்டா ருங்ரட்டாவுடன்
(தாய்லாந்து நடிகை)



‘நான் ஏன் பிறந்தேன்’ - கே.ஆர். விஜயாவுடன்





'நீரும் நெருப்பும்' - ஜெயலலிதாவுடன்

'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' -லதாவுடன்



'அலிபாபாவும்
40 திருடர்களும்'
- பானுமதியுடன்



'நான் ஏன் பிறந்தேன்' படத்தில் காஞ்சனாவுடன்.



'நேற்று இன்று நாளை'யில் லதாவுடன்



'ஊருக்கு உழைப்பவன்' படத்தில்
வெ.ஆ. நிர்மலாவுடன்.

# ஒரிஜினல் நடிகர்!

தமிழ்நாட்டிலே இருக்கின்ற பத்திரிகைகளில் பெரும் பாலானவைகளால் தாக்கப்படும் நடிகரும் எம்.ஜி.ஆர்., தூக்கப் படும் நடிகரும் எம்.ஜி.ஆர்.!

ஆனால், எல்லாப் பத்திரிகைகளிலும் அவருடைய செய்தி இடம் பெற்றிருக்கும்!

இது ஏன்?

ஏதாவது ஒரு வகையிலே எம்.ஜி.ஆரைப் பற்றிய செய்தி இடம் பெற்றிருந்தால்தான் பத்திரிகைகள் அதிகமாக விற்கும் என்ற நிலைமை!

இதிலிருந்து எம்.ஜி.ஆர். எவ்வளவு முக்கியமான நடிகர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்!

படப்பிடிப்பு நடக்கும்பொழுது மற்றவர்களையும் 'ஜோர்' படுத்தி வேலை வாங்குகிறவன் நான். முதன் முதலாக "சபாஷ் மாப்பிளே" படத்திலே நான் அவருடன் நடிக்கும்பொழுது இதே பழக்கம் அவரிடமும் இருந்ததைப் பார்த்தேன். இந்த ஒரு காரியத்திலேயே எம்.ஜி.ஆரை எனக்குப் பிடித்து விட்டது.

"நல்லவன் வாழ்வான்" படத்திலே நான் அவருடன் சண்டை போட்ட அனுபவத்தைக் கொண்டு கூறுகிறேன். சண்டைக் காட்சிகள் படமான பொழுது அவருடைய திறமை மெச்சத்தக்கதாயிருந்தது. அக்காட்சிகளையெல்லாம் அவரே டைரக்ட் செய்தார். அவைகளை ரசிக்கத் தகுந்த கோணங் களில் படமாக்க கேமராவைக் கூட 'செட்டப்' செய்திருக்கிறார்.

அந்தக் காலத்திலே நான் நாடகங்களில் நடிக்கிறபொழுது 'பம்பாய் மெயில்', 'ராஜாம்பாள்' போன்ற நாடகங்களில் ஒருவருக்கொருவர் குடுமியைப் பிடித்து, மூக்கை உடைத்துக் கொண்டு 'டிங்சர்' போட்டுக் கொள்வோம். வாள் சண்டை யென்றால் தூக்க முடியாத மிலிட்டரி பட்டாக் கத்தியை வைத்துக் கொண்டு திணறுவோம். ஆனால் இப்போது சுளு வான கத்தியை வைத்துக் கொண்டு 'விஸ்விஸ்'ஸென்று வீசி விடுகிறார்கள்.



'வேட்டைக்காரன்' படத்தில் எம்.ஜி.ஆர். - எம்.ஆர். ராதா

முன்பெல்லாம் பெரிய நடிகர்களை வைத்துக் கொண்டு துரிதமான தயாரிப்புகள் வெளிவர முடியாதென்ற ஒரு நிலைமை இருந்தது. ஆனால், இப்போது எம்.ஜி.ஆர். நடிக் கும் படங்கள் மாதா மாதம் முதல் தேதி சம்பளம் வாங்குவது மாதிரி வந்துவிடுகிறது. இதிலிருந்து பட முதலாளிகளிடம் அவர் எந்த அளவுக்கு ஒத்துப் போகிறார் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

தன்னுடைய நடிப்பில் தனக்கென்று ஒரு பாணியை வைத்திருக்கின்றார் எம்.ஜி.ஆர். அமெரிக்கா, இந்தி நடிகர் களைப் பார்த்து 'காப்பி' செய்கிற வழக்கம் அவரிடம் கிடை யாது.

ஆகையினாலே - எம்.ஜி.ஆர். ஓர் ஒரிஜினல் நடிகர்!

**- 'நடிகவேள்' எம்.ஆர். ராதா**

**- 1966-ல் ஒரு பேட்டியிலிருந்து.**


*With Best Compliments From:*

**GANESH TRAVELS**

**Govt. of India Regcognised Tourist Transport Operators, Madras & Bangalore**

Phone - Madras: Off: 8254444, 8250222, Telex: 041-8724 GTMS-IN

Bangalore: Off: 607428, 607639, Telex: 0845-2084 GTBR-IN

# எம்.ஜி.ஆர். கோவில்!



சென்னை நகரின் பெரம்பூர் ஜி.கே.எம். காலனியின் குறுகலான தெரு ஒன்றில், நடுத்தர வயதுள்ள பெண்மணி ஒருத்தி, தலையில் மூங்கில் கூடையைச் சுமந்தபடி சென்றாள்.

வண்ணமயமான சின்னஞ்சிறிய அழகிய கோவில் ஒன்றின் முன்பு, மூங்கில் கூடையை அவள் இறக்கி வைத்தாள்.

அந்தக் கூடை நிறைய கொய்யாப் பழங்கள்!

அந்தப் பெண்மணியின் பெயர் யசோதா!

கோவில் முன்பு, பயபக்தியுடன் தலைவணங்கி வேண்டிக் கொண்டாள்.

அது என்ன கோவில்?

தெய்வத்தின் பெயர் என்ன?

கோவிலுக்கு உள்ளே இருந்தது இந்துமதக் கடவுள்கள் எவருமல்ல!

கோவிலும், சற்று மாறுபட்டுக் காணப்பட்டது. உள்ளே உள்ள மூலவர் சிலை 76 செ.மீ. உயரத்தில், கறுப்பு வண்ணக் கண்ணாடி அணிந்து, தலையில் தொப்பியுடன் இயற்கையான நடையுடன், இயல்பான புன்னகையுடன் காட்சியளிக்கின்றது.

ஆமாம்! பெரும்புகழ் பெற்ற ஒப்பற்ற திரைப்பட நடிகரும், தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தவருமான எம்.ஜி. ராமச்சந்திரன் உருவம்தான் அங்கு சிலையாக உள்ளது, கோவில் கொண்டுள்ளது.

எம்.ஜி.ஆருக்கென சென்னையில் அமைந்த கோவிலில் தான் யசோதா என்ற கொய்யாப்பழம் விற்கும் ஏழைப் பெண்மணி வேண்டிக் கொள்கிறாள்.

"நான் எம்.ஜி.ஆரிடம் தினமும் வேண்டிக் கொள்வேன். இதுபோல் கோவிலில் வந்து வணங்கி விட்டுத்தான் வியாபாரம் செய்வதற்குச் செல்வேன். இன்று நன்றாக வியாபாரம்

# 'எம்.ஜி.ஆர்.' என்ற மந்திரச் சொல்!

நடக்க வேண்டும் என்று நாள்தோறும் பிரார்த்தனை செய்வேன்" என்கிறாள்.

'நீ ஏன் ராமன், கிருஷ்ணன், முருகன் ஆகிய இந்துமதக் கடவுள்களைக் கும்பிடக் கூடாது?' என்று கேட்டதற்கு -

"மக்களுக்கு முருகன் நிறைய நன்மைகள் செய்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், அது எனக்குத் தெரியாது. என் அனுபவத்தில், நான் எம்.ஜி.ஆரையும், அவரது பெருமைகளையும் என்னுடைய கண்களால் நேரிலேயே கண்டிருக்கிறேன். ஆகையால், நான் எம்.ஜி.ஆரைக் கடவுளாகக் கும்பிடுகிறேன்" என்கிறாள் கொய்யாக் பழக் கூடை தூக்கும் ஏழைப் பெண்மணி யசோதா.

இதைப் போல் மூன்று எழுத்துக்களை (எம்.ஜி.ஆர்) சிறிய மந்திரச் சொல்லாகக் கருதும் ஏழை மக்கள் தமிழ்நாட்டில் கோடிக்கணக்கில் உள்ளனர். அவரைக் கடவுளாக வழிபடுகின்றனர்.

எம்.ஜி.ஆர். மறைந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு அவரிடம் மிகுந்த பற்று கொண்ட விஜயகுமார் (வயது 27), ஆறுமுகம் ரெட்டியார் (வயது 50) என்கின்ற இருவரும் இந்தக் கோவிலைக் கட்டியுள்ளனர்.

பல இந்துக் கோவில்கள், அவைகளுக்கு உரிய முறைப்படி கட்டப்பட்டிருக்கும்.

எம்.ஜி.ஆர். கோவில் புதிய முறையில் கட்டப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர். கோவிலின் மீது இரண்டு பெண்கள் அமர்ந்திருப்பதுபோல் உள்ளது. அந்தப் பெண்மணிகளின் கைகளில்

அ.இ.அ.தி.மு.க. கொடிகள் உள்ளன. ஒரு பெண்மணி எம்.ஜி.ஆரின் மனைவி வி.என். ஜானகி, இன்னொரு பெண் மணி திரைப்படங்களில் இணைந்து நடித்தவரும், தோழியு மான ஜெயலலிதா. (இந்துமதக் கோவில்களுக்கு மேலே சிங்கங்கள், யாளி, கருடன் இருக்கும்.)

கோவிலைக் கட்டுவதற்குத் தனது பங்காக விஜயகுமார் தன்னிடமிருந்த சைக்கிளையும், தனது மனைவியின் நகை யையும் விற்று முழுமனதோடு கொடுத்துக் கோவில் எழும்ப உதவியுள்ளார்.

"எம்.ஜி.ஆர்.... என்பவர் ஸ்ரீராமனின் அவதாரம்" என்று விஜயகுமார் கருதுகிறார். அதனால்தான் தன்னால் முடிந்த வரை கோவில் கட்டியதாகக் கூறுகிறார்.

இந்த எம்.ஜி.ஆர். கோவில் பக்தர்கள் ஒவ்வொரு கட்டத் திலும் அவருடைய சக்தியை உணருவதாகக் கூறுகிறார்கள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோவிலில் உள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு அபிஷேகம் செய்யப்படுகின்றது. தேங் காய் உடைக்கப்பட்டு, வாழைப்பழம் வைத்து, கற்பூரம் கொளுத்தப்பட்டு ஆராதனை செய்யப்படுகின்றது. பூக்களால் பூஜை செய்கின்றனர்.

பள்ளி மாணவ, மாணவியர் ஆசி பெற எம்.ஜி.ஆர். கோவில் முன் நிற்கின்றனர், பக்தியுடன்! தொழிற்சாலை ஊழி யர்களும், அரசு ஊழியர்களும் வழிபடுகின்றனர்.

துரை மனோகரன் என்கின்ற பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த ஊழியர் நாள்தோறும் எம்.ஜி.ஆர். கோவில் முன் வந்து வழிபட்டு, நன்றி தெரிவித்து, வணங்குகிறார்.

காரணம்?

மனோகரன் மனைவி கடந்த ஆண்டுதான் குழந்தை ஒன்றுக்குத் தாயாகி, அவரைத் தந்தையாக்கினார்.

"கோவிலில் நான் பிரார்த்தனை செய்த சில மாதங்களுக் குப் பின்புதான், அதிஅற்புதமான முறையில் நான் தந்தை யான இனிப்பான செய்தி, எனக்குக் கிட்டியது. என்னுடைய குழந்தை எம்.ஜி.ஆர். தந்த பரிசு" என்று மனோகரன் பரவசத் துடன் கூறுகின்றார்.

இப்போதைக்கு இந்தக் கோவிலின் சிறப்பு, அருகில் உள்ள குறிப்பிட்ட சிலருக்குத்தான் தெரிகின்றது.

எம்.ஜி.ஆர். கோவிலைப் பற்றி அதன் பக்தர்களில் ஒருவரான கோவிந்தராஜ் கணபதி கூறுகிறார்....

"இது ஆரம்பம்தான். நூறு ஆண்டுகளுக்குப் பின்பும் எம்.ஜி.ஆரைத் தமிழர்கள் ஆன்மீக குருவாக.... தலைவராகக் கொண்டாடுவார்கள். அவருடைய அருளாட்சி, ராமனுடையதைப் போன்ற பொற்காலம் படைப்பதாகும் என்று கூறுவார்கள்."

**'டைம்' சர்வதேச (ஆகஸ்டு 27, 1990) இதழிலிருந்து**

**- நாகை தருமன்.**

**- தகவல் உதவி: டி.எஸ். ஜெயபாபு, சென்னை - 106.**

*With Best Compliments From:*

**SREE GOKULAM**

*Chit & Finance Co. (P) Ltd*

**Contact Office:**

**No.49, Arcot Road :: Madras-600 024**

**Phone: 426868 Fax No: 044-423287**

# வள்ளல் உருவில் வந்த நல்லவர்



'மதுரை வீரன்' படத்தில் எம்.ஜி.ஆர். - டி.ஏ.மதுரம்

சுமார் 150 படங்களுக்கு மேல் நடித்துப் புகழ்பெற்ற கலைவாணர் என்.எஸ்.கே.யின் துணைவியாரும் நடிகையுமான மதுரம் தனது நெஞ்சிலே புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். பற்றிய எண்ணத்தையெல்லாம் கூறுகிறார்:

"கோடிக்கு ஒருவர் பிறந்து வந்து கொடுப்பார் தருமம்" என்று வெகு வருடங்களுக்கு முன்பு உடுமலை நாராயணகவி அவர்கள் இயற்றிய பாட்டை நானும் என் கணவர் கலைவாணரும் ஏதோ ஒரு படத்தில் பாடியிருக்கிறோம். அதே நல்ல கவிஞர் பாடியருளிய "கோடிக்கொருவர்"தான் "எம்.ஜி. ஆர்." அவர்கள் என்பது எனது ஆணித்தரமான முடிவு. காரணம், என் கணவர் கலைவாணரின் உள்ளத்தில் நிறைந்தவர் அவர்.

கலைவாணர் என்னிடம், "இந்தா பார் மதுரம், எனக்கு வாரிசு இல்லாமல் நான் இந்த உலகை விட்டு ஒருநாளும் போக மாட்டேன். எனக்குப் பின்னால் நாட்டு மக்களுக்கும் நான் நிறைவேற்றாமல் விட்டுச் செல்லும் எல்லாக் காரியங்களையும், எம்.ஜி.ஆர்.தான் செய்வார். ஏன் தெரியுமா, அந்தச் சிவந்த மேனியின் உள்ளே இருக்கும் சின்னஞ்சிறிய இதயத்திற்கு விரிந்த மனப்பான்மை இருப்பது எனக்குத்தான் தெரியும்!" என்றார். அந்த நல்லவர் சொன்ன சொல் - தீர்க்க தரிசன வார்த்தை இன்று மெய்யாகிக் கொண்டிருக்கிறது.

இன்று "எம்.ஜி.ஆர்." அவர்கள் நாட்டுக்கும், கலைஞர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் அவர்கள் எதிர்பார்ப்பதைவிடப் பன்மடங்கு உதவிகள் செய்து 'உதவி' என்று வந்தவர்களைத் திக்குமுக்காட வைத்துவிடுகிறார்! அவர் உதவி செய்கிறார் - உதவி செய்து கொண்டிருக்கிறார் - உதவி செய்து கொண்டே இருப்பார்! பொங்கி ஓடும் நதியின் ஓட்டத்திற்குத் தடை வருவதுண்டு! இந்த நல்ல உள்ளம் படைத்த வள்ளலின் வாரி வழங்கும் தன்மைக்கு நான் அறிந்த வரையில் தடையும் ஏற்பட்டதில்லை, நின்று போனதும் இல்லை. இதோ ஒரு சிறு உதாரணம் -

கலைவாணரின் மகள் வடிவுக்குத் திருமணம் நிச்சயமானதும், எம்.ஜி.ஆர். தானே முன்வந்து தன் சொந்தச் செலவில் அதை நடத்தி முடித்தார். 'திருமணத்தை நான் நடத்தவில்லை. கலைவாணர்தான் நடத்தியிருக்கிறார்" என்று திருமண விழாவில் மகிழ்ச்சி பொங்க இருந்த கலைவாணர் சிலையைச் சுட்டிக்காட்டிக் கூறினார் எம்.ஜி.ஆர்.

எத்தனையோ கல்யாணங்களைச் செய்து வைத்திருக்கிறார் என் கணவர். அப்பொழுதெல்லாம் ஆடி ஓடித் திரிந்தார். தன் மகள் கல்யாணத்தின்போது சிலையாக அசைவற்றிருந்தார். இல்லை, இல்லை! எம்.ஜி.ஆரின் உருவத்தில் நடமாடிக் கொண்டிருந்தார்!

விழாவில் எம்.ஜி.ஆர். பேசுகையில் என்னென்னவோ கூறினார். ஒன்றை மட்டும் கூறவில்லை! "அதை எம்.ஜி.ஆர். ஏன் கூறவில்லை? தெரிந்திருந்தால் கூறியிருப்பாரே! என்று எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

என் தங்கை விஜயாவிற்கும் என்.எஸ். திரவியத்திற்கும் நிச்சயதார்த்தம் இராயப்பேட்டை சண்முக முதலித் தெருவிலுள்ள எங்கள் வீட்டில் நடக்க இருந்தது! அப்பொழுது கலைவாணரின் முதல் மனைவி வேம்பு நிறைமாதம். நிச்சயதார்த்த நேரம் நெருங்க நெருங்க, வேம்புவுக்குப் பிரசவ வேதனை அதிகமாகிவிட்டது! வீட்டிலேயே ஏகப்பட்ட கூட்டம். ஒரு வழியாக நிச்சயதார்த்தத்தை முடித்துவிட்டு வேம்புவை நோக்கி ஓடினோம் உள்ளே -

வேம்புவைக் காணவில்லை! எங்களுக்கெல்லாம் 'பகீர்' என்றது. வீடு முழுவதும் தேடினோம். எங்கள் எல்லோருக்கும் திகைப்பாகவும், திகிலாகவும் இருந்தது. ஆளுக்கொரு பக்கம் தேடக் கிளம்பி விட்டார்கள்! நானோ வீட்டில் இருக்கை கொள்ளாமல் தவித்தேன்! அப்பொழுது எம்.ஜி. சக்ரபாணி அவர்களின் மனைவி மீனாகுட்டி அம்மையார் காரிலிருந்து இறங்கி அவசரமாக வந்தார். "வேம்புவுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது... ஹூம், சீக்கிரம் புறப்படு" என்றார்கள்.

எனக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டதென்றாலும் எங்கே எப்படி, ஏது என்று கேட்டுக் கொள்ளாமல் அவர்களுடன் காரில் புறப்பட்டு விட்டேன். நேரே அவர்களுடைய வீட்டின் எதிரே சென்று கார் நின்றது. ஓடிச்

With best compliments from

HOUSE OF L.K.S.
LKS
ESTD. 1925

T.Nagar

L.K.S.
GOLDHOUSE

60, Usman Road, T.Nagar,
Madras - 600 017.
Phone : 434 1111, 434 2222
434 3323, 434 4444, 434 5555
Fax: (0091 44) 434 6262

சென்று உதவிகள் செய்து கொண்டிருந்தார்கள். அத்தை (எம்.ஜி.ஆரின் அன்னை 'சத்யபாமா' அவர்களை நான் அத்தை என்றுதான் அழைப்பது வழக்கம்). என்னைப் பார்த்ததும் அவர்கள், "மதுரம்... உன் வீட்டிற்கு வந்திருந்த சமயம் வேம்பு ரொம்ப பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள், அந்த நிச்சயதார்த்தக் கூட்டத்திலே என்ன செய்வது? உடனே யாரிடமும் சொல்லாமல் அவளை என் வீட்டிற்குக் கொண்டு வந்துவிட்டேன். இந்தா பாரு உன் மகளை" என்று குழந்தையை என் கையில் கொடுத்தார்கள் அத்தை. நன்றிப் பெருக்கால் என் கண்கள் திரையிட்டன! வாய் பேச முடியவில்லை! அந்த உத்தமி பெற்ற ரத்தினமல்லவா 'எம்.ஜி.ஆர்.' கருணையின் ஊற்றான அந்த அன்னையின் இரத்தத்தில் உதித்த செல்வம் அல்லவா, 'எம்.ஜி.ஆர்.'! இரக்கமும் ஈகையும் இல்லாமல் போகுமா?

வடிவின் கல்யாணம் முடிந்த மறுநாள் எம்.ஜி.ஆரின் வீட்டுக்குச் சென்று விஷயத்தைச் சொல்லி, "உங்க வீட்டில் பிறந்த அந்தக் குழந்தைதான் வடிவு! அவளுக்குத்தான் நேற்று நீங்கள் கல்யாணத்தைச் செய்து வைத்தீர்கள்" என்றேன். எம்.ஜி.ஆரின் உள்ளம் இதைக் கேட்டதும் பூரித்துவிட்டது! முதல் நாள் கல்யாணத்தில் இருந்ததைவிட இரட்டிப்பு மகிழ்ச்சி அவருடைய முகத்தில் தாண்டவமாடியது!

"எனக்கு இது தெரியாதே! இதை ஏன் முதலிலேயே சொல்லவில்லை?" என்று உரிமையுடன் கடிந்து கொண்டார் வள்ளல் உருவில் வந்த அந்த நல்லவர்!

**- என்.எஸ்.கே. மதுரம்**

**(1965-ல் 'உயிரொளி' தேவராஜன் எழுதிய பேட்டிக் கட்டுரையிலிருந்து)**

## தியாகசீலருக்கு டாக்டர் பட்டம்!

இதுவரை நான் தமிழ் மேடையில் பேசியது இல்லை. முதன் முதலாக இப்போதுதான் பேசுகிறேன். முதலமைச்சர் எம்.ஜி.ஆரைப் பாராட்டிப் பல விழாக்கள் நடைபெற்றன. உலகமே எம்.ஜி.ஆரைப் பாராட்டுகிறது. இப்படிப்பட்ட இந்த பிரம்மாண்டமான விழாவில் நானும் கலந்து கொள்ளும் சந்தர்ப்பத்தைப் பெற்றதை என்னுடைய பாக்கியமாகக் கருதுகிறேன். நடித்து, புகழ் பெற்று, மக்களின் தலைவராகி ஆட்சி பீடத்தில் அமர்ந்த முதல் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள். தியாகசீலரான எம்.ஜி.ஆருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது பாராட்டுக்குரியது. அதை எங்களுக்கே கிடைத்த பட்டம் என்று கருதுகிறேன்.

*- டாக்டர் பட்டம் பெற்றதற்காக சேலத்தில் முதல்வர் எம்.ஜி.ஆருக்கு நடந்த பாராட்டு விழாவில் இந்தி நடிகை ஹேமமாலினி பேசியது.*

# சிவாஜியோடு சேர்ந்து நடிக்காததேன்?

"**இ**தய வீணை" படத்தைத் தயாரித்த உதயம் புரொடக்ஷன்சார் ஏற்பாடு செய்திருந்த சினிமா நிருபர்கள் கூட்டத்தில் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டார்.

3 மணி நேரம் நிருபர்களுடன் உரையாடி, அவர்கள் சரமாரியாகக் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் கொஞ்சமும் சளைக்காமல் நகைச்சுவையுடன் பதில் அளித்தார்.

நிருபர்கள் கேட்ட கேள்விகளும், எம்.ஜி.ஆர். கூறிய பதில்களும் வருமாறு:-

## மிகை நடிப்பு

***கேள்வி:*** மிகையான நடிப்புக்கு எதிர்காலத்தில் வரவேற்பு இருக்காது. இயற்கையான நடிப்புக்குத்தான் வரவேற்பு இருக்கும் என்று கூறி இருக்கிறீர்களே. அப்படி என்றால் படத்தில் ஒருவரே பத்துப் பதினைந்து பேரை அடிப்பது இயற்கை நடிப்பு என்று கூற முடியுமா?

***எம்.ஜி.ஆர்.:*** அபிமன்யு பத்மவியூகத்தில் நுழைந்து வெளியே வர முடியாமல் மரணம் அடைந்ததாகவும், அர்ச்சுனன் உள்ளே நுழைந்து வெளியே வந்ததாகவும் கூறப்படுகிறது. அதை நம்பும்போது பத்துப் பதினைந்து பேரை ஒருவனால் ஏன் வீழ்த்த முடியாது? வலுவுள்ளவன் - சண்டையின் நுட்பங்களைத் தெரிந்தவன் எளிதில் அடிக்க முடியும்.

ஒரு காலத்தில், "சண்டை போடுவது ஒரு நடிப்பா?" என்று கேட்டார்கள். அடி வாங்குபவன் அடி வாங்குவது போலவும், அடிப்பவன் அடிப்பது போலவும் நடித்தால்தான் சண்டைக் காட்சியை ரசிக்க முடியும். அடி வாங்குபவன் "ஐயோ..." என்று அழாமலோ, அப்படியே நின்றுவிட்டாலோ கேலிக் கூத்தாகி விடும். ஆகவே சண்டைக் காட்சிக்கும் நடிப்பு தேவை



என்பது தெளிவாகிறது.

பார்ப்பவர்கள் நம்பும்படி செய்வதுதான் நடிப்பு. மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும். அதுதான் நடிப்புக்கு முக்கியம்.

## நடிப்பு எதுவரை?

***கேள்வி:*** 100 ஆண்டுகள் ஆனாலும் நடிப்பீர்களா?

***எம்.ஜி.ஆர்.:*** நடித்துக் கொண்டே சாக வேண்டும். அதை விட வேறு ஆசை எனக்குக் கிடையாது. நடிப்பு எனக்குத் தொழில். அதை என்னால் எப்படி விட முடியும்? மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் வரை நடித்துக் கொண்டே இருப்பேன்.

***கேள்வி:*** வயதுக்கு ஏற்ற வேடம் தேவை இல்லையா?

***எம்.ஜி.ஆர்.:*** 44 வயது சிவாஜிகணேசன் 80 வயதுக் கிழவ னாகவும், 56 வயதாகிய நான் 26 வயது வாலிபனாகவும் நடிப்பதுதான் நடிப்பு. அவர் கிழவராகவும் நான் வாலிபராகவும் நடிக்க முடியாவிட்டால் நாங்கள் இருவருமே நடிகர்கள் அல்ல. அதுதான் சொன்னேன், ரசிகர்கள் விரும்பும் வரை நடிப்பேன் என்று.

## கால தாமதமா?

*கேள்வி:* மற்ற கதாநாயகர்கள் நடித்து வெளிவரும் படங்களை விட நீங்கள் நடித்து வெளிவரும் படங்கள் வெளி வர கால தாமதம் ஆவதாகக் கூறப்படுகிறதே. இதற்கு என்ன பதில் என்று தெரிந்து கொள்ளலாமா?

*எம்.ஜி.ஆர்.:* நான் நடிக்கும் படங்கள் என்னால் கால தாமதம் ஆகிறது என்ற சுயநலம் என்னிடம் இருந்தால், "உலகம் சுற்றும் வாலிபன்" ஒன்றரை ஆண்டு ஆகியும் வெளி வராமல் இருக்குமா? 45 நாட்கள் படப்பிடிப்பு நடத்தி 10 ஆயிரம் அடிகள் எடுத்த பின்பும் இவ்வளவு காலதாமதம் ஏன்?

படத் தயாரிப்பு என்றால், அதில் பல விஷயங்கள் அடங்கி இருக்கின்றன. நிலைமை இப்படி இருக்கும்போது என்னை எந்த வகையில் சுட்டிக்காட்ட விரும்புகிறீர்கள்?

## சிவாஜியுடன்

*கேள்வி:* நீங்களும் சிவாஜிகணேசனும் ஒரு படத்தில் சேர்ந்து நடிப்பீர்களா?

*எம்.ஜி.ஆர்.:* நடிப்பதாக வைத்துக் கொள்வோம். யாருக்கு எவ்வளவு வாய்ப்பு அளிப்பது என்ற பிரச்சினை எழாதா? நான் கதை, படத் தயாரிப்பு, டைரக்ஷன் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் கொஞ்சம் அனுபவம் பெற்றவன் என்ற முறையில் கூறுகிறேன். யாருக்கு நேராகக் காமிராவை வைத்து யாருக்கு முக்கியத்துவம் அளிப்பது போன்ற பல பிரச்சினைகள் உருவாகும். அப்புறம் இவருக்கு அதிக வாய்ப்பு, அவருக்கு அதிக வாய்ப்பு என்று அங்கும் இங்கும் சொல்ல "கால்ஷீட்டு" தகராறு ஏற்பட, பட அதிபரின் கதி என்ன ஆகும்?

அப்படியே படம் தயாராகித் திரையிடப்படுவதாக வைத்துக் கொள்வோம். "ஆகா! எம்.ஜி.ஆர். நடிப்புத்தான் பிரமாதம்!" என்று ஒரு ரசிகர் சொல்ல, "இல்லை, இல்லை சிவாஜி கணேசனின் நடிப்புத்தான் பிரமாதம்!" என்று அடுத்த ரசிகர் சொல்ல அடிதடி ஏற்படுமா, ஏற்படாதா? அவர்கள் இந்த "போஸ்டர்" கிழிக்க, இவர்கள் அந்த "போஸ்டர்" கிழிக்க பட அதிபர் "அம்போ."

## மோதல்

*கேள்வி:* உங்கள் ரசிகர்களுக்கும் சிவாஜி கணேசன் ரசிகர்களுக்கும் மோதல் ஏற்படாமல் இருக்க வழி என்ன?

*எம்.ஜி.ஆர்.:* அரசியல்வாதிகள் எங்களை விட்டுவிடும் போது நாங்கள் அரசியலை விட்டு விலகிக் கொள்ளும்போது வழி கிடைக்கலாம்.

**தினத்தந்தியில் எம்.ஜி.ஆர். பதில்கள், 28.7.'72**

---

***எனக்குள்ள மூலதனம் என்ன தெரியுமா? மக்களுடைய அன்பும், என்னுடைய நாணயமுந் தான். அதுக்கு என்றுமே மோசம் வராது.***

*-நம் நாடு*

---



## போக்குவரத்து அதிகமிருக்கும்

*ஆண்:* அக்கம்பக்கம் பார்க்காதே
ஆளைக் கண்டு மிரளாதே
இடுப்பை இடுப்பை வளைக்காதே
ஹாண்டில்பாரை ஒடிக்காதே
*பெண்:* கையை கையை வளைக்காதே
கண்ணை கண்ணை மிரளாதே
பையப் பைய ஒதுங்காதே
பள்ளம் பார்த்து போகாதே (அக்கம்)
*ஆண்:* போக்குவரத்து அதிகமிருக்கும்
மெதுவாய்ப் போகணும் தெரிஞ்சுக்கோ.
*பெண்:* இந்தப் பொண்ணைப் பார்த்தா போக்குவரத்தும்
நின்னு போயிடும் புரிஞ்சுக்கோ.
*ஆண்:* போலீஸ்காரர் ஸ்டாப்புன்னு சொன்னா
பொட்டுன்னு நிக்கணும் தெரிஞ்சுக்கோ.
*பெண்:* சைக்கிள் போற வேகத்தில் யார் தடுத்தாலும்
பொண்ணு நிக்காது புரிஞ்சுக்கோ.
*ஆண்:* ஆகா, பேஷ் பேஷ், அற்புதம், அழகு
அதுக்குள்ள பழக்கம் ஆயிடுச்சு.
*பெண்:* இந்த ஐயா அருகில் இருந்ததனாலே
ஆபத்தில்லாம போயிடுச்சு.

**(போக்குவரத்து விதிகளைச் சொல்லி 'நீதிக்குப் பின் பாசம்' படத்திற்காகக் கண்ணதாசன் எழுதி, டி.எம். சௌந்தரராஜன், பி. சுசீலா பாடிய பாடல் இது.)**

# இலங்கை சென்ற எம்.ஜி.ஆர்.!



**1965** - செப்டம்பர் மாதத்தில் ஒருநாள் மாலை நேரம். ஊட்டி தாசப் பிரகாஷ் ஓட்டலின் ஓர் அறை. ஏவி.எம்.மின் 'அன்பேவா!' படத்தின் வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்க வந்திருந்த தயாரிப்பாளர்கள் முருகன் சகோதரர்கள், டைரக்டர் ஏ. சி. திரு லோகசந்தர் ஆகியோருடன் பேசிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர்., பேச்சுவாக்கில் தான் இலங்கை போவது பற்றிக் குறிப்பிட்டார்.

"நான் பிறந்தது கண்டி. இலங்கையிலுள்ள அந்த இடம் எப்படி இருக்கும் என்று கூடத் தெரியாது! இப்போதுதான் நான் போகும்போது பார்க்கப் போகிறேன். ஏன், முப்பது வருஷங்களுக்குப் பின்னர் இப்போதுதான் முதல் தடவையாக நான் வெளிநாடு ஒன்றுக்குப் போகப் போகிறேன்" என்று சொன்னார் எம்.ஜி.ஆர்.

சன் என்ற ஆங்கிலப் பத்திரிகை, திவசா என்கிற சிங்களப் பத்திரிகை, ராதா என்ற தமிழ் வெளியீடு ஆக மூன்று பத்திரிகைகளை வெளியிட்டு வரும் இண்டிபெண்டண்ட் நியூஸ் பேப்பர்ஸ் என்ற இலங்கைப் பத்திரிகை நிறுவனம் எம்.ஜி.ஆரையும், சரோஜாதேவியையும் இலங்கை வருமாறு அழைத்திருந்தது!

"எம்.ஜி.ஆர். ஒரு நடிகர் மட்டுமல்ல, தி.மு.கழகத்தில் ஒரு முக்கிய பிரமுகர். எனவே, அரசியல் தொடர்புடைய அந்தக் கலைஞரை இலங்கைக்கு வர அனுமதிக்கக் கூடாது" என்று அப்போது இலங்கையில் சிலர் சொல்லி வந்தார்கள். அப்படிச் சொல்லி வந்தவர்களில், அவரை அழைத்த பத்திரிகை நிறுவனமும் ஒன்று என்பதை அறியும் போது ஆச்சரியமே ஏற்படும்! என்றாலும் ஆதரிக்க வரும் கரங்களையோ தன்னுடைய அன்பை நாடி - அரவணைப்பைத் தேடி வருபவர்களையோ உதறிவிடும் எண்ணம் படைத்தவரல்ல, எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர்., சரோஜாதேவியுடன் அக்டோபர் 21-ந்தேதி, சென்னையிலிருந்து இலங்கைக்குப் புறப்பட்ட விமானம் வழக்கம் போலப் புறப்படவில்லை! அது புறப்படும்போது சப்தம் போட்டதாகக் கூடத் தெரியவில்லை. அன்றைய தினம் விமான நிலையத்தில் எம்.ஜி. ஆரையும், சரோஜாதேவியையும் வழியனுப்பக் கூடியிருந்த ஆயிரமாயிரம் அன்பர்களின் வாழ்த்தொலியிலும் மகிழ்ச்சி ஆரவாரத்திலும் அந்த விமானம் போட்ட சப்தம் கேட்கவே இல்லை!

22-ந்தேதி காலையில்தான் எம்.ஜி. ஆர்.- சரோஜாதேவி இருவரும் முதலில் இலங்கைக்குப்போவதாக இருந்தது. அன்று மாலையே அவர் கள் இலங்கையில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவிருந்தார்கள். ஆனால் 22-ந் தேதி இலங்கை செல்லும் விமானம், மாலைதான் புறப்படும் என்று தகவல் தெரியவே, 21-ந் தேதியே புறப்படும்படி ஏற்பட்டு விட்டது. ஆக கடைசி நிமிடத்தில் முடிவு செய்யப்பட்டதால் இந்த விஷயம், இலங்கையில் சரிவர விளம்பரப்படுத்தப்படவில்லை. என்றாலும் கூட்டம் சொல்ல முடியாத அளவில் விமான நிலையத்தில் கூடி விட்டது. அதிகாலையிலிருந்தே மக்கள் திரளாக வர ஆரம்பித்து விட்டார்கள்!

எம்.ஜி.ஆர். ஏறிச் சென்ற இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் இலங்கையில்



விமான நிலைய வரவேற்பு



சுகததான ஸ்டேடியத்தில் திறந்த ஜீப்பில் எம்.ஜி.ஆர்.. சரோஜாதேவி



நுவரெலியாவில் மக்கள் கூட்டத்தில் பேசுகிறார்

இறங்கியபோது, அவரை வரவேற்றது மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம்தான்.

விமானத்திலிருந்து எம்.ஜி.ஆர். முதலில் இறங்கினார். வழக்கமான புன் சிரிப்புடனும் கூப்பிய கரங்களுடனும், சரோஜாதேவி பின்தொடர எம்.ஜி.ஆர். இறங்கி வந்தார்.

'எம்.ஜி.ஆர். வாழ்க!, மக்கள் திலகம் வாழ்க!' என்ற கோஷங்கள் கொழும்பு விமானதளம் பூராவும் எதிரொலித்துக் கொண்டே இருந்தன.

புரட்சி நடிகரையும் சரோஜாதேவி யையும் - அவர்களை இலங்கைக்கு அழைத்திருந்த நண்பர்கள் மாலை யிட்டு, எதிர்கொண்டு அழைத்தார்கள். மற்றும் இலங்கைப் படவுலகைச் சேர்ந்த பிரமுகர்களும் வரவேற்றார்கள்.

எம்.ஜி.ஆர். சரோஜாதேவி இரு வரும் திறந்த காரில் ஏற்றப்பட்டார்கள். விமான நிலையத்திலிருந்து 16 கி.மீ. தொலைவிலிருந்த 'கால்பேஸ்' ஓட்ட லில் அவர்கள் தங்க ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. வழிநெடுகிலும் சாலை யின் இரண்டு ஓரங்களிலும் ஆயிரக் கணக்கான மக்கள் நின்று கொண்டு, வாழ்த்தொலி எழுப்பி எம்.ஜி.ஆர். குழு வினரை வரவேற்றார்கள்.

மக்களின் கட்டுக்கடங்காத இந்த அன்பைக் கண்டு இலங்கைவாசி களே பிரமித்தார்கள்! எம்.ஜி.ஆரும் மலைத்துவிட்டார். அன்புக்கு எவ்வ ளவு வலிமை, சக்தி உண்டு என்பதை அன்றைய காட்சி உணர்த்துவதாக இருந்தது!

அன்று பகல் உணவு எம்.ஜி.ஆரின் நெருங்கிய நண்பரான சற்குருநாதனின் வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விஷயம் பரம ரகசியமாக வைக் கப்பட்டிருந்தும் எம்.ஜி.ஆர்., வருவ தற்குப் பல மணி நேரம் முன்பாகவே, அவரது வீட்டின் எதிரிலும் வீதியிலும் மக்கள் கூட்டம் திரளாக நின்றுவிட்டது!

அன்று மாலை, இலங்கைக்கு அவரை அழைத்திருந்த பத்திரிகை நிறு வனத்தினர் தேநீர் விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பின்னர், எம்.ஜி.ஆரின் விருப்பத் தின் பேரில் ஒரு பத்திரிகையாளர் கூட் டம் அவர்கள் தங்கியிருந்த 'கால்பேஸ்' ஓட்டலில் நடைபெற்றது.

இலங்கைக்குத் தான் வந்திருப்பதுக் பற்றிப் பல கருத்துக்கள் உலவி வந்தா லும், தன் வரை, தான் வந்ததன் நோக் கம் என்ன என்பதைப் பத்திரிகை மூலம் மக்களுக்குத் தெரிவித்துவிட எம்.ஜி.ஆர். விரும்பினார்.

இலங்கைப் பத்திரிகை நிருபர்கள் கேள்விகளாகப் போட்டுத் துளைத்து விட்டார்கள். எம்.ஜி.ஆர். உடனுக்குடன் அவற்றுக்குத் தயங்காமல் பதிலளித்தார்.



இலங்கை பாராளுமன்ற சபாநாயகருடன்



இலங்கை பிரதமருக்கு விளக்கு பரிசளிக்கிறார்

''உங்களுக்கும் சிவாஜிக்கும் சண்டையாமே, உண்மையா?"

''சண்டையோ, பொறாமையோ எங்களிடையே இல்லை. போட்டி இருக்கலாம். ஆனால் தொழில் வளர்ச்சிக்கு அது தேவைதான்!"

"மு. கருணாநிதிக்கும் உங்களுக்கும் சண்டையா?"

"நானும் அவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். கட்சியின் வளர்ச்சியைக் கருதி ஏற்படுகிற அபிப்பிராயங்களில் சில கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அது தனிப்பட்ட சண்டையாகாது!"

"நீங்கள் எம்மாதிரியான வேஷத்தை விரும்புகிறீர்கள்?"



மட்டக்களப்பு கூட்டத்தில்



சிங்கள திரைப்படக் கலைஞர்களுடன்

"அப்படிக் கேட்பது சரியானதல்ல. மக்களுக்காகப் படம் எடுக்கிறோம். அவற்றில் நல்ல உணர்வுகளை எழுப்பும் பாத்திரம் எதுவானாலும் நல்ல பாத்திரம்தான். அதற்குத் தூண்டுகோலாக உள்ள எதுவும் நல்ல பாத்திரமே."

"ஆங்கிலப் படங்களுக்கு ஈடான தரத்தில் தமிழ்ப் படங்கள் வருவதில்லையே, ஏன்?"

"'தரம்' என்று நீங்கள் எதை இங்கு குறிப்பிடுகிறீர்கள்? தரம் என்று நிர்ணயிப்பதற்கு அளவுகோல் என்ன? 'கிளியோபாட்ரா' பெரிய படம். அதில் வரும் அரை நிர்வாணக் காட்சிகளை ஏற்றுக் கொள்கிறீர்கள். தமிழில் சோகம், ஹாஸ்யம், பண்பு, வீரம், சண்டை எல்லாம் வேண்டியிருக்கிறது. அதற்கேற்ப படம் எடுக்கிறோம். இவற்றில் தரத்தைக் காண முயற்சிக்க வேண்டுமே தவிர, ஆங்கிலப் படங்களுடன் ஒப்பிடக் கூடாது. அவர்களது கலாசாரம் வேறு, நமது வேறு!"

"நீங்கள் இலங்கை வந்ததன் முக்கிய காரணம் என்ன?"

"இங்குள்ள 'லக்ஷ்மி' அழகுப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்படுபவருக்குப் பரிசளிக்க. தவிர, நான் உலக மார்க்கெட்டுக்காக ஒரு படம் எடுக்கப் போகிறேன். அவற்றின் காட்சிகளை இலங்கையில் படம் பிடிக்கப் போகிறேன். அவற்றுக்கான தக்க இடங்களைப் பார்வையிட்டுப் போகவும் வந்தேன். எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு கடமை ஒன்றும் எனக்கு இருக்கிறது. நான் பிறந்த ஊர் கண்டி. அது இங்கு இருப்பதால் பார்த்துவிட்டுப் போகவும் வந்தேன். மற்றபடி நான் கலைத் தூதுவனாகவே வந்திருக்கிறேன்."

"உங்கள் படங்களில் சண்டைக் காட்சிகள் ஏன் அதிகம்?"

"வீர உணர்ச்சிக்கு இவை தேவை என்பதால்."

பத்திரிகைக் கூட்டம் முடிந்ததும், இலங்கை ரேடியோ பேட்டி நடைபெற்றது.

"நீங்கள் நடித்த படங்களிலேயே வெள்ளிவிழா கொண்டாடியது 'எங்க வீட்டுப் பிள்ளை'தான் என நினைக்கிறேன். அப்படித்தானே?" என்று ரேடியோ நிருபர் கேட்டார்.

"ஆம்" என்று எம்.ஜி.ஆர். சொன்னார். ஆனால் அருகிலிருந்த ஆர்.எம். வீரப்பன் குறுக்கிட்டு, மதுரை வீரன் இருநூறு நாட்கள் ஓடியிருப்பதை நினைவுபடுத்தினார்!

அன்றைய - முதல் நாள் நிகழ்ச்சிகள் - அத்துடன் முடிந்தன.

இலங்கை வந்தவுடனேயே தனது முதல் கடமையாக நாட்டின் பிரதமர் சேனநாயகாவைச் சந்திக்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர். விரும்பினார். அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு அன்று பிற்பகல் இரண்டு மணிக்குப் பிரதமரைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் திடீரென சேனநாயகா முன்னாள் இலங்கை பிரதமரின் சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்ள நேர்ந்துவிட்டதால், அன்றைய நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுவிட்டது. எனவே, மீண்டும் பிரதமரைச் சந்திக்க, மறுநாள் (வெள்ளி) ஏற்பாடு செய்வதாக எம்.ஜி. ஆரிடம் சொன்னார்கள்.

வெள்ளிக்கிழமை அன்று காலை எம்.ஜி.ஆர். இந்த நிகழ்ச்சியை முக்கியமாக எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

காலை 9.00 மணி வரை இது விஷயமாகத் தகவல் எதுவும் தெரியவில்லை. தவிர, இலங்கையில் காலடி எடுத்து வைத்ததிலிருந்து எம்.ஜி.ஆரைத் தொடர்ந்து இரண்டு இன்ஸ்பெக்டர்களும், இரு சி.ஐ.டி நிபுணர்களும் வந்து



பிரதமரும், எம்.ஜி.ஆரும்



*லக்ஷ்மி* அழகிப் போட்டியில் வென்ற அழகியுடன் எம்.ஜி.ஆர் - பரிசு தருகிறார்

கொண்டிருந்தார்கள். அவர்களும் அன்று காலையில் அதுவரை வர வில்லை.

எனவே, நேரத்தை வீணாக்க விரும்பாத எம்.ஜி.ஆர். தன் 'உலகம் சுற்றும் தமிழன்' என்ற சொந்தப் படத் திற்கான இடங்களைப் பார்வையிட்டு வர விரும்பினார்.

கொழும்பிலிருந்து சுமார் அறுபது மைல் தூரத்தில் இக்களுவா என்ற கடற்கரைப் பிரதேசம் இருக்கிறது. அந்த இடத்திற்கு முதலில் எம்.ஜி.ஆர். சென்றார்.

வழிநெடுக அவரையும் சரோஜா தேவியையும் பார்க்க ஆயிரக்கணக் கில் மக்கள் நின்றிருந்தார்கள்.

எம்.ஜி.ஆர். தன் கேமராவினால் பல கோணங்களில் படங்களை எடுத் துக் கொண்டார். பிற்பகல் சுமார் மூன்று மணிக்கு அவர்கள் திரும்பிய போது, அவர் வருத்தப்படக் கூடிய செய்தி ஒன்று காத்திருந்தது.

இலங்கைப் பிரதமரும், பார்லி மெண்ட் உறுப்பினர்களும் 12 மணி வரை எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி வரு கைக்காக எதிர்பார்த்துக் காத்திருந்த செய்தியும், பின்னர் அதை ரத்து செய்து விட்டதையும் கேள்விப்பட்ட எம்.ஜி. ஆர். மிகவும் வேதனைப்பட்டார். இவர் கள் காலை நிகழ்ச்சி ஏதுமில்லை என்று நினைத்துப் புறப்பட்டுச் சென்ற பின்னர், இந்த நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது.



இலங்கைப் பிரதமருடன் எம்.ஜி.ஆர்., ஆர்.எம்.வீரப்பன், சரோஜாதேவி

ஆனால் இவர்களுக்குத் தகவல் தெரிவிக்க பலவகைகளில் முயன்றும் முடியாமல் போய் விட்டது!

இந்த விவரங்கள் பிரதமரிடம் தெரிவிக்கப்பட்ட போது, அவர் மீண்டும் எம்.ஜி.ஆரைச் சந்திக்க ஒப்புக் கொண்டார்.

அன்று மாலை கொழும்பிலுள்ள சுகததாசா ஸ்டேடியத்தில் ஒரு வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நல்ல மழை!

ஆனால் அன்று அந்த அடைமழையிலும், குறைந்த பட்சக் கட்டணம் பத்து ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தும், ஐம்பதினாயிரம் பேர்கள் திரண்டிருந் தார்கள். எம்.ஜி.ஆர். அவர்களது ஆர்வத்தையும் அன்பையும் கண்டு மலைத்து நின்றுவிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் பல தரப்பட்ட கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட் டிருந்தன. இலங்கைக் கலைஞர்கள் இதில் பங்கெடுத்துக் கொள்ள இருந் தனர். ஆனால் மழை காரணமாக இவை ஒன்றுமே நடைபெறவில்லை.

என்றாலும் ரசிகர்களை ஏமாற்ற விரும்பாத எம்.ஜி.ஆர். திறந்த ஜீப்பில் சரோஜாதேவியுடன் கொட்டும் மழையில் நனைந்தபடியே ஸ்டேடியத் தைச் சுற்றி மெதுவாக ஊர்வலமாக வர ஆரம்பித்தார். அப்போது ஒருவர்



இலங்கை வானொலிக்கு பேட்டி



விமானம் ஓட்டிப் பார்க்கும் எம்.ஜி.ஆர்.

குடையை நீட்ட, "இங்கிருக்கும் மக்கள் நனையும்போது நாங்கள் மட்டும் குடையை உபயோகிப்பதா?" என்று சொல்லி மறுத்துவிட்டு, கொட்டும் மழையிலேயே இருமுறை சுற்றி வந்தார்கள்.

ஸ்டேடியத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு வந்தார்கள். எட்டி ஜெயமனே அவருக்கு மாலையணிவித்தார். ருக்மிணி தேவி சரோஜா தேவிக்கு மாலையணிவித்தார்.

உள்நாட்டு அமைச்சர் டாக்டர் தகநாயகா இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். கொழும்பு நகரசபைத் தலைவர் வின்சென்ட் 'பிரீஸ் வாழ்த்துரை கூறினார்.

இலங்கை மக்கள் சார்பில் அளிக்கப்பட்ட இந்த வரவேற்பில் உள்நாட்டு அமைச்சர் பேசுகையில், "மக்கள் கலைஞன் எவ்வாறு வாழ வேண்டுமென்பதற்கு எம்.ஜி.ஆர். உதாரணமாகத் திகழ்கிறார்" என்றார்.

நன்றி தெரிவித்துப் பேசிய மக்கள் திலகம், "மழையுடன் போட்டி போட்டுக் கொண்டு கொழும்பு வாழ் மக்கள் அன்பைச் சொரிவதாக"க் குறிப்பிட்டார்.

"கலையும் மனித உணர்ச்சியும் இணையும் போதுதான் நல்ல பண்பாடும் நாகரீகமும் வளருகிறது. நாம் நமது கடமையைச் செய்வோம். உரிமைகளை மட்டும் கேட்பதில் பயனில்லை!" என்று சொன்னார்.

"மனிதர்கள் அத்தனை பேரும் நடிகர்களே. குழந்தையாக, வாலிபனாக, இளைஞனாக, மணமானபின் கணவனாக, பின்னர் தந்தையாக, தாத்தாவாக, வயோதிகக் கிழவனாக, இறுதியில் பிரேதமாக - மனிதன் இத்தனை படிகளிலும் நடிக்கிறான். நாம் அனைவரும் ஒரே இனத்தவர்தாம்" என்று விளக்கம் தந்தார்.

மறுநாள் - எம்.ஜி.ஆர். சரோஜா தேவி இலங்கை வந்ததன் முக்கிய காரணமான லக்ஷ்மி அழகிகள் தேர்வுப் போட்டி நடைபெற்றது. நுவரேலியாவிலுள்ள பந்தய மைதானத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கலந்து கொள்வதற்காக மக்கள் திலகமும், சரோஜாதேவியும் காலை 6 மணிக்கெல்லாம் காரில் புறப்பட்டார்கள்.

இந்த விழாவுக்கு எம்.ஜி.ஆர். வரப் போகிறார் என்பது தெரிந்து விட்டதால், வழிநெடுக மக்கள் திரளாக நின்று கொண்டிருந்தார்கள். எம்.ஜி.ஆரைக் கண்டதும் அவர்கள், 'வாழ்க மக்கள் திலகம்' என்று விண்ணதிரக் குரல் எழுப்பினார்கள். கரங்களைக் கொட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

நுவரேலியாவுக்கு இவர்கள் வந்து சேர்ந்தபோது மணி கிட்டத்தட்ட ஒன்றாகி விட்டது.

இலங்கை தோட்டங்களில் பணியாற்றி வரும் பெண்களில் யார் சிறந்த அழகி என்பதைத் தேர்ந்தெடுத்து, பரிசளிக்கப்பட்டு வருகிறது. சிறந்த அழகியாக வருபவருக்கு அந்த ஆண்டின் 'லக்ஷ்மி' பட்டத்துடன், ஐயாயிரம் ரூபாய் ரொக்கமாகவும் கொடுக்கப்படுகின்றன.

இந்த அழகியைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் கலந்து கொள்ளும்படி சரோஜாதேவியையும், அப்படித் தேர்ந்தெடுக்கப்படுபவருக்குப் பரிசளிக்க எம்.ஜி.ஆரையும் விழாக் கமிட்டியினர் அழைத்திருந்தனர்.

எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி இருவரும் பந்தய மைதானத்துக்குள் நுழைந்ததும் மக்கள் பெரும் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள். திறந்த காரில் இருவரும் மைதானத்தைச் சுற்றி வந்தார்கள்.

பரிசளிப்பு முடிந்ததும் எம்.ஜி.ஆர். பேசினார். "இம்மாதிரி தேர்வுப் போட்டி நடத்தி உதவுவதால் அவர்கள் குடும்பம் வளமான வாழ்வுக்கு இட்டுச் செல்லப்படுகிறது" என்று கூறிய அவர், இதை ஏற்பாடு செய்திருந்த நிர்வாகிகளையும் பாராட்டினார்.

இந்த விழாவின்போது கால் இழந்த ஒருவர் கும்பலிலே இடறித் தள்ளிக் கொண்டு எம்.ஜி.ஆரை நெருங்கி வந்து, அவரது கழுத்தில் கறுப்பும் சிவப்பும் கலந்த துண்டொன்றைப் போட்டார். அவரது ஆர்வத்தையும், அதேசமயம் அவரது இயலாத தன்மையையும் கண்ட எம்.ஜி.ஆர்., அவருக்கு ஐந்நூறு ரூபாய் நன்கொடையாக வாங்கிக் கொடுத்தார். பின்னர் தெரிய வந்தது அவர் ஒரு சிங்களவர் என்பது!

அன்று பகல் நுவரேலியா மேயர் பகல் விருந்து கொடுத்தார். இது முடிந்ததும், இங்கிருந்து சுமார் இருபது மைல்கள் தள்ளி உள்ள டெல்மோர் எஸ்டேட்டுக்கு அவர்களை அழைத்துப் போனார் ஜெய்சிங்கே. அன்று தீபாவளி தினம். டெல்மோர் எஸ்டேட் தொழிலாளிகள் தாரை, தப்பட்டை முழங்க இவர்களை வரவேற்றதுடன் சில கலைநிகழ்ச்சிகளையும் நடத்திக் காட்டினார்கள். இந்தத் தேயிலைத் தோட்டத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் தொழிலாளிகள் இருவருக்கும் மாலை அணிவித்தனர்.

இங்கே மக்கள் கூட்டம் கட்டுக்கடங்காததாகிவிட்டது. சிலர் எம்.ஜி. ஆரைத் தொட்டுப் பார்த்தார்கள். வேறு சில துணிச்சல் பேர்வழிகளோ அவருக்கு முத்தமே கொடுத்துவிட்டார்கள்! ஆனால் அருகிலேயே வந்து கொண்டிருந்த சரோஜாதேவியை யாரும் தொடக் கூட முயற்சிக்கவில்லை. இந்த உயரிய பண்பு எல்லோரையுமே வியக்க வைத்துவிட்டது! தாய்க் குலத்திற்கு சிங்கள ரசிகர்கள் அளித்த தனி கௌரவத்தைக் கண்டு பலரும் பாராட்டினார்கள்.

அன்றிரவு நுவரேலியாவைச் சேர்ந்த வர்த்தகப் பெருங்குடி மக்கள் இருவருக்கும் விருந்தளித்தார்கள். தந்தத்தினால் செய்யப்பட்ட யானையை இருவருக்கும் பரிசாகத் தந்தார்கள்.

மறுநாள் நுவரேலியாவிலிருந்து கொழும்புக்குப் பயணம் துவங்கியது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. கொழும்பில் இருந்து, பிரத்தியேகமான 'ஆவ்ரோ' விமானத்தில் எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி இருவரும் மட்டக்களப்புக்கு வந்தார்கள்.

விமான நிலையத்தில் சுமார் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்தார்கள். விமானத்திலிருந்து எம்.ஜி.ஆர். இறங்கினாரோ இல்லையோ, "வாழ்க எம்.ஜி.ஆர்." என்று சொல்லி வைத்ததுபோல் ஒரே குரலில் அந்த ஜனசமுத்திரம் குரலெழுப்பியது.

எம்.ஜி.ஆர். குழுவை ஜோசப்

தம்பதிகள் வரவேற்றார்கள். பின்னா கிழக்கு மாகாண முதல் எம்.பி.யும், தமிழர் தலைவருமான பி. இராசாதுரை, மற்றும் பல அரசியல் பிரமுகர்களும், நகரப் பிரமுகர்களும் நமது கலைஞர் களை எதிர்கொண்டு அழைத்தனர்.

வின்செண்ட் உயர்தரப் பாடசாலை யைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் அணிவகுப்பும் நடைபெற்றது.

ராஜ மரியாதை என்பார்களே, அது இங்கு முற்றிலும் பொருத்தமாக இருந் தது. முன்னே இரண்டு மோட்டார் சைக் கிள்கள் செல்ல, திறந்த காரில் மக்கள் திலகமும், சரோஜாதேவியும் விமான நிலையத்திலிருந்து எஸ்பிளேனேடுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இலங்கை வந்ததிலிருந்து தெருவின் இருமருங்கிலும் மக்கள் கூடி வரவேற் பது வழக்கமான காட்சியாகிவிட்டது. அன்றும் அது நடைபெற்றது. ஆனால் அளவுக்கு அதிகமாகவே மக்கள் தெரு ஓரங்களில் கூடியிருந்தார்கள்.

மட்டக்களப்பு பொதுக் கூட்டத்தில், இராசாதுரை, "தமிழ்ப் படவுலகின் முடிசூடாமன்னன் எம்.ஜி.ஆர்." என்று வர்ணித்தார்.

"மறத் தமிழன் இராவணன் ஆண்ட பூமி என்று வர்ணிக்கப்படும் ஈழவள நாட்டில், மறத் தமிழர் மாமணியை வர வேற்பதில் பேருவகையடைகிறோம்" என்றார் இராசாதுரை. மற்றும் பலர் பேசினார்கள்.

"மீன் பாடும் தேன் நாடு" என்று மட்டக்களப்பைப் பற்றிக் கவிகள் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். அத்த கைய நாட்டிற்கு வருவதில் நான் பெரு மைப்படுகிறேன். கலைவாணர் மூல மும், வேறு பல காரணங்களாலும் எனக்கு எப்போதோ அறிமுகமாகி விட்ட ஊர் இது.

இராசாதுரை அவர்கள் என்னை இராவணனாகக் கூறினார்களோ என் னவோ, நான் ராமச்சந்திரனாகவே வந்தி ருக்கிறேன்! எங்கெங்கு நல்லவர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் நான் செல்வேன். நல்லவர்களுக்காக என் னால் இயன்றனவற்றையெல்லாம் செய் வேன். அதற்கு எனக்குச் சந்தர்ப்பம் தாருங்கள். இதுவரை நான் இலங்கை



எம்.ஜி.ஆருக்கு *நிருத்ய சக்ரவர்த்தி* என்று பட்டமளித்த அன்றைய ராஜாங்க மந்திரி ஜெயவர்த்தனே, அவரது மனைவியுடன் எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி

யில் கண்ட வரவேற்புகளையெல் லாம்விட, இங்கே கிடைத்த கட்டுக் கோப்பான, ஒழுங்கான வரவேற்பு எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்து நிற்கும்" என்று எம்.ஜி.ஆர். பதில் சொன் னார்.

மட்டக்களப்பிலிருந்து அடுத்த முகாம் யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை விமான நிலையத்திற்கு விமானம் வந்ததும், இந்நகர சபையினரால் பூரண கும்பம் வைத்து வரவேற்கப்பட்டார்கள்.

மழை பெய்த வண்ணம் இருந்தா லும், திறந்த ஜீப்பில் இருவரும் பவனி வந்தனர். இங்கிருந்து யாழ்ப்பாணம். ஸ்டேடியம் சுமார் பன்னிரண்டு மைல் கள் இருக்கின்றன. இந்தப் பன்னிரண்டு மைல் தூரம் திறந்த காரிலேயே இவர் கள் சென்றனர். வழிநெடுகிலும் கொட் டும் மழையிலும் மக்கள் நனைந்த படியே இந்தியக் கலைஞர்களைப் பார்க் கும் ஆவலில் நின்றிருந்தனர்.

யாழ்ப்பாணம் விளையாட்டு மைதா னத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விழாவுக்கு நீதிபதி தம்பையா தலைமை வகித்தார்.

தலைமை வகித்த நீதிபதி பேசும் போது, தம்முடைய வாழ்நாளிலேயே இப்படியொரு பெருங்கூட்டத்தைத் தான் இப்பகுதியில் கண்டதில்லை என்றும், "எம்.ஜி.ஆர். கலைஞர் மட்டு மல்ல, நல்ல கொடையாளி, மக்கள் இத யங்களிலே வீற்றிருக்கும் நல்லவர். அவரது நல்ல எண்ணங்களே இன்று அவரை மக்கள் மத்தியிலும் வாழ வைக்கிறது" என்றும் சொல்லி, பொன் னாடையும் போர்த்தினார்.

"கலைஞன் என்பவன் தன் வாழ்வை ஒழுங்காக அந்த நாட்டின் பண்பாட்டிற் கிணங்க அமைத்துக் கொள்ள வேண் டும். அப்போதுதான் அவன் நாட்டின் தொண்டனாகி, வழிகாட்டியுமாகிறான். அதாவது நாம் சொல்வது அண்ணா மாதிரியாகிறான் என்று குறிப்பிடலாம்.

இந்த நாட்டில் நான் பிறந்தவன். கேரளம் என்னை வளர்த்தது. தமிழகம் என்னை வாழ வைத்தது. அப்படியா னால் நான் யாருக்குச் சொந்தம்? உங்க ளைப் போன்ற நல்லவர்களுக்கெல்லாம் நான் சொந்தமானவன். நான் நாடோடி மன்னனல்ல, ஒரு நாடோடி என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்" என்றார். சரோஜாதேவியும் பேசினார்.

"இலங்கைக்கு நான் வந்தது தவறா?" என்று எம்.ஜி.ஆர். கூட்டத்தினரைக் கேட்டபோது, "இல்லை! மீண்டும் வாருங்கள்!" என்று மக்கள் குரலெழுப்பி னார்கள்.

யாழ்ப்பாணத்தில் உணவுக்காக அமர்ந்தபோது, எல்லோரும் அமர்ந்த

பின்னரே நான் வருவேன் என்று சொல்லி, தன் உயரிய பண்பைக் காட்டிக் கொண்டார் எம்.ஜி.ஆர். அன் றிரவு நல்ல மழை. அந்த அடை மழை யிலும் கொழும்பு திரும்ப முடிவு செய் யப்பட்டது.

யாழ்ப்பாணம் செல்லும்போது எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி இருவருக் கும் புதிய அனுபவமொன்றும் ஏற்பட் டது. ஆம், விமான ஓட்டியின் இருப் பிடம் சென்று சில நிமிஷங்கள் இருவ ரும் விமானமும் ஓட்டிப் பார்த்தார்கள்.

26-ம் தேதி திங்கள் கிழமை அன்று இரண்டு பெரிய நிகழ்ச்சிகள் நடந்தன.

எம்.ஜி.ஆர். இலங்கை பிரதமரைச் சந்தித்துப் பேசினார். அவர் பிறந்த இட மான கண்டியையும் போய்ப் பார்த்தார்.

எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி, ஆர். எம். வீரப்பன் முதலியோர் பிரதமரைச் சந்தித்தனர்.

பிரதமருக்குத் தன் சொந்த சார்பில் தந்தத்தினால் செய்யப்பட்ட ஒரு மேஜை விளக்கையும், நடிகர் சங்க சார்பில் தந்தத்தினால் செய்யப்பட்ட நேருஜி யின் சிலையையும் எம்.ஜி.ஆர். பரி சாகக் கொடுத்தார். சரோஜாதேவி ஒரு நடராஜர் சிலையைக் கொடுத்தார்.

பிரதமர் அன்புடன் எம்.ஜி.ஆரை யும் சரோஜாதேவியையும் விசாரித்தார்.

"இதுதான் முதல் தடவையாக இங்கு வருகிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆம்" என்று சொன்ன 'மக்கள் திலகம்', 'தான் பிறந்தது கண்டியில்தான்' என்பதையும் பிரதமருக்குச் சொன்னார்.

இரு நாடுகளுக்குமிடையே கலை ஞர்கள் குழுவைப் பரிமாறுதல் செய்து கொள்ளும் யோசனையை எம்.ஜி.ஆர். தெரிவித்தபோது, பிரதமர் ஆழ்ந்த கவ னத்தோடு அதைக் கேட்டுக் கொண்டு, "பார்க்கலாம்" என்று பதில் சொன்னார்.

பிரதமரிடம் விடைபெற்று வெளியே வந்தபோது, 'மக்கள் திலகத்தின் முகம் வழக்கத்திற்கு அதிகமாகவே மலர்ந் திருந்தது.

பின்னர் கண்டி பயணம்.

"கண்டிக்குக் கார் வேகமாகச் சென்றபோதும், நான் பிறந்த ஊரைப் பார்க்கப் போகிறேன் என்ற ஆவலின் முன், அதன் வேகம் ஆமை வேகமாகி



விட்டது. இங்கு இதுதான் நான் பிறந்த இடம் என்று ஒன்றைக் காட்டினார்கள். இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். எப்படி நம்புவது? எதை நம்புவது!" என் றார் எம்.ஜி.ஆர். அன்று மாத்தளை யிலும் ஒரு விழாவில் கலந்து கொண் டார்.

கண்டியிலும் ஒரு வரவேற்பு அவ ருக்குக் கொடுக்கப்பட்டது. பிறந்த ஊரில் கிடைத்த இந்த வரவேற்பைக் கண்டு எம்.ஜி.ஆரின் மனம் பூரித்தது!

26-ம் தேதி எம்.ஜி.ஆர். இந்தியா புறப்பட வேண்டும். ஆனால் பெரு முயற்சியின் பேரில் அவரது விசா (தங்கும் அனுமதி) மேலும் மூன்று நாட் களுக்கு நீடிக்கப்பட்டது.

"எம்.ஜி.ஆர். எந்தப் பொது நிகழ்ச்சி களிலும் கலந்து கொள்ளக் கூடாது, ஏனெனில் போலீஸ் பாதுகாப்பு அளிக்க இயலவில்லை" என்ற நிபந் தனையின் பேரிலேயே விசா வழங்கப் பட்டது. ஆயினும் ஒரே ஒரு கூட்டத் தில் மட்டும் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. விவேகானந்தா சொசைடியின் சார்பில் நடைபெற்ற அந்தக் கூட்டம்தான் எம்.ஜி.ஆர். இலங் கையில் கலந்து கொண்ட கடைசி பொதுக் கூட்டமாகும்.

26-ந் தேதி மாலை அவருக்கு இலங்கை விஜயா ஸ்டூடியோவில் ஒரு வரவேற்பு கொடுக்கப்பட்டது. சிங்கள நடிகர்கள், கலைஞர்கள் எல்லோரும் கலந்து கொண்டார்கள். சிங்களக் கலை ஞர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற் றன. சென்னையில் பணியாற்றி, தற்போது இலங்கையில் பணியாற்றி வரும் ஒளிப்பதிவாளர் மஸ்தான் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்.

மறுநாள் 27-ந் தேதி காலையில் சினிமாஸ் தியேட்டர்ஸ் ஸ்டூடியோவுக் கும் இவர்கள் சென்றார்கள். அங்கு சிங்களப் படப்பிடிப்பினைப் பார்த்த தோடு, சில சிங்களப் படங்களின் பகுதி களையும் பார்த்தார்கள்.

"மலையாளப் படங்களையே இவை நினைப்பூட்டின" என்றார் எம்.ஜி.ஆர். அன்று இரவு இவர்கள் கதிர்காமம் வந்தார்கள். கதிர்காமத்திற்கு இவர்கள் இரவில் செல்வதையும் அறிந்த நால் வர், சுமார் நூறு மைல் அந்த இரவு நேரத்திலேயே எம்.ஜி.ஆரைக் காண டாக்சி வைத்துக் கொண்டு வந்துவிட் டார்கள்!

கதிர்காமத்திற்கு இதேசமயம் இந்திய ஹைகமிஷனராக இருக்கும் பீம்சேன் சச்சாரும் மிகவும் விசாரித்தார்.

கோயிலில் எம்.ஜி.ஆர். வரவேற்கப் பட்டார். முருகனையும் தரிசித்தார் எம்.ஜி.ஆர்.

மறுநாள் அங்கிருந்து காலையில் கிளம்பி கொழும்புக்கு வந்து, இந்தியா வுக்கு இருவரும் பயணமானார்கள்.

'எம்.ஜி.ஆர். வரவினால் இலங்கை - இந்தியா இரண்டிற்கும் உள்ள கலைத் தொடர்பு நன்கு ஊன்றிவிட்டது. இதனால் இரண்டு சர்க்கார்களுக்குமே லாபம்' என்று 'வீரகேசரி'யின் ஆசிரியர் கே.வி.எஸ். வாஸ் கூறினார்.

# மக்கள் வெள்ளத்தில் மக்கள் திலகம்

இலங்கையில் பிரதம அமைச்சர் டட்லி சேனநாயகா வில் இருந்து எல்லா அமைச்சர்களும் எம்.ஜி.ஆரை விரும்பி அழைத்துப் பேசினார்கள். மேயர், மற்றும் பல உயர்தர அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும் மக்கள் திலகத்தைச் சந்தித்து உரையாடினார்கள். அவரது அழகுத் தமிழ், அரசியல் கலப்பு இல்லாமல் உரையாடிய சிறப்பு, தோற்றத்திலும், பேச்சிலும் காணப் பெற்ற கண்ணியம் – இவை எல்லாம் அவர்களைப் பிரமிக்க வைத்தன. ஏதோ சினிமா நடிகர் என்று எண்ணினோமே, எவ்வளவு விஷயம் தெரிந்தவராக, விவேகியாக இருக்கிறார் என்று இலங்கைப் பிரதமர் டட்லியில் இருந்து இன்னும் பல பிரமுகர்கள் வரையில் வியப்பு மிகக் கொண்டார்கள். சென்னையில் இதற்கு முன்னால் சிங்களம் சென்று வந்திருப்பவர்களும் ஆச்சரியம் அடைந்தார்கள். 'எம்.ஜி.ஆருக்கு எவ்வளவு பெரிய வரவேற்பு!' என்று அவர்களின் உள்ளம் வியப்புற்றது.

எம்.ஜி.ஆர். இலங்கையில் சென்ற இடங்களில் எல்லாம் பல இலட்சம் மக்கள் அவரைத் திக்குமுக்காட வைத்தார்கள். கொட்டுகிற மழையிலும் கூட்டம் குறையவில்லை. இங்கு எல்லாம் ஒன்று இரண்டு மழைத் தூற்றல் போட்டாலும் குருவிக் கூட்டம் போல மக்கள் கலைந்து சிதறிப் போய்விடு வார்களே! சிங்கள மக்கள் இப்படிச் செய்யவில்லை! மழையில் நனைந்து மக்கள் திலகத்தின் மழை போன்ற பேச்சைக் கேட்டுத் தங்களை மறந்து, நின்று கொண்டிருந்திருக்கிறார்கள்!

'இலங்கைக்கு எந்தக் கலைஞர்கள் வந்தாலும் நாடகம், கலைநிகழ்ச்சி என்ற பெயரால் பணம் சேர்த்துக் கொண்டு தானே போகிறார்கள், இதுவரையில் அப்படித்தானே நடந்து இருக்கிறது. ஆனால் இந்த மக்கள் திலகம் இந்தியாவில் இருந்து விலை உயர்ந்த பரிசுகளை நமக்குத் தருகிறாரே!' என்று திரு. டட்லி மகிழ்ந்தார்.

அரசியல் கலப்பு இல்லாத இலங்கைச் சுற்றுப்பயணத்தில் இலங்கை வாழ் தமிழர் நலம் குறித்து எம்.ஜி.ஆர். பேசினார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்தை எம்.ஜி. ஆர். சந்தித்துத் தமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார். இன்னும் இலங்கை அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்குடன் திகழுகின்ற பிரமுகர்களை எல்லாம் அவர் கண்டு பேசினார். அவர்களிடம் எல்லாம் எம்.ஜி.ஆர். இப்படிச் சொன்னார்: "போர் என்றால் எப்படி ஒரு குடையின் கீழ் திரண்டு எழுகிறார்களோ, அதுபோல் போர் அடிப்படையில் இலங்கை மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு நாட்டின் பொருள் வளத்தை மிகப் பெருக்க வேண்டும். இது நம் நாடு. நாடு வாழ்ந்தால்தான் நாம் வாழலாம் என்ற எண்ணத்தோடு ஒவ்வொருவரும் முழுமூச்சுடன் பாடுபட்டு உழைக்க வேண்டும்!"

காரில் கண்டியை எம்.ஜி.ஆர். அடைந்ததும் அதில் இருந்து அவர் ஆர்வத்தோடு குதித்துச் சில அடி தூரம் தரையில் நடந்து சென்றார். மகாகவி பாரதியார் தமிழ்நாட்டுப் புகைவண்டி நிலையம் ஒன்றின் தரையில் விழுந்து, 'இது நான் பிறந்த நாடு!' என்று சொல்லிப் புரளவில்லையா?

புரட்சி நடிகர் இப்படி மண்ணில் புரளவில்லை! இது நாகரிகமாக இருக்காது என்று, கண்டி மண் தமது கால்களில் ஒட்ட அழுத்தமாக ஊன்றி நடந்தார்.

கண்டியில்தான் மக்கள் திலகத்திற்கு அரசாங்க அமைச்சர் ஜெயவர்த்தனா 'நிருத்ய சக்ரவர்த்தி' என்ற பட்டத்தை வழங்கினார். நாடோடியாகக் கிளம்பிய அதே கண்டியில் அவருக்குச் சக்ரவர்த்திப் பட்டம் கிடைத்துவிட்டது!

இப்படி எம்.ஜி.ஆர். மழையிலும் மகிழ்ச்சி வெள்ளத்திலும் கண்ணீர்ப் பெருக்கிலும் நனைந்தது கொழும்பில் மட்டுமல்ல, இலங்கையின் மற்றப் பகுதிகளிலும் அவர் நனைந்தார். எம்.ஜி.ஆர். நனைந்ததால் அவருக்கு ஜலதோஷம் பிடித்துக் கொண்டுவிடுமே, அதனால் சென்னை திரும்பியதும் படப் பிடிப்புகளுக்கு இடைஞ்சல் ஏற்படுமே என்று இலங்கை மக்களும் நினைக்கவில்லை, மக்கள் திலகமும் எண்ணவில்லை!

ஈழம், எம்.ஜி.ஆருக்குச் சரித்திரம் காணாத வரவேற்பு அளித்துக் கௌரவித்தது. சுமார் பத்து மைல் தொலைவு மோட்டாரில் ஊர்வலம் வந்தார் எம்.ஜி.ஆர். கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம். எனவே, ஜீப் கார் ஊர்ந்துதான் வரவேண்டிய திருந்தது. "மக்களை எங்களால் கட்டுப்படுத்த இயலவில்லை!" என்று பகிரங்கமாகப் போலீசார் ஒப்புக் கொண்ட இடம் ஈழமாகும்! அங்கு எம்.ஜி.ஆர்., கட்டுக்கடங்காத கூட்டம் காரணமாக ஒருசில நிமிஷங்களே பேசினார்.

என்றாலும் மக்களின் அன்புக் கட்டளை அவரை மேலும் பேச வைத்துவிட்டது. எனவே ஒரு மணி நேரம் பேசினார் அவர்.

இந்த ஓர் இடத்தில்தான் அவர் தி.மு.க. என்ற சொல்லை உச்சரித்தார்! "இந்தக் கூட்டத்தைப் பார்த்தால், இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெறுகிற திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் ஒன்றில் நான் பேசுவதுபோல் உணருகிறேன்" என்றார் எம்.ஜி.ஆர்.

பொதுவாக சினிமா ரசிகர்கள், நடிகர் நடிகைகளிடம் கையெழுத்து வாங்குவார்கள். ஆனால் இலங்கையில் எம்.ஜி.ஆரைப் பல சினிமா நடிகர் நடிகைகள் ஆர்வத்தோடு சந்தித்து அவரிடம் 'ஆட்டோகிராப்' வாங்கினார்கள்! இதிலும் ஒரு புரட்சி எசய்துவிட்டு வந்திருக்கிறார் நம் புரட்சி நடிகர்!

எம்.ஜி.ஆர். தமது உள்ளத்தை இலங்கையில் வைத்து விட்டு வெறும் மனிதராகவே இங்கு வந்திருக்கிறார். எம்.ஜி. ஆர். அங்கு இவரது கூட்டங்களுக்கு வசூலான தொகைகளை அவர்களுக்கே வழங்கிவிட்டு வந்திருக்கிறார். இது மட்டுமா? தமது கைப்பணத்தை வேறு நிறைய அங்குச் செலவழித்துவிட்டு வந்திருக்கிறார்.

தொகுப்பு : திண்டுக்கல் டி.எம். அர்ஜுனன்

# எம்.ஜி.ஆர். பேசினால் எத்தனையோ பொருளுண்டு



ஒரு சமயம் சென்னையில் எம்.ஜி.ஆர். தலைமையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விழா நடந்தது.

அதில் பேசிய ஒருவர், "கொலை வாளினை எடடா என்று, வன்முறையைத் தூண்டுவது போல் பாரதிதாசன் பாடி இருக்கலாமா?" என்று கேட்டார்.

அதற்கு எம்.ஜி.ஆர். பதில் தந்தார். 'புரட்சிக் கவிஞரின் பாடல் வரியில் ஒரு பகுதியைக் கூறி வினா எழுப்புவது சரியல்ல! 'கொலை வாளினை எடடா! மிகக் கொடியோர் செயல் அறவே' என்று புரட்சிக் கவிஞர் கூறிய முழு வரியையும் கவனிக்க வேண்டும். 'கொடியோர் செயலைத் தடுக்க' என்றுதான் அவர் கூறுகிறார். அதாவது, கொடிய மனிதனை வீழ்த்த என்று கூடச் சொல்லாமல், அவன் செயலைத் தடுக்க என்று தெளிவாக அவர் கூறியிருப்பதை மறந்துவிடக் கூடாது! அவர் வன்முறையைத் தவிர்த்து, தீயோரையும் நல்லோர் ஆக்கி வாழும் முறையையே சொல்கிறார்!' என்று எம்.ஜி.ஆர். தெளிவுபடுத்திக் கைத்தட்டலைப் பெற்றார்.

* * * * *

அது 1980-ஆம் வருடம்! மத்தியில் ஆண்டு வந்த ஜனதா அரசை ஜனாதிபதி சஞ்சீவி ரெட்டி, எடுத்தேன் - கவிழ்த்தேன் என்கிற மாதிரி எதிர்பாராமல் டிஸ்மிஸ் செய்த அன்று, தமிழக அரசு விழா ஒன்று ஏற்கெனவே செய்த ஏற்பாட்டின்படி கலைவாணர் அரங்கில் நடந்தது.

அதில் கலந்து கொண்டு பேசிய எம்.ஜி.ஆர்., 'இன்று மத்தியில் ஆட்சி செய்து வந்த அரசு கலைக்கப்பட்டிருக்கிறது. அரசியலில் நாம் எதிர்பார்க்காத ஏதேதோ சம்பவங்கள் நடக்கும் சூழ்நிலையில், இப்போது தலைவர் காமராஜர் நம்மிடையே இல்லையே என நான் எண்ணிப் பார்க்கிறேன். இன்று அவர் வாழ்ந்திருந்தால், இந்தக் கலைப்பு நிகழ்ச்சியே நடந்திருக்காது' என்று கூறினார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த நாம் எண்ணினோம், 'இப்போது காமராஜர் இருந்தால் இதை எப்படித் தடுத்திருக்க முடியும்?' என்று! ஆனால் சற்று நேரத்திற்குப் பின்னர்தான் எம்.ஜி.ஆர். கூறியதன் உட்பொருள் விளங்கியது.

சஞ்சீவிரெட்டியைத் தட்டிக் கேட்கும்படி இன்று யாருமில்லை! ஆனால் காமராஜர் இருந்திருந்தால், சஞ்சீவி ரெட்டி அவரிடம் அடங்கிப் போயிருப்பார். இதையே எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருக்கிறார்.

* * * * *

அது 1968 என்று நினைவு! செல்வி ஜெயலலிதா நாட்டிய நிகழ்ச்சி திருநெல்வேலி பாளையங்கோட்டையில் எம்.ஜி.ஆர். தலைமையில் நடைபெற்றது.

எம்.ஜி.ஆர். பேசும்போது - வாழ்வதோ, மறைவதோ நமது கையில் இல்லை என்பதற்கு ஓர் அரிய நிகழ்ச்சியைக் கூறினார். அவர் சிறிது காலத்திற்கு முன்தான் சுடப்பட்டு மறுபிறவி எடுத்தது போல நலத்துடன் மீண்டு இப்போது பொதுநிகழ்ச்சியில் கலந்து கொள்வதால் எம்.ஜி.ஆர். கூறியது அனைவர் மனத்தையும் தொட்டது. எம்.ஜி.ஆர். கூறியது இதுதான்....

'நான் நேற்று சென்னையில் என் வீட்டில் கைகழுவும் பேஸினில் கையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த போது, அந்தக் கோப்பையில் ஒரு பூச்சி விழுந்து தண்ணீரில் தத்தளித்தது. அந்தப் பூச்சியைக் காப்பாற்றலாமே என்ற எண்ணத்தில் கையினால் அதைப் பிடித்து வெளியே பறக்க விட்டேன். மறுபடி நான் கைகழுவி முடித்துத் திரும்பும்போது 'களுக்' என்று என் அருகே ஏதோ ஓசை கேட்டது. என்ன வென்று பார்த்தேன். நான் காப்பாற்ற நினைத்து வெளியே எடுத்து விட்டேனே, அந்தப் பூச்சியை சுவரில் இருந்த பல்லி ஒன்று கவ்விக் கொண்டிருந்தது. அப்போதுதான் நினைத்தேன். 'நான் நினைத்தபடி இதைக் காப்பாற்றிவிட முடிந்ததா? மனிதன் கையில் என்ன இருக்கிறது? நம்மை மீறி ஒரு சக்தி நம்மை ஆட்டிப் படைக்கிறது' என்று உணர்ந்தேன்!'

என எம்.ஜி.ஆர். கூறி முடித்தபோது, அந்தப் பேச்சிலே மக்கள் ஐக்கியப்பட்டு விட்டதை அங்கு நிலவிய மவுனம் காட்டியது!

**வசந்தம் - தினகரன் ஞாயிறு மலரில்**
**சின்ரா எழுதியது. 16 அக்டோபர், 1994**

# ஐம்பதிலும் (அறுபதிலும்) ஆக்ஷன் வரும்!



வேட்டைக்காரன்
- எம்.ஜி.ஆர்., ராதாவுடன்



நேற்று இன்று நாளை





ரிக்ஷாக்காரன் - மனோகர், பத்மினியுடன் எம்.ஜி.ஆர். (இரு படங்களிலும் எத்தனை வித்தியாசம் என்பதைக் கண்டுபிடியுங்கள்)



பல்லாண்டு வாழ்க



பெங்களூரில் *1994*-ல் 'படகோட்டி' வந்த போது அந்த படத்தின் கட்-அவுட்டையும் மாலைகளால் அலங்கரித்து விட்டார்கள்.



**சிவாஜி தியேட்டரில் எம்.ஜி.ஆர். படம்!**

**சி**வாஜிக்கு சொந்தமான சென்னை சாந்தி தியேட்டரின் முதல் மாடியில் முன்பு எல்லா நடிகர்கள் – நடிகையர் படங்களும் மாட்டப்பட்டிருந்தன. இப்போது அவை எல்லாமும் எடுக்கப்பட்டு விட்டன. ஆனால், தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், இவர்களுடன் எம்.ஜி.ஆரது படமும் அப்படியே உள்ளன. இவற்றுக்கு வண்ண மாலைகளும் அணிவிக்கப்பட்டுள்ளன.



பெங்களூரில் *1993*-ல் 'உலகம் சுற்றும் வாலிபன்' *11* தியேட்டர்களில் திரையிடப்பட்டது. லட்சுமி தியேட்டரில் எம்.ஜி.ஆர். கட்-அவுட்டுக்கு மாலையணிவிக்க ஏற்பட்ட செலவு மட்டுமே ரூ. *10* ஆயிரத்திற்கும் மேல்.



பெங்களூரில் 1986–ல் 'குடியிருந்த கோயில்' திரையிடப்பட்டபோது லாவண்யா தியேட்டரில் 600 நட்சத்திர தோரணங்களைக் கொண்டு அலங்கரித்திருந்தார்கள்.



உரிமைக்குரல்



'மாட்டுக்கார வேலன்'
படத்தில் லட்சுமி
யுடன் எம்.ஜி.ஆர்.



'ஒளிவிளக்கு'

# பாவம் ஓரிடம், பழி ஓரிடம்!

எனது தயாரிப்பில் எம்.ஜி.ஆர். நடித்து வெளிவந்த 'தாய்க்குப் பின் தாரம்' படத்திற்குப் பிறகு வரிசையாக அவருக்குப் பல படங்கள் வந்து குவிந்தன.

இடையிலே சில படங்களை நான் தயாரித்து வெளியிட்டேன். என் படங்களில் அவர் நடிக்கவில்லையே தவிர, அவரது மானசீகமான ஆசியும் ஆதரவும் வழக்கம் போல் இருந்து கொண்டுதான் இருந்தன. அதைச் செயலிலும் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு அடுத்து வந்தது.

1961-ல் 'தாய் சொல்லைத் தட்டாதே' படத்தை ஆரம்பித்தேன். அதில் கதாநாயகனாக நடிக்க வைப்பதற்காக அவரைப் போய்ப் பார்த்தேன்.

'தாய்க்குப் பின் தாரம்' படத்திற்காக நான் போன போது என்ன சொன்னாரோ அதையேதான் இப்போதும் சொன்னார்.

மூன்றே மாதங்களில் இப்படத்தை எடுக்க வேண்டும் என்று நான் திட்டமிட்டிருப்பதைச் சொன்னேன்.

ஜூலை மாதம் 12-ம் தேதி அதற்குப் பூஜை போட்டோம். 12-13 இரண்டு தேதிகளிலும் அவரும், சரோஜாதேவியும் வந்து நடித்தார்கள்.

'எம்.ஜி.ஆரைப் போட்டால் படங்கள் சீக்கிரம் முடியாது, தொல்லைகள் தரும் நடிகர் அவர்' என்ற வீண் பிரசாரம் பலமாகப் பரவிக் கொண்டிருந்த சமயம் அது.

இரண்டு நாட்கள் படப்பிடிப்பை நடத்திவிட்டு நான் இருப்பதைப் பார்த்த சிலர் என் படத்தைப் பற்றிக் கேட்ட போது, செப்டம்பரில் வந்து எம்.ஜி.ஆர். முடித்துத் தருவதாகச் சொல்லியிருப்பதைச் சொன்னேன். அவர்கள் என்னைப் பார்த்துக் கிண்டலாகச் சிரித்தார்கள். சிலர் நான் ஏமாந்து விடப் போகிறேன் என்று எச்சரிக்கை செய்தார்கள்.

ஆகஸ்ட் முப்பத்தோரு நாட்களும் உருண்டோடின. செப்டம்பர் மாதம் காலை ஏழு மணிக்கெல்லாம் என் செட்டில் மேக்கப்புடன் நின்றார் எம்.ஜி.ஆர்.

காலை ஏழு மணி முதல் இரவு 9 மணி வரை என்று சேர்ந்தாற்போல் அவர் என் படத்தில் வேலை செய்வதைப் பார்த்த இவர்கள், 'நீங்க சொன்னபடி படத்தை முடிச்சிடுவீங்க' என்றார்கள்.

இந்தச் சர்ட்டிபிகேட்டைக் கேட்டும் நான் மகிழ்ந்துவிடவில்லை!

'தாய் சொல்லைத் தட்டாதே' படத்தைத் தொடர்ந்து எனது நான்கு படங்களில் நடித்திருக்கிறார் அவர். அவ்வளவும் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட படங்கள்.

படத்தின் ஆரம்ப தினத்தன்றே ரிலீஸ் தேதியையும் கொடுத்துவிட்டு, எம்.ஜி.ஆரையும் நடிக்க வைத்து படத்தை முடித்து வெளியிட்டு விடுகிறாரே, அப்படி இந்த தேவரிடம்



'மதுரை வீரன்'

என்னதான் வசியம் இருக்கும் என்று பலர் பேசிக் கொள்வதை நானே கேட்டிருக்கிறேன்.

என்னிடம் வசியம் எதுவும் கிடையாது! வேலையை நான் ஒழுங்காகச் செய்கிறேன்.

ஒன்று மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்!

பல நாட்கள், அவர் படப்பிடிப்புக்கு நாட்களைக் கொடுத்து விட்டு, பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் அதை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் வீணடித்து விட்டதை நான் அறிந்திருக்கிறேன். "சரியான திட்டமின்றி வரும் இவர்கள் என்னை



'காவல்காரன்' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆரைக் காண வந்த தேவர்

வீணே குறை கூறுகிறார்களே" என்று இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மனம் குமுறியிருக்கிறார் அவர். "பழி ஓரிடம், பாவம் ஓரிடம்" என்ற பழமொழியின் உண்மையை இம்மாதிரியான சந்தர்ப்பங்களில்தான் நான் அறிந்தேன்.

எனக்கு மட்டுமில்லை, நல்ல திட்டத்தோடு, நாணயத்தோடு யார் வந்தாலும் எம்.ஜி.ஆர். படத்தை நிச்சயம் முடித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறார். இதிலே சின்னவர்கள், பெரியவர்கள், பழகியவர்கள், பழகாதவர்கள் என்றெல்லாம் வித்தியாசமே அவர் பாராட்டுவதில்லை. 'தொழில் வேறு - நட்பு வேறு' என்று சொல்லி வரும் அவர், "நான் இரண்டையுமே ஏமாற்ற விரும்புவதில்லை" என்று அடித்துச் சொல்வார்.

"எம்.ஜி.ஆர். கதை அமைப்பில் குறுக்கிடுவார், படப்பிடிப்பில் வந்து வசனத்தை மாற்றச் சொல்லுவார். காட்சியைத் திருத்துவார்" என்றெல்லாம் ஒரு புகார் இருந்து வருகிறது. என்னைப் பொறுத்த அளவில், அவர் இம்மாதிரி எந்தச் சந்தர்ப்பத்திலும் நடந்தது கிடையாது.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை! கதையை அவர் ஆரம்பத்தில் படிக்கிறார். தனக்கேற்றதாக இல்லையென்று பட்டால், திருத்தி அமைக்கும்படிச் சொல்கிறார். அப்படிச் செய்ய இயலாவிட்டால் அந்தக் கதையில் நடிப்பதையே ஒதுக்கிவிடுவார் அவர்.

கஷ்டம் என்று யார் வந்து அவரிடம் முறையிட்டாலும் உடனே அவர் அந்த ஆளை மேலும் கீழுமாகப் பார்ப்பார். அவர் சொல்வது உண்மை என, தனக்குப் பட்டால் யார் தடுத்தும் உதவி செய்வதை அவர் நிறுத்த மாட்டார்!

எம்.ஜி.ஆர். நாஸ்திகரல்ல என்றுதான் நான் நினைத்து வருகிறேன்.

மருதமலையில் நான் வேண்டிக் கொண்டபடி போட்ட மின்விளக்கை ஏற்றி வைத்துவிட்டுப் பேசிய எம்.ஜி.ஆர். தன் கொள்கை பற்றி விளக்கம் கொடுத்தார்.

"தெய்வம் இல்லை என்று நாங்கள் சொன்னதில்லை. அதேபோல் கோயிலுக்குப் போகாதீர்கள் என்று நாங்கள் யாரையும் தடுத்ததுமில்லை. கடவுளின் பெயரால் நடக்கும் அக்கிரமங்களையே கண்டிக்கிறோம். நம்மை எல்லாம் மீறிய சக்தி ஒன்று இருக்கிறது என்றும், அதுவே கடவுள் என்றும் நாங்கள் கருதுகிறோம்" என்றார்.

சமீபத்தில், சென்னையில் தியாகராய நகரில் நான் புதிய வீட்டிற்கு கிரகப் பிரவேசம் செய்தேன்.

கிரகப் பிரவேசத்தன்று காலை பூஜை நடந்து கொண்டிருந்தது. சர்க்கரைப் பொங்கல், பானையில் பொங்கிக் கொண்டிருந்தது. எம்.ஜி.ஆர். திடுதிப்பென்று உள்ளே வந்து நின்றார்.

"வாங்க வாங்க! பால் பொங்குது. நல்ல நேரத்திலேதான் உங்க காலை வச்சிருக்கீங்க" என்று என் தாயார், வாய் நிரம்ப அழைத்தார். எம்.ஜி.ஆர். அங்கேயே தரையில் உட்கார்ந்து கொண்டார். பொங்கலைச் சாப்பிட்டு விட்டுப் போய்விட்டார்.

நான் அழைக்காமலேயே, விஷயத்தைத் தெரிந்து, என் வீட்டிற்கு வந்து, என்னை வாழ்த்திவிட்டுப் போன அந்த மனித தெய்வத்தின் தன்மையை நான் என்னென்பது? அதனால்தான் முருகனுக்கு அடுத்தபடியாக நான் எம்.ஜி.ஆரைப் போற்றி வருகிறேன்! *

**- 1965-ல் சாண்டோ சின்னப்பா தேவர்.**

# எம்.ஜி.ஆர். நடித்து வெளிவராத படங்கள் மற்றும் சில தகவல்கள்

எம்.ஜி.ஆர். நடிக்க கவிஞர் கண்ணதாசன் தயாரிக்க சரித்திரப் படமாக உருவாகவிருந்தது 'பவானி'. சில நாட்கள் படப்பிடிப்போடு படம் நின்று போனது.

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திற்கு முதலில் வைக்கப்பட்டிருந்த தலைப்பு 'உலகம் சுற்றும் தமிழன்'. இதன் தொடர்ச்சியாக விளம்பரப்படுத்தப்பட்டப் படம். 'கிழக்கு ஆப்பிரிக்காவில் ராஜு'. இதற்காக எம்.ஜி.ஆர். ஆப்பிரிக்க நாடுகளுக்கெல்லாம் சென்று வந்தார். படப்பிடிப்பிற்கான இடங்களைத் தேர்வு செய்வதற்காக அவர் பயங்கரமான காட்டுப் பகுதிகளுக்குச் சென்ற போது, அவரது ஜீப்பை வழி மறித்து ஒரு சிங்கம் நின்றதாக பத்திரிகைகளி லெல்லாம் செய்திகள் இடம் பெற்றன.



'அரச கட்டளை' தொடங்கிய போது அதில் எம்.ஜி.ஆருடன் சில காட்சிகளில் நடித்தவர் சாவித்திரி. நடுவில் படம் நின்று போய் மீண்டும் தொடங்கப்பட்ட போது சாவித்திரி அதில் இல்லை.



'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் ஜமுனா. ஆனால் அவருக்கு முன் எம்.ஜி.ஆருடன் ராஜசுலோசனா நடித்து சில காட்சிகள் படமாக்கப்பட்டன.

எம்.ஜி.ஆர். தனது சொந்தத் தயாரிப்பாக உருவாக்க விருந்த படம் 'கங்கை முதல் கிரெம்ளின் வரை'. சோவியத் ரஷ்யாவுடன் இணைந்து எடுக்கப் படவிருந்த இந்த படத்திற்காகத் தான் 1974-இல் எம்.ஜி.ஆர். ரஷ்யா சென்று வந்தார். ஆரம்ப கால திட்டங்களோடு படம் நின்று போனது.

யோகானந்த் டைரக்ஷனில் ராஜசுலோசனா, எம்.என். ராஜம், நம்பியார், ஈ.வி. சரோஜா ஆகியோருடன் எம்.ஜி.ஆர்., 'மலைநாட்டு இளவரசன்' என்ற டார்ஜான் படமொன்றில் நடிப்பதாக அறிவிப்பொன்று வெளிவந்தது. அவ்வளவு தான்.

தேவர் பிலிம்ஸ் தயாரிப்பில் எம்.ஜி.ஆர். நடிக்கவிருந்த முதல் வண்ணப்படம் 'தந்தையும் மகனும்'. தந்தையும் மகனுமாக எம்.ஜி.ஆர். இரட்டை வேடத்தில் அதில் நடிப்பதாக இருந்தார். ஆனால் படம் பூஜையோடு நின்று போனது. இதில் தந்தைக்கு ஜோடியாக பத்மினியும், மகனுக்கு ஜோடியாக சந்திரகலாவும் நடிப்பதாக இருந்தார்கள்.

பழம் பெரும் நடிகை யூ.ஆர். ஜீவரத்தினம் தயாரிப்பில் எம்.ஜி.ஆர். நடிக்கவிருந்த படம் 'சிரிக்கும் சிலை'. எம்.ஜி.ஆர். மேற்பார்வையில் வளரும் படம் என்று தான் இந்த விளம்பரமும் சொல்கிறது. ஆனால் படம் எந்த நிலையில் நின்றது என்பது கேள்விக் குறியான விஷயம்.

எம்.ஜி.ஆரால் நீண்ட காலமாகவே தயாரிக்கப்பட வேண்டுமென்ற திட்டத்தில் இருந்த படம் 'கல்கி'யின் 'பொன்னியின் செல்வன்'. பழம் பெரும் டைரக்டர் கே.சுப்ரமணியத்தின் மகளும், பரத நாட்டியத்தில் புகழ் பெற்ற பெண்மணியுமான பத்மா சுப்ரமணியம் நடிக்க வேண்டுமெனறு எம்.ஜி.ஆர். முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால் எதுவும் கை கூடாததால் அந்த திட்டம் கருப்பெறவில்லை. கமல்ஹாசன் தொலைக்காட்சியில் இதனைக் கொண்டு வரவிருக்கிறார்.

'காவல் காரன்' படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட தலைப்பு 'மனைவி'. இதில் எம்ஜி.ஆருக்கு ஜோடியாக நடிக்கவிருந்தவர் சரோஜாதேவி. பூஜையிலும் அவர் தான் கலந்து கொண்டார்.

'நீதிக்குத் தலைவணங்கு' படத்திற்கு முதலில் வைக்கப்பட்டிருந்த தலைப்பு 'யாரையும் அழ வைக்காதே'.

'ஆசைமுகம்' படத்திற்கு 'மணப்பெண்' என்றும் பின்னர் 'மக்கள் நண்பன்' என்றும் தலைப்புகள் வைக்கப்பட்டிருந்தன.

'குடியிருந்த கோயில்' படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட தலைப்பு 'இரு துருவங்கள்'. அப்புறம் 'சங்கமம்'.




'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்திற்கு போட்டியாக கவிஞர் கண்ணதாசன் தயாரிக்கவிருந்த படத்தின் பெயர் 'ஊமையன் கோட்டை'. படத்தின் இயக்குநர் யார் என்று முடிவு செய்யாமல் செய்யப்பட்ட விளம்பரம் தான் மேலே உள்ளது. இதுவும் படப்பிடிப்பிற்கு செல்லாத நிலையிலேயே நின்று போனது.

## ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே!

"ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே" என்று நான் குறிப்பிடுவதை ஒரு சிலர் பொருத்தமாக இருப்பதாகக் கருதலாம். வேறு சிலர் இது பொருத்தம் இல்லை என்றும் நினைக்கலாம்.

என்னைப் பொறுத்தவரை நான் சுடப்பட்டு மருத்துவ மனையில் இருந்தபோது என் உடலிலிருந்து நிறைய ரத்தம் விரயமாகியிருந்தது.



அப்போது என் உடலில் ரத்தம் செலுத்தி என்னை வாழ வைக்க ஆவன செய்தார்கள் மருத்துவ நிபுணர்கள். இதைக் குறிப்பிடுவது எனது நீங்காக் கடமையாகும்.

அந்த ரத்தத் துளிகள் என் உடலில் இருப்பதால்தான் நான் மனிதனாக உலவுகிறேன். அப்போது என் உடலில் செலுத்தப்பட்ட ரத்தம் யாருடைய ரத்தம் என்பது எனக்கும் தெரியாது.

ஆனால், அந்த ரத்தத் துளிகள்தான் என்னை மீண்டும் மனிதனாக ஆக்கியது.

அந்த ரத்தம் பலருடைய ரத்தமானதால் அனைவரையுமே நான், 'என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே' என்று உரிமையுடன் அழைக்கிறேன்.

அதனை நினைவுபடுத்திக் கொள்ளும் வகையில் அதன் பிறகு கடிதம் எழுதும்போதும் அல்லது மேடையில் பேசும் போதும் எனது உடன்பிறப்புக்களை 'ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே' என்று குறிப்பிடுகிறேன். **- எம்.ஜி.ஆர்.**

# பகைமை பாராட்டாத எம்.ஜி.ஆர்.!

எம்.ஜி.ஆருக்கு 'மக்கள் திலகம்' என்ற பட்டம் சூட்டியவர் மறைந்த கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன். இருவருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. அது அவர்கள் அணிந்த கறுப்புக் கண்ணாடி. அது அவர்களை மக்கள் மத்தியில் அடையாளம் காட்டிய பொருளாகவும் இருந்தது. ஒரு சமயம் இருவருமே ஒற்றுமையுடையவர்களாக இருந்தார்கள். ஒருவர் திறமையை ஒருவர் மதித்துப் போற்றி வந்தார்கள். அந்தக் காலத்தில் எம்.ஜி. ஆருக்கு எதிராகவே பெரும்பாலான பத்திரிகைகள் இருந்த போது 'கல்கண்டு' போல் ஒரு சில இதழ்களே ஆதரவாக இருந்



தன. ஆதரவென்றால் அது அழுத்தமானது, கலப்படமில்லாதது, மிகையில்லாதது.

எத்தனை பேர் கண் பட்டதோ.. எம்.ஜி.ஆர். - தமிழ்வாணன் உறவில் விரிசல் ஏற்பட்டது. 'கல்கண்டு'ம் எம்.ஜி.ஆருக்கு எதிராக மாறியது. இருவருக்கும் பகைமை வளர்ந்தது. அது எம்.ஜி.ஆர்., 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திற்காக ஜப்பானில் 'எக்ஸ்போ' கண்காட்சியில் படப்பிடிப்பு நடத்திக் கொண்டிருந்த போதும் எதிரொலித்தது. ஜப்பானுக்கு வந்திருந்த தமிழ்வாணனும், எம்.ஜி.ஆரும் எதிர்பாராதவிதமாகச் சந்தித்துக் கொள்ள, அவர்கள் மனத்தினுள் இருந்த பகைமை வெறுப்பு நெருப்பாக வெடித்துச் சிதறியது. இருவரும் ஒருவருக்கொருவர் கடுமையாக வாதம் செய்து கொண்டனர். இறுதியில் 'நீயா?' 'நானா?' என்று பார்த்து விடுவதாகச் சவால் விட்டுக் கொண்டனர். இதை எம்.ஜி.ஆரே, 'பொம்மை' இதழில் எழுதிய 'திரை கடலோடி திரைப்படம் எடுத்தோம்' என்ற தொடர் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தப் பகை தீராமலே தமிழ்வாணன் 1977-ல் இயற்கை எய்தினார். அடுத்து அவரது மூத்த புதல்வர் லேனா தமிழ்



முதல்வர் எம்.ஜி.ஆருடன் 'கல்கண்டு' ஆசிரியர் லேனா தமிழ்வாணன்

வாணன் 'கல்கண்டு' ஆசிரியரானார். அவரது அணுகுமுறை தந்தையிடமிருந்து மாறுபட்டிருந்தது. தன் எழுத்தில் அவர் கடுமை காட்டினாலும், பிறருடன் நட்பு என்பதோடு எழுத்தைச் சம்பந்தப்படுத்தவில்லை. நட்பு வேறு, எழுத்து வேறு என்பது அவர் கையாண்ட பாணி.

1983 - ஜூன் 3-ல் லேனாவின் தம்பி ரவிதமிழ்வாணனின் திருமணம், அவர்களது சொந்த ஊரில் நடைபெற்றது. 24-ந்தேதி சென்னையில் ஏவிஎம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் வரவேற்பு நடத்தப்பட்டது.

இந்தத் திருமண நிகழ்ச்சியையொட்டி அன்று முதல்வராக இருந்த எம்.ஜி.ஆரைச் சந்தித்து அழைப்பிதழ் தர விரும்பினார் லேனா தமிழ்வாணன். என்னதான் புகழ்பெற்ற தந்தையின் மகனாக இருந்தாலும், முதல்வர் எம்.ஜி.ஆருடன் சுமுகமான அறிமுகம் வேண்டுமே.... என்று யோசித்த லேனாவுக்கு உதவ முன்வந்தார் அறிவுடைநம்பி எம்.எல்.சி. குடும்ப நண்பரான அவர் லேனாவை எம்.ஜி.ஆரிடம் அழைத்துச் சென்றார்.

"இவர் தமிழ்வாணனின் மகன் லேனா தமிழ்வாணன். 'கல்கண்டு' இதழின் ஆசிரியர்" என்று அறிவுடைநம்பி அறிமுகம் செய்து வைத்தபோது, எம்.ஜி.ஆர்., சிரித்தபடியே லேனா

வின் முதுகில் தட்டிக் கொடுத்தார். லேனா தன் தம்பி ரவியின் திருமணம் பற்றிக் கூறி, அழைப்பிதழைக் கொடுக்கையில், "கடந்த கால விஷயங்களைப் பற்றி மனதில் கொள்ளாமல் நீங்கள் இந்தத் திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அதற்கு எம்.ஜி.ஆர்., பதிலேதும் சொல்லாமல் சிரித்தார்.

எம்.ஜி.ஆரது சிரிப்பைக் கொண்டு என்ன அர்த்தம் எடுப்பது என்று குழப்பம் லேனாவுக்கு. திருமண வரவேற்பு நாள் நெருங்க நெருங்க எம்.ஜி.ஆர். வருவாரா, மாட்டாரா என்ற சஸ்பென்ஸ் தவிப்பில் இருந்தார் அவர். கடைசியாக மூன்று நாட்களுக்கு முன்பாக 'எம்.ஜி.ஆரை மெட்ராஸ்-ஐ பற்றிக் கொண்டிருக்கிறது' என்ற தகவல் கிடைத்தது. 'இனி எம்.ஜி.ஆர். வந்த மாதிரிதான்' என்று அந்த நினைவை மனதிலிருந்து ஒதுக்கி வைத்தார்.

வரவேற்பு நாளன்று இரவு 7.00 மணிக்கு ராஜேஸ்வரி திருமண மண்டபத்திற்கு வந்த மயிலாப்பூர் பகுதி காவல்துறை ஆய்வாளர் லேனா தமிழ்வாணனிடம், "முதல்வர் எம்.ஜி.ஆர். இன்னும் சிறிதுநேரத்தில் இங்கு வரவிருக்கிறார்" என்ற தகவலைத் தெரிவித்துவிட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்தார். பாதுகாப்பென்றால் நான்கைந்து போலீஸார் மட்டுமே.

எம்.ஜி.ஆர். வருகிறார் என்றதுமே லேனாவுக்கு உற்சாகம் கூடுதலாகிவிட்டது. சரியாக 7.30 மணிக்குத் திருமண மண்டபத் திற்கு வந்த எம்.ஜி.ஆர்., மணமக்களை வாழ்த்தி சந்தனச் சிலையொன்றைப் பரிசளித்தார். அப்போது ஏ.வி. ரமணன், மெல்லிசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அதை ரசிக்கின்ற நோக்கில் எம்.ஜி.ஆர். முன் வரிசையில் அமர்ந்து கொண்டார்.

"அப்போது ஹாக்கியில் ஒலிம்பிக் விருதுபெற்ற பாஸ்கரன், எம்.ஜி.ஆரிடம் பேச வேண்டுமென்று விரும்பினார். அதற்காக என்னிடம் சொன்னபோது, நான் எம்.ஜி.ஆரிடம் சென்று பாஸ்கரனின் விருப்பம் பற்றிக் கூறினேன். 'வரச் சொல்லுங் களேன்' என்றார். அதன்படி பாஸ்கரனிடம் சிறிதுநேரம் பேசியபின் எம்.ஜி.ஆர். புறப்படுவதற்கு எழுந்தார். அவரிடம் சாப்பிட்டுவிட்டுப் போக வேண்டுமென்று கேட்டுக் கொண் டேன். தனது இயலாமையைச் சொல்லி நாசூக்காக மறுத்தார். 'பாயசமாவது சாப்பிடுங்கள்' என்றேன். அதுவும் வேண்டா மென்றார். உடன் சென்று வழியனுப்புகையில், "பகைமை பாராட்டாது திருமண வரவேற்பில் நீங்கள் கலந்து கொண்டதை நினைத்துப் பெருமைப்படுகிறோம்" என்றேன். "பழையதையெல் லாம் நான் மனதில் வைத்துக் கொள்வதில்லை" என்று கூறிய படியே புறப்பட்டார். அன்றைக்கு எங்களது நிகழ்ச்சியில் சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக இருந்துவிட்டுப் போனார். சாதாரணமாகப் பத்திரிகையாளர் குடும்பத்து நிகழ்ச்சிகளில் அவ்வளவு நேரம் அவர் இருந்தது இல்லை என்று கேள்விப் பட்டேன். இதிலிருந்து எங்கள் தந்தையின் மீது அவருக்குள்ள மதிப்பு என்னவென்று புரிந்தது" என்றார் லேனா தமிழ்வாணன்.

**- வி.எஸ்.ஆர்.**

*With Best Compliments From:*

# Harish L. Metha

*C.L. Baid Metha Trust*

**"Baid Metha Complex"**
**183, Mount Road, Saidapet**
**Madras - 600 015.**



★ எம்.ஜி.ஆருக்கு சிறுநீரகம் தானமளித்த லீலாவதியின் திருமணத்தில் ஆர்.வெங்கட்ராமன், அண்ணா, சக்ரபாணி, எம்.ஜி.ஆர்.



★ இடமிருந்து வலமாக மு.கருணாநிதி, ஈ.வி.கே.சம்பத், அண்ணா, எம்.ஜி.ஆர்., வலதுகோடியில் சக்ரபாணி.



★ மூதாட்டியின் துயர் துடைக்கும்
முதல்வர் எம்.ஜி.ஆர்.








★ தனது பிளைமவுத் காருடன் எம்.ஜி.ஆர்.




★ வெளிப்புறப் படப்பிடிப்பிற்கு பயன்படுத்தும் தனது ஃபர்கோ வேன் முன்பாக எம்.ஜி.ஆர்.



தென்னிந்திய திரைப்பட ரசிகர் சங்க விழாவில் சிறந்த நடிகராக விருது பெறும் எம்.ஜி.ஆர்.!



★ அன்பில் தர்மலிங்கம், எம்.ஜி.ஆர்., கருணாநிதி, பி.ஆர்.பந்துலு.



★ கலைஞர்
மு.கருணாநிதி,
எம்.ஜி.ஆர்.,
டி.கே.சண்முகம்.



★ ராமாபுரம் தோட்ட இல்லத்தின் முன்பாக தாய்க்குலத்துடன் எம்.ஜி.ஆர்.



★ தி.மு.க. கட்சித் தொண்டர்கள் மத்தியில் எம்.ஜி.ஆர்., கீழே என்.வி.நடராசன், இரா.செழியன்.



★ எம்.ஜி.ஆர். நாடக மன்றம் நடத்திய பொங்கல் விழாவில் அயல் நாட்டுப் பார்வையாளர்கள். இடதுபுறம் இடுப்பில் கை வைத்துக் கொண்டிருப்பவர் எம்.ஜி.ஆர்.



★ டெல்லியிலுள்ள அண்ணல் காந்தி சமாதியில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தும் எம்.ஜி.ஆருடன், ஜானகி எம்.ஜி.ஆர். மற்றும் உதவியாளர்.



★ திருச்செங்கோட்டில் எம்.ஜி.ஆரின் தேர்தல் பிரச்சாரம்.



★ டைரக்டர் பி.ஆர்.பந்துலுவுடன் எம்.ஜி.ஆர்.



எம்.ஜி.ஆர்., மு.வரதராசனார்.



★ எம்.ஜி. சக்கரபாணியின் மூத்த மகன் எம்.சி.ராமமூர்த்தியின் திருமண விழாவில் எம்.ஜி.ஆர். மணமக்களை வாழ்த்திப் பேசுகிறார். அவரது பின்புறம் எம்.ஆர்.ராதா.



★ சிவாஜியுடன் எம்.ஜி.ஆர். அளவளாவல்.



★ சென்னை பொதுமருத்துவமனையில் நடந்த விழாவொன்றில் ஜானகி எம்.ஜி.ஆர்., எம்.ஜி.ஆர். (துப்பாக்கியால் சுடப்பட்டு குணமாகிய பின் கலந்து கொண்ட முதல் பொது நிகழ்ச்சி அது), எம்.ஜி.ஆரது குடும்ப டாக்டர் பி.ஆர்.சுப்ரமணியம்.



★ பரங்கிமலை தொகுதி வாக்காளர்களிடம் ஓட்டு கேட்கும் எம்.ஜி.ஆர்.



'நாடோடி மன்னன்' படத்திற்காக ராமாவரம் தோட்டத்து மர நிழலில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த எம்.ஜி.ஆருடன் கவிஞர் புத்தனேரி சுப்ரமணியம், எழுத்தாளர் சாண்டில்யன் (மொட்டைத் தலையோடு இருப்பவர்)



'தெய்வத்தாய்' பிரத்யேகக் காட்சியின் போது ஆர்.எம்.வீரப்பன், கே.ஆர்.ராமசாமி, எம்.ஜி.ஆர்., அண்ணா, அன்பழகன்.

ஜி.உமாபதியுடன்



(வலமிருந்து இடமாக)
எம்.ஜி.ஆர்., என்.டி.ராமராவ்,
சௌந்தரா கைலாசம்,
நீதிபதி கோகுலகிருஷ்ணன்,
மாதவன், முதல்வர்
கருணாநிதி, ப.உ.சண்முகம்.





என்.டி.ராமராவ், எம்.ஜி.ஆர்.,



கவர்னர் உஜ்ஜல் சிங்குடன் எம்.ஜி.ஆர்.



பாரதிராஜா, எம்.ஜி.ஆர்., பிரேம் நசீர்,
ஏ.வி.எம்.சரவணன்.

# கலை உலகின் வழிகாட்டி

**-அறிஞர் அண்ணா**



அண்ணாவை அமர வைத்து அவரது சிலை உருவாவதை பார்வையிடும் எம்.ஜி.ஆர்.

கலைஞர்கள் எல்லோருமே கலையுலகை நான்கு பக்கங்களும் இரும்புத் திரைகள் இட்ட ஒரு வீடாகக் கருதி, அதற்குள் வசித்து வந்தனர். அவர்கள் அரசியல் உலகை மட்டுமல்ல, வெளியுலகைக் கூட எட்டிப் பார்த்தும் அறியார்! இது தமிழகத்தின் தொன்று தொட்ட வழக்கமாகும்.

இந்த வழக்கத்தை இந்த இருபதாம் நூற்றாண்டில் இன்றைய பிற்பகுதியில்தான் ஒரு சில கலைஞர்கள் மீறினார்கள். இரும்புத் திரைகள் இட்டுக் கொண்டு வசித்து, அந்த 'கலைவீட்டில்' உள்ள பலகணி வழியாக வெளியுலகைச் சிறிது எட்டிப் பார்க்கத் தொடங்கினார்கள்.



அண்ணா, ராணி அண்ணாவுடன் எம்.ஜி.ஆர்.

சிலர் உள்ளே நின்றவாறே பார்த்தனர். சிலர் தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்த்தனர். அப்படி பார்த்தவர்களில் சிலர், தவறாகப் புரிந்து கொண்டு, தலையை உள்ளே இழுத்துக் கொண்டனர். சிலர் சந்தேக அச்சங் கொண்டு நின்றனர்.

ஆனால் அந்த கலைஞர்களுக்கெல்லாம் ஒரு 'வழிகாட்டி'யாக இருந்து விட்டவர் புரட்சி நடிகர்.

புரட்சி நடிகர் அந்த கலை வீட்டில் இருந்து பலகணி வழியாக எட்டிப் பார்த்ததுடன் நில்லாது- அரசியல் உலகுக்கும் தாவிப் புகுந்தார். அந்த எண்ணம் வருங்காலம் அற்ற கலைஞர்களுக்கும் மறுமலர்ச்சி தருவதாகும். அவருடைய அந்த செயல் புரட்சிகரமானது. மற்ற கலைஞர்களும் அரசியலில்- நாட்டு மக்களின் இதயங்களில்- பங்கு கொள்வதாகக் கூறுகிறார்கள். அவர்கள் எட்டிப் பார்த்ததில் அடிப்படை கோளாறு இருக்கிறது.

'புரட்சி நடிகர் வேண்டும் ஆதலால், அவர் புகுந்த அரசியலும் நமக்கு வேண்டும்' என்று புகுந்தனர் சிலர்.

'புரட்சி நடிகர் நல்லவர்; அத்னால் அவர் புகுந்துள்ள கட்சியும் நல்லதாகத்தான் இருக்கும்' என்று பங்கு கொண்டவர்கள் சிலர்.

'புரட்சி நடிகரின் தயவு நமக்கு வேண்டும். ஆகவே அவரது கட்சியின் கொள்கையும் நமக்கு வேண்டும்' என்று ஒப்புக் கொண்டனர் சிலர். புரட்சி நடிகரைப் பிடிக்காத காரணத்தால் 'எம்.ஜி.ஆர். சேர்ந்த கட்சி நமக்கு வேண்டாம்' என்று ஓடி விட்டவர்களும் இருக்கிறார்கள்.

## அவரே ஒரு கவிதை

நமது எம்.ஜி.ஆர் அவர்கள் பேசும் பொழுது, அழகும், உள்ள உணர்ச்சியும் உள்ளதுதான் 'கவிதை' என்று சொன்னார். இதைச் சொல்லும் போது நீங்கள் எல்லாம் கைதட்டி மகிழ்ந்தீர்கள். எதற்காக கைதட்டுகிறீர்கள் என்று எண்ணிப் பார்த்தேன். அப்போதுதான் அவர் தன்னைப் பற்றி பேசினார் என்று புரிந்தது. அது அவருக்குத் தான் பொருந்தும்.

-அறிஞர் அண்ணா,
(இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, சென்னை)



சென்னை தியாகராஜர் கல்லூரியில் எம்.ஜி.ஆர். படத்தை திறந்து வைத்துப் பேசும் அண்ணா.

பொதுவாக அகம், புறம் என்று கூறப்படுவனவற்றுக்குப் பல வகையான கருத்துக்களைக் கூறுகின்றனர். அவற்றில் எது சிறந்தது என்று வாதிடுகின்றனர். அவற்றுக்கு ரத்தினச் சுருக்கமாக ஒன்றைக் கூற வேண்டுமானால் 'எண்ணம் என்பது அகம்' என்றும், 'செயல் என்பது புறம்' என்றும் கூறலாம்.

தமிழ் மக்கள் அகத்தையும் புறத்தையும் சமமாகவே பாவித்து வந்துள்ளனர். அகத்துக்கு ஐநூறோ புறத்துக்கு முன்னூறோ அல்லது அகத்துக்கு முன்னூறு புறத்துக்கு ஐநூறோ பாடவில்லை தமிழன். 'அகநானூறு', 'புறநானூறு' என்றுதான் பாடினான். அகமும் புறமும் தமிழனுக்கு ஒரே எடை.

இவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு சிறந்து விளங்கும் நாடு என்றைக்கும் சிறப்பாக வாழ முடியாது.

உதாரணமாக, அக வாழ்க்கையில் சிறந்த நாடு கிரேக்கம்; புற வாழ்க்கையில் சிறந்தது எகிப்து. இவ்விரு நாடுகளின் நீடு புகழை அறியாதவர் சிலரே! ஆனால் அந்த 'நீடு புகழ்' இன்று எங்கே?

நமது நாடு அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் ஒருங்கே சிறந்து விளங்குவது. அந்த சிறப்பு தமிழனுக்கு இல்லை என்றால், தன் வீட்டில் பால் பொங்கியது போதாது என்று பிறரையும் ''பால் பொங்கிற்றா?'' என்று கேட்டிருக்க முடியுமா? அதனால்தான் இத்துணைச் சிறப்புகளைக் கொண்டிருக்கிறது இந்

## என் இதயக்கனி

எம்ஜி.ஆருக்கும் எனக்கும் இருக்கிற தொடர்பை நாடு அறியும். எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது என்னை நானே பாராட்டிக் கொள்வதாக கருதப்படும். உண்மை தானே. எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கியுள்ள கொள்கை எது என்பதை நாடு அறியும். முல்லைக்கு மணம் உண்டு என்பதை கூறவா வேண்டும்? இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர்பார்த்தனர். அது என் மடியில் வந்து விழுந்தது. என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்.

-அறிஞர் அண்ணா.

('நாடோடி மன்னன்' வெற்றி விழாவில் பேசியது)



ஆர்.எம். வீரப்பன் திருமணத்தின்போது தம்பதியருடன் அண்ணா, கே.ஆர். ராமசாமி, எம்.ஜி சக்ரபாணி, எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர்.

நாடு. ஆகவே தமிழனை 'ஈதல் இசைபட வாழ்ந்தான்' என்கின்றனர்.

இதனை நம் நடிகர்கள் மேற்கொள்ள வேண்டும். அகம் புறம் இரண்டிலும் சிறந்து விளங்க வேண்டும். 'நடிகரும் மக்கள் இனமே! அதுபோல் வாழ்வின் வளத்துக்கே கலை உதவ வேண்டும்' என்ற சீரிய நோக்கம் கொண்டார் புரட்சி நடிகர்.

'இந்த நோக்கம் தனக்கு மட்டும் இருந்தால் பயனில்லை; ஏனைய கலைஞர்களுக்குள்ளும் புக வேண்டும்; தான் பெற்ற இன்பத்தை அவர்கள் அடைய வேண்டும்; அதற்கு தானே முன்னோடியாக இருக்க வேண்டும்' என்று கருதி, தம்மை தடுத்தவர்- பகைத்தவர்- வெறுத்தவர் மத்தியில் அரசியலில் தாவிப் புகுந்தார்.

மக்களுக்கு உதவுகிறார்- உதவ வேண்டும் என்று துடிக்கிறார்- உதவி செய்து கொண்டே இருக்கிறார்.

ஆக அகத்திலும் (நடிப்பிலும்), புறத்திலும் (அரசியலிலும்) ஒருங்கே சிறப்பை எட்டிப் பிடிக்கிறார் எம்.ஜி.ஆர்.



சைக்கிள் ரிக்ஷா தொழிலாளருக்கு மழைக்கோட்டு அளிக்கிறார், எம்.ஜி.ஆர். நடுவில் அண்ணா.




எம்ஜி.ஆரது 'இடிந்த கோயில்' நாடக விளம்பரம்.

## ஒழுக்கத்திற்கு ஒரு நடிகர்

எம்.ஜி.ஆருக்கு இருக்கிற எதிர்ப்பு, இந்த நாட்டில் இன்று வேறு எந்த நடிகருக்குமே இல்லை! எம்.ஜி.ஆரை இன்று பல படாதிபதிகள் எதிர்க்கிறார்கள். பல நடிகர்கள் எதிர்க்கிறார்கள். பல ஸ்டுடியோ ஓனர்கள் எதிர்க்கிறார்கள். பல டிஸ்டிரிப்யூட்டர்கள் எதிர்க்கிறார்கள். பல கட்சிக்காரர்கள் எதிர்க்கிறார்கள். பல பத்திரிகை ஆசிரியர்கள் எதிர்க்கிறார்கள். இவ்வளவு எதிர்ப்புக்களையும் எம்.ஜி.ஆர். தாங்கிக் கொண்டிருப்பதற்கு இரண்டே இரண்டு காரணங்களே உள.

ஒன்று, ஒழுக்கம்; மற்றொன்று, மக்கள் சக்தி.

## ஒழுக்கம்

எம்.ஜி.ஆரைப் போன்ற ஒழுக்கமுள்ள ஒரு நாயக நடிகன் இன்று நாட்டில் இல்லை. ஒழுக்கமுள்ள நடிகர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் ஒழுக்கத்தில் தலைசிறந்த நடிகர் யார் என்றால், அது எம்.ஜி.ஆர்.தான்!

எம்.ஜி.ஆர். புகை பிடிப்பதில்லை. மது அருந்துவதில்லை. புகையிலை போடுவதில்லை. காப்பி, டீ குடிப்பதில்லை. தண்ணீர் கொடுத்தால் தூக்கித்தான் சாப்பிடுவார். எச்சிலைக் காரி உமிழ்வதில்லை. நகத்தைக் கடிக்க மாட்டார். இவர் நடித்த படங்கள் ஹிட் ஆனாலும் சரி, பட் ஆனாலும் சரி. இவரைப் பொறுத்த அளவில் இவர் ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருவார்!

## மக்கள் சக்தி

மதிப்பிற்குரிய மக்கள் சக்தியை எம்.ஜி.ஆர். பெற்ற அளவுக்கு இன்னும் வேறு எந்த நடிகரும் பெறவில்லை! அதனால்தான் இவர் மக்கள் திலகம் என்று அழைக்கப்படுகிறார். இவர் நடிக்கும் படம் எப்படி இருந்தாலும் எம்.ஜி.ஆருக்கு என்று ஒரு குறிப்பிட்ட கலக்ஷன் இருப்பதற்கு இந்த மக்கள் சக்திதான் காரணம். இன்றுள்ள எம்.ஜி.ஆர் பிரியர்கள் ஒவ்வொருவரும் எம்.ஜி.ஆருக்கு 1 ரூபா மணியார்டர் செய்தால் எம்.ஜி.ஆர். கோடீசுவரர் ஆகிவிடுவார்!



**எம்.ஜி.ஆர். பற்றி**
**தமிழ்வாணன்**
**கல்கண்டு 31.7.60 இதழில்.**

# தமிழ்வாணன் தரும் உண்மைகள்

**கல்கண்டு - 3.7.60**

**ஏ. திரு நாராயணன், இளங்காடு**

**கேள்வி: நாடோடி மன்னன், கல்யாணப்பரிசு ஆகிய இரண்டு படங்களில் அதிக வசூலைத் தந்த படம் எது?**

பதில்: நாடோடி மன்னன் தான். எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினி ஆகிய மூவரில் நடித்த படங்களில் அதிக வசூலைத் தந்த படம் எம்.ஜி.ஆர். நடித்த நாடோடி மன்னன் தான். சிவாஜி நடித்த படங்களில் அதிக வசூலைத் தந்த படம் 'கட்டபொம்மன்'. இந்த பட வசூல் நாடோடி மன்னன் வசூலை விடக் குறைவு தான். ஜெமினி நடித்த படங்களில் அதிக வசூலைத் தந்த படம் கல்யாணப் பரிசு. இந்த பட வசூல் நாடோடி மன்னன் வசூலைவிடக் குறைவுதான்.



**கல்கண்டு - 10.7.60**

**ப. ரெங்கநாதன், கோ. கருப்பூர்**

**கேள்வி: தமிழ் நாட்டில் ஒரே ஊரில் அண்ணாத்துரை, எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர், சிவாஜி கணேசன், நெடுஞ்செழியன், கருணாநிதி ஆகியவர்கள் ஒரே நேரத்தில் தனித் தனியாகப் பேசினால் யாருக்கு கூட்டம் அதிகமாக வரும்?**

பதில்: எம்.ஜி.ஆருக்குத் தான் கூட்டம் அதிகமாக வரும். அடுத்து சிவாஜிக்கு. அப்புறம் அண்ணாத்துரைக்கு. அப்புறம் எஸ்.எஸ்.ஆருக்கு. அப்புறம் கருணாநிதிக்கு. கடைசியாக நெடுஞ்செழியனுக்கு. ஏனென்றால் நெடுஞ்செழியனுக்கு சினிமா தொடர்பே இல்லையே.

**கல்கண்டு - 7.8.60**

**வி.ச. பாலன், சென்னை-1**

**கேள்வி: சிவாஜி, எம்.ஜி.ஆர். இந்த இருவரில் யார் நன்றாக ஆங்கிலம் பேசுவார்கள்?**

பதில்: சிவாஜிதான். எம்.ஜி.ஆர் இடையிலே ஆங்கிலம் கற்றுக் கொண்டு வந்தார். நேரம் இல்லாததால் விட்டு விட்டார். இருந்தாலும் எம்.ஜி.ஆர். துணிந்து வெள்ளைக்காரனிடத்தில் கூட 'யூ சீ' (You See), திஸிஸ் தி டிரபிள் (This is the Trouble), வாட் கேன் ஐ டூ (What can I do), என்று பேசி சமாளித்துக் கொள்வார். எம்.ஜி.ஆர். இங்கிலீஷ் பேசும்போது பக்கத்தில் இருந்தால் பொழுது நன்றாகப் போகும். அவர் எது பேசினாலும் அழகாக இருக்கிறது.



ராமாவரம் தோட்டத்தில் எம்.ஜி.ஆர்., தமிழ்வாணன், எம்.பி.சீனிவாசன் ('வெண்திரை' ஆசிரியர்)

கல்கண்டு - 15.5.60

நா. செந்திரன், பாளையங்கோட்டை

**கேள்வி: பாக்தாத் திருடனில் எம்.ஜி.ஆர். நிறைய ஸ்டண்டுகள் செய்திருக்கிறாரே?**

பதில்: கால் முறிந்த எம்.ஜி. ஆர். தன்னை நம்பி நிற்கும் ஆயிரக் கணக்கானவர்களைக் காப்பதற்காக எவ்வளவு துன்பங்களை மேற்கொண்டிருக்கிறார் என்பதை எண்ணும் போது கண்கள் கலங்குகின்றன. எம்.ஜி. ஆரை தெய்வமாக வழிபடுகிறவர்களெல்லாம் பிழைத்தார்கள்!

கல்கண்டு - 19.6.60

எ. பூபாலன், எரியோடு

**கேள்வி: எம்.ஜி.ஆர். (இலவச) மருத்துவமனை எப்படி இருக்கிறது?**

பதில்: ஒரு நாளைக்கு 500 ரூபாய் கேட்கிறது. கோடீசுவரனால் கூட இன்று ஒரு நாளைக்கு 500 ரூபாய் தர்மம் செய்ய முடியாதே! தன் எதிர்காலத்திற்கென்று ஒரு சிறு தொகையை ஒதுக்கிக் கொள்ளும் ஓர் எண்ணம் கூட இன்னும் பிறக்கவில்லையே இந்த எம்.ஜி.ஆருக்கு!

எஸ். தென்னரசு, திருவானைக்காவல்

**கேள்வி: 'விஜயபுரி வீர'னில் நடித்த ஆனந்தன், எம்.ஜி. ஆராக வந்து விட்டார். இனிமேல் எம்.ஜி.ஆர். பாடு ஆபத்து தான் என்று பேசிக் கொண்டார்களே, என்ன ஆயிற்று?**

பதில்: காக்கை எத்தனை முறை முழுகி முழுகிக் குளித்தாலும் கொக்காக முடியுமா? எம்.ஜி. ஆர். கத்தியாலோ, புத்தியாலோ மக்கள் மனதில் இடம் பெறவில்லை. தன்னுடைய பண்பால் மக்கள் மனத்தைப் பற்றிக் கொண்டவர் எம்.ஜி.ஆர். ஆனந்தர்கள் ஆயிரவர் வந்தாலும் எம்.ஜி. ஆரை அசைக்க முடியாது.



கல்கண்டு - 22.12.60

ப. கலிய பெருமாள், புதுக்கோட்டை

**கேள்வி: எம்.ஜி.ஆருக்கும், கண்ணதாசனுக்கும் உள்ள மனத் தாங்கல் எப்படி இருக்கிறது?**

பதில்: எம்.ஜி.ஆர். ஒரு பெரிய ஸ்டேட்ஸ்மேன்; கண்ணதாசன் மீது தனக்குள்ள வருத்தத்தை இன்னும் அவர் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. கண்ணதாசனைக் கண்டால் எப்போதும் போல அவர் பிரியமுடன் தான் பழகுகிறார், பேசுகிறார்.

சா. முத்துக்குமரப்பன், தென்காசி

**கேள்வி: நீங்களும் எம்.ஜி. ஆரும் எப்படி நண்பர்களானீர்கள்?**

பதில்: கலைவாணர், வருகிறவர்களிடமெல்லாம் நான் எழுதிய அறிவு நூல்களைக் கொடுத்துப் படிக்கச் சொல்லி, என்னைப் பற்றி இரண்டு வார்த்தைகளும் சொல்லி வைப்பார். கலைவாணர் இப்படி என்னிடத்திலே நிறைந்த அளவில் மதிப்பு வைத்திருந்ததை எம்.ஜி. ஆர். பல தடவைகள் பார்த்திருக்கிறார். அதனால் என்மீது எம்.ஜி. ஆருக்கு மதிப்பு உண்டாயிற்று. கலைவாணர் எம்.ஜி.ஆருடைய ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லி, ''சுத்தமான மனுஷன்!'' என்று என்னிடம் அடிக்கடி சொல்லுவார். இதனால் எம்.ஜி.ஆரிடம் எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டாயின. அப்புறம், கலைவாணரால் மதிக்கப்பட்ட நாங்கள் இருவரும் நண்பர்களானோம்! இப்போது எங்களிடம் அரசியல் பிரசினைகளில் மட்டுந்தான் வேற்றுமை இருந்து வருகிறது. இதனால் நாங்கள் இருவரும் சந்தித்துக் கொண்டால் அரசியல் பற்றி எதுவும் பேசிக் கொள்வதில்லை! எம்.ஜி.ஆரை அடிக்கடி பார்த்தால் நான் அவர் ஆள் ஆகிவிடுவேனோ என்று பயந்து அவரை நான் அடிக்கடி இப்போது பார்ப்பதில்லை!

வாழ்த்துக்கள்!

நல்வாழ்த்துக்கள்!!





# டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவு இல்லம்

எம்.ஜி.ஆர். நினைவு அறக்கட்டளை

27, ஆற்காடு தெரு, தி.நகர்

சென்னை - 600 017.

பார்வையாளர் நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

செவ்வாயன்று விடுமுறை நாள்



'சாலி வாகனன்' படத்தில் எம்.ஜி.ஆர்.



'பரமபிதா' படத்திற்காக எம்.ஜி.ஆரது பாதிரியார் தோற்றம்.



'காதல் வாகனம்' படத்தில் பெண் வேடத்தில் எம்.ஜி.ஆர்.



'ஆலயமணி', 'கொடுத்து வைத்தவள்' பட்ப்பிடிப்புகள் அருகருகே இருந்த செட்டு களில் நடந்த போது - இடைவேளை நேரத்தில் சிவாஜியும் எம்.ஜி.ஆரும் சந்தித்து உரையாடியபடியே செஸ் விளையாடிய காட்சி.



கடற்கரையில் சட்டையின்றி எம்.ஜி.ஆரது அபூர்வ தோற்றம்







# அள்ளிக் கொடுத்து உடல் சிவந்தவர்!

- புலியூர் சரோஜா



'குடியிருந்த் கோயில்' படத்தில் எம்.ஜி.ஆர்., எல். விஜயலட்சுமி.

புலியூர் சரோஜா என்றால் திரைப்பட முன்னணி நடிகர்- நடிகையருக்கு ஈடாக பெயர் பெற்ற நடன இயக்குநர் என்பது சாதாரண சினிமா ரசிகர்கள் முதல் அத்துபடி. இதுவரை 850-க்கு மேற்பட்ட படங்களுக்கு நடன காட்சிகள் அமைத்திருக்கும் இவர் ஆரம்ப காலத்தில் குரூப் நடனங்களில் ஆடியிருக்கிறார்.

ஏராளமான எம்.ஜி.ஆர். படங்களில் சரோஜா நடன உதவியாளராக பணிபுரிந்திருக்கிறார். நடன உதவியாளர் என்று அப்போதெல்லாம் பெண்கள் யாருமே இருந்ததில்லையாம். இவரது சுறுசுறுப்பை பார்த்து எம்.ஜி.ஆரே தனது பல படங்களுக்கு சிபாரிசு செய்திருக்கிறார். தனது படங்களில் அவருக்கு வாய்ப்பு தர வேண்டும் என்பதற்காகவே சிறிய வேடங்களில் எல்லாம் நடிக்கச் செய்திருக்கிறார். எம்.ஜி.ஆருடன் தனக்கேற்பட்ட அனுபவங்களை மனம் நெகிழக் கூறுகிறார், சரோஜா.

"'நாடோடி மன்னன்' படத்தில் வரும் 'மானைத் தேடி மச்சான் வரப் போறான்' என்ற பாடல் காட்சியில்தான் நான் முதன் முதலாக பங்கேற்றது. அதில் சரோஜா தேவியுடன் ஆடிய எனக்கும் மற்ற நடனப் பெண்களுக்கும் தனது பெயர் பொறித்த தங்க மோதிரம் பரிசளித்தார். 'சின்னவர்' என்று நாங்கள் அன்பாக அழைத்த எம்.ஜி.ஆர்.

பொதுவாக அப்போது நடன உதவியாளர்களுக்கு சம்பளம் கிடையாது. ஆனால் எம்.ஜி.ஆர். படம் என்றால் எனக்கு சம்பளம் கிடைத்து விடும்.

'அன்பே வா' படத்தில் எம்.ஜி.ஆர். சம்பந்தப்பட்ட நடனக் காட்சிகளை உதவியாளர் என்ற முறையில் நான் ஆடிக் காண்பிப்பேன். அதை எம்.ஜி.ஆர். ஒருமுறைதான் கவனிப்பார். ஒரு முறை ஒத்திகை பார்த்துவிட்டு நேராக 'டேக்' போய் விடுவார். அந்த படத்தில் 'நாடோடி நாடோடி...' என்ற பாடல் காட்சியில் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக ஸ்டைலாக நடனம் ஆடினார்.

'குடியிருந்த கோயில்' படத்தில் வரும் 'ஆடலுடன் பாடலைக் கேட்டு...' பாட



'கன்னித்தாய்' படத்தில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவுக்கு அடுத்து இருப்பவர் புலியூர் சரோஜா.

போட்டி வைப்பார் எம்.ஜி.ஆர்.

'உரிமைக் குரல்' படப்பிடிப்பு சமயத்தில் 'யார் அதிகமாக பாயசம் சாப்பிடுகிறார்களோ அவர்களுக்கு 100 ரூபாய் பரிசு' என்று கூறி விட்டார். பலர் பாதியிலேயே முடியாது என்று ஒதுங்கிவிட்டார்கள். மிஞ்சியது எம்.ஜி. ஆரும், நானும். வெற்றி அவருக்குத்தான் என்றாலும், எனக்கு 100 ரூபாய் கொடுத்து விட்டார். மறு நாள் இருவருக்குமே வயிற்றுக் கோளாறு ஏற்பட்டது.

'அன்பே வா' படப்பிடிப்பு (ஊட்டியில்) இடைவேளை நேரத்தில் 'என்னை யார் சிரிக்க வைக்கிறீர்களோ அவர்களுக்கு 100 ரூபாய் பரிசு'' என்று எம்.ஜி.ஆர். அறிவித்தார். எங்கள் குழுவில் சிலர் மிமிக்ரி செய்து நடித்தார்கள். சிலர் கோமாளித்தனமாக ஆடினார்கள். பலர் பலவிதமாக என்னென்னவோ செய்து பார்த்தும், எம்.ஜி.ஆர்.



'நேற்று இன்று நாளை' படப்பிடிப்பில் புலியூர் சரோஜா, நடன இயக்குனர் சலீம், இயக்குனர் ப. நீலகண்டன், எம்.ஜி.ஆர்., மஞ்சுளா.

லுக்கு நடனத்தில் திறமை பெற்ற நடிகை எல். விஜயலட்சுமிக்கு ஈடு கொடுத்து ஆடினார் எம்.ஜி.ஆர். நாங்கள் அவர் எப்படி ஆட வேண்டும் என்று ஆடிக் காண்பித்த போது, ''விஜயலட்சுமி ஒரு டான்சர். நான் அவரோடு ஆட முடியுமா?'' என்று தான் எங்களிடம் கேட்டார்.

''உங்களால் முடியும். நீங்க ஆடுறீங்க'' என்று சொன்னோம். பஞ்சாபியர்களின் அந்த 'பாங்கரா' நடனத்தை எம்.ஜி.ஆருக்குப் பின் யாருமே- அதுபோல் சிறப்பாக ஆடியதில்லை என்று கூறுமளவில் அவர் சிறப்பாகச் செய்து காட்டி விட்டார். அந்த அளவுக்கு அவரைப் போல் உழைப்பில் ஆர்வம் காட்டும் ஒருவரை நான் பார்த்ததில்லை.

'அன்பே வா' படத்திற்காக நாங்கள் சிம்லா சென்றபோது, படத்தில் பணிபுரியும் எல்லோருக்கும் தனது செலவில் எம்.ஜி. ஆர். ஸ்வெட்டர் வாங்கி கொடுத்தார். அவர் வாங்கித் தந்த அந்த பச்சை நிற ஸ்வெட்டரை அவர் நினைவாக, ஒரு பொக்கிஷம் போல் பாதுகாத்து வைத்திருக்கிறேன். படத்திற்கு படம் இப்படி அவரிடம் இருந்து ஏதாவது பரிசுப் பொருள் தவறாமல் கிடைக்கும்.

'குடியிருந்த கோயில்' படத்தில் 'ஆடலுடன் பாடலைக் கேட்டு' பாடலுக்கு சிறப்பாக நடன அசைவுகள் அமைக்க உதவினேன் என்பதற்காக எனக்கு மூன்று சல்வார் கமீஸ் உடைகளை வாங்கித்தந்தார். அந்தப் பாடல் காட்சியில் அவர் நடித்து முடித்த பின், தியேட்டரில் எடுத்த வரை போட்டுப் பார்த்த போது அவருக்கு பிடித்துப் போனதாம். அந்த மகிழ்ச்சியில்தான் ஒன்றுக்கு மூன்று உடைகளை வாங்கிக் கொடுத்தார்.

அந்த மூன்றில் ஒன்றை அணிந்து கொண்டு மறு நாள் அவரைப் பார்க்கப் போன போது, ஒரு புன்சிரிப்புடன் என்னைப் பார்த்தார். அவ்வளவுதான். தான் யாருக்கு எது கொடுத்தாலும் அதை கொடுத்தது போலவே காட்டிக் கொள்ள மாட்டார்.



'நினைத்ததை முடிப்பவன்' படப்பிடிப்பில் புலியூர் சரோஜா, எம்.ஜி.ஆர்., லதா, மஞ்சுளா.

அவருக்கு தொழில் பக்தி அதிகம். படப்பிடிப்பில் யார் தவறு செய்தாலும், அதை கண்டிக்கத் தவற மாட்டார். அதில் கூட நாசூக்கு இருக்கும். சம்பந்தப்பட்டவரை அருகில் அழைத்து அவரிடம் வேறு ஏதோ பேசுவது போல் கண்டிப்பார். அது மற்றவர்களுக்கு புரியாது.

வெளிப்புறப் படப்பிடிப்பில் வெயில் வராவிட்டால் நாங்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்து பேசிக் கொண்டிருப்போம். அது போல் சமயங்களில் எங்களிடம் ஏதாவது அசைந்து கொடுக்கவில்லை.

நான் எழுந்து தமிழும், ஆங்கிலமும் கலந்து பட்லர் இங்கிலீஷில் 'ராமாயணம்' கதையை 'அண்ணனும் சைட்டிங், அவளும் சைட்டிங்... ராமன் வில்லை எடுத்திங், உடைச்சிங்' என்று சொல்ல, எம்.ஜி.ஆர். அடக்க முடியாமல் சிரித்து விட்டார். ஆக 100 ரூபாய் எனக்கே.

அவருடன் பணியாற்றிய காலம் பொற்காலம் என்றுதான் சொல்வேன். 'நான் ஏன் பிறந்தேன்' படத்தில் இடம்பெற்ற 'நான் ஏன் பிறந்தேன்...' பாடல் காட்சியில் தன் பையனை பள்ளிக்கு அனுப்பும் தாயாக நடித்தேன்.

'ரிக்‌ஷாக்காரன்' படத்தில் ஒரு

பெண்ணை அண்ணா சமாதிமுன் ரிக்ஷாவி லிருந்து இறக்கி விடுவாரே. அந்தப் பெண் நான்தான். அதெல்லாம் சிறிய வேடங்கள் தான் என்றாலும் எனக்கு நல்ல சம்பளம் வாங்கித் தருவார் எம்.ஜி.ஆர்.

'அடிமைப் பெண்' படப்பிடிப்புக்காக அனைவரும் ஜெய்ப்பூர் புறப்பட்டபோது நான் மூன்று மாத கர்ப்பிணி. அந்த உடல் நிலையில் நான் நீண்ட தொலைவு செல்லக் கூடாது என்று டாக்டர் எச்சரிக்கை விடுத்து இருந்தார் என்றாலும், எம்.ஜி.ஆர். என்னி டம், ''என் மீது உனக்கு நம்பிக்கை இல் லையா?'' என்று கேட்டு அழைத்துச் சென்று விட்டார்.

ஜெய்ப்பூரில் எனக்கு அடிக்கடி வாந்தி வரும். அப்போதெல்லாம் அவரே சோடா கொண்டு வந்து கொடுப்பார். அத்தோடு நில்லாமல் உடன் அழைத்து வந்திருக்கும் குடும்ப டாக்டர் பி.ஆர்.எஸ்.ஸிடம் என்னை அவ்வப்போது பரிசோதித்து பார்த்து கவனிக்கச் சொல்வார். அது போல் யாருக்கு என்ன கஷ்டம் என்றாலும் அது தனக்கு ஏற்பட்டதாகவே நினைத்து உதவு வார். அவரை மனதில் வைத்துதான் எனக்கு ஆண் குழந்தை பிறந்த போது 'சத்ய நாராய ணன்' என்று பெயர் வைத்தேன்.

'அடிமைப்பெண்' படத்திற்காக 'ஏமாற் றாதே ஏமாற்றாதே... பாடல் காட்சி பாலை வனப் பகுதியில் இரவு நேரத்தில் படமாக்கப் பட்டது. அதனால் நான் வெறுங்காலுடன் நின்றபடி ஜெயலலிதாவுக்கு நடன அசைவு களை சொல்லித் தந்தேன். இரவு நேரத்தில் பாலைவன மணலுக்குள் இருந்து நிறைய கருந்தேள்கள் வெளியே உலாவும் என்று கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர்., எனக்கு மட்டு



மங்களம் (பழைய கதாநாயகி), புலியூர் சரோஜா, மஞ்சுளா, சந்திரகலா, லதா, ஜானகி எம்.ஜி.ஆர்., எம்.ஜி.ஆர்.



'நினைத்ததை முடிப்பவன்' படப்பிடிப்பு காஷ்மீரில் நடைபெற்றபோது எம்.ஜி.ஆருடன் நடனக் கலைஞர்கள், துணை நடிகையர், நடன இயக்குனர் சலீம், மாலையணிந்த பெண்ணுக்கு கீழே புலியூர் சரோஜா.

மின்றி அத்தனை பேருக்கும் முழங்கால் வரை அணிந்து கொள்ளக் கூடிய புது பூட்ஸ்களை வாங்கித் தந்தார்.

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திற்காக எம்.ஜி.ஆர். குழுவுடன் நானும் அயல்நாடுகளுக்குச் சென்றிருந்தேன். தாய்லாந்து, ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குப் பின் ஜப்பான் சென்றோம்.

ஒரு நாள் படப்பிடிப்பு நேரத்தில் சேரில் அமர்ந்திருந்த சந்திரகலாவிடம் நெருங்கிய ஒரு ஜப்பான்காரர், அவரது தலை, நெற்றி, கன்னம், கை என்று தொட்டுக் கொண்டே வந்தார். சந்திரகலாவோ கூச்சத்தால் நெளிந்தார். சற்று தொலைவிலிருந்த எம்.ஜி.ஆர்., அதைக் கவனித்து விட்டார். வந்ததே கோபம் அவருக்கு. அந்த ஜப்பானியரை ஓங்கி ஒரு அறை விட்டார். அடிபட்டவரோ பல அடி தூரம் போய் விழுந்தார் என்றால் எம்.ஜி.ஆர். பலம் எத்தகையதாக இருக்கும் என்பதை யூகித்துக் கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியால் எங்களுக்கு பெரும் சிக்கல் எழுந்தது. அடி வாங்கிய ஜப்பானியர் அந்த பகுதியில் செல்வாக்குள்ள புள்ளி. அதனால் அவரைச் சார்ந்தவர்களுக்கும், எங்களுக்கும் பெரும் வாக்கு வாதம் ஏற்பட்டு படப்பிடிப்பே நடத்த முடியாமல் போகுமோ என்றாகி விட்டது. அதற்கு மொழிப் பிரச்சினையும் ஒரு காரணம்.

கடைசியில் இரு பக்கமும் இறங்கி வந்தோம். சந்திரகலா அணிந்திருந்த ஆடை அலங்காரம் அந்த ஜப்பானியரை ஈர்த்திருக்கிறது. அதனால் அவரது ஆபரணங்களை ஆர்வத்துடன் தொட்டிருக்கிறார். ஆனால் இந்தியாவில் பெண்களை ஆண்கள் சகஜமாகத் தொடுவதில்லை என்ற பண்பாடு பற்றி அவருக்கு எம்.ஜி.ஆரால் எடுத்துச் சொல்லப்பட்ட பின்பே அவர் தன் தவறை உணர்ந்தார். எம்.ஜி.ஆர். சமாதானமாகி அவரை சந்திரகலாவிடம் மன்னிப்பு கேட்க வைத்தார். அயல் நாட்டிலும் அவரது வீரமும், திறமையும் செல்லுபடியானதைக்கண்டு வியந்தோம்.



ஜப்பானில் புத்தர் சிலை முன் ஒளிப்பதிவாளர் ராமமூர்த்தி, நாகேஷ், வசன கர்த்தா சொர்ணம், ப. நீலகண்டன், அசோகன், எம்.ஜி.ஆர்., மஞ்சுளா, சந்திர கலா, புலியூர் சரோஜா.

ஜப்பானில் 'எக்ஸ்போ-70' பொருட்காட்சியில் ஒரு நாள் உலக நடன விழா நடந்தது. அதற்கு எம்.ஜி.ஆர். என்னையும் அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தார். அங்கு உலக நாடுகளின் பல்வேறு நடனங்கள் இடம் பெற்றன. 'இந்த நடனங்களை யெல்லாம் கவனமாகப் பார். பின்னால் உனக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்' என்றார்.

பின்னாளில் நான் நடனம் அமைத்த பல படங்களில் ஜப்பானில் பார்த்த நடனங்களை பிரதிபலிக்கச் செய்தேன், செய்கிறேன். அன்று எம்.ஜி.ஆர். சொன்னது எவ்வளவு தீர்க்க தரிசனமானது என்பதை நினைத்துப் பார்த்து அவருக்கு நான் மானசீகமாக நாள் தோறும் நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

'தேடி வந்த மாப்பிள்ளை' படத்திற்காக 'மாணிக்க தேரில் மரகத கலசம்...' என்ற பாடல் காட்சி சாத்தனூர் அணையில் இரவு நேரத்தில் படமாக்கப்பட்டது. அதற்காக அணையைச் சுற்றிலும் மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டது.

படப்பிடிப்பு சமயத்தில் நான் ஒரு சமயம்



ஜி.சீனிவாசன், புலியூர் சரோஜா.



*வீட்டிலுள்ள பழைய மாடல் டேப் ரிக்கார்டரை இயக்கிப் பார்க்கிறார் எம்.ஜி.ஆர்.*

உயரமான வட்டக்குடை போலிருந்த இடத்தின் மேலே வெறுங்காலுடன் நின்று கொண்டிருந்தேன். அங்கும் மின்சார வயர்கள் நெருக்கமாக இருந்தன. திடீரென்று அவற்றில் மின் கசிவு ஏற்பட்டு எனக்கு ஷாக் அடித்து நான் தடுமாறினேன்.

அதை தூரத்திலிருந்த எம்.ஜி.ஆர். கவனித்து விட்டு ஓடி வந்தார். ''ஏன் வெறுங்காலுடன் மேலே போனே?'' என்று என்னை கடிந்தபடியே கீழிறங்கச் செய்தார். அத்தோடு நில்லாமல், ''சரோஜாவை குடை மேலே போகச் சொன்னது யார்? அவர் ஷாக் அடித்து கீழே விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? சரி அவர் நின்ற இடத்திலாவது சரியான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டாமா?'' என்று படப்பிடிப்பு குழுவிலிருந்த பொறுப்பாளர்களை கடுமையாகப் பிடித்துக் கொண்டார்.

அவர் தமிழக முதல்வர் ஆன பின்பு ஒரு நாள் பட விழா ஒன்றிற்காக ஏவி.எம். ஸ்டூடியோ வந்திருந்தார். அங்கு ஒரு படத்திற்காக நடனம் அமைத்துக் கொண்டிருந்த நான், என்னோடு வந்திருந்த என் மகனையும் அழைத்துச் சென்று எம்.ஜி.ஆரிடம் அறிமுகம் செய்து வைத்தேன். அவனை ஆசீர்வதித்த அவர், ''உன் அம்மா ரொம்ப கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவங்க. அவங்க மனம் கோணாம நடந்துக்கணும். நீ நல்லா படிக்கணும். உன்னை லண்டனுக்கு அனுப்பி வெச்சு படிக்கச் செய்கிறேன்'' என்றார். நான் மகிழ்ச்சியில் கண் கலங்கிப் போனேன்.

நான் அவரை கடைசியாகப் பார்த்தது 'சம்சாரம் அது மின்சாரம்' வெள்ளி விழா நிகழ்ச்சியில். எல்லோருக்கும் கேடயங்கள் கொடுத்து வந்த அவரிடம் நான் கேடயம் பெறச் சென்றபோது அவர் காலில் விழுந்து வணங்கி எழுந்தேன்.

''என்ன நீ பெரிய ஆளாயிட்டியா, என்னை வந்து பார்க்கறதே இல்லையே? என்று கேட்டார். அதற்கு நான், ''உங்களது கையால் இதுபோல் கேடயம் வாங்குவது வரை உங்களை பார்க்கக் கூடாது என்ற வைராக்கியத்தில் இருந்தேன். 'அதற்காகத் தான் இவ்வளவு நாள் உழைத்தேன். இப்போது உங்களது கையால் கேடயம் வாங்கி விட்டேன். இனி உங்களை அடிக்கடி வந்து பார்ப்பேன்'' என்று சொன்னேன். அவர் சிரித்தார்.

1974-ம் வருடம் என் தாயார் இறந்து போனார். அது எப்படித்தான் எம்.ஜி.ஆருக்கு தெரிந்ததோ, உடனே தன் உதவியாளரிடம் 2,000 ரூபாய் கொடுத்து அனுப்பினார். அத்தோடு வேண்டிய உதவிகளையும் செய்து விட்டுவரச் சொன்னார்.

எம்.ஜி.ஆர். பிறந்த தேதி ஜனவரி 17 என்றால் எனது பிறந்தநாள் அதற்கு மறு நாள் ஜனவரி 18-ல் வருகிறது. இதோடு மற்றொரு ஒற்றுமை, இருவருமே பிறந்தநாள் கொண்டாடுவதில்லை. ஆனால் எம்.ஜி.ஆர். பிறந்தநாளின் போது அவருக்கு மாலை போட்டு வாழ்த்து கூறுவோம். அன்றே அவர் எனக்கு அட்வான்ஸ் வாழ்த்து கூறி விரைவாக வீட்டுக்கு அனுப்பி விடுவார்.

பிறரின் தேவையறிந்து உடனே உதவி செய்வதில் அவரைப் போல் யாருமிருக்க முடியாது. அவர் செய்த தர்மத்திற்கு அவருக்கு சாவே வந்திருக்கக் கூடாது.

**கர்ணனுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து கைகள் சிவந்ததாக புராணம் சொல்கிறது. ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களுக்கோ அள்ளிக் கொடுத்து, கொடுத்து உடம்பே சிவந்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும். கர்ணனின் மறு அவதாரம்தான் எம்.ஜி.ஆர்.**

இன்றைக்கும் என் வீட்டில் விளக்கேற்றும் போது அந்த விளக்கின் ஜோதியில் அவர் கலந்திருக்கிறார் என்று நினைத்துக் கொள்வேன். அவருடன் எத்தனையோ புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தாலும் அவரிடம் 'சம்சாரம் அது மின்சாரம்' படத்திற்காக கேடயம் பெற்ற காட்சி உள்ள புகைப்படத்தையே பெரிதுபடுத்தி என் வீட்டு அறையில் வைத்து இருக்கிறேன். அதைப்பார்க்கும் போதெல்லாம் அவர் உயிரோடு இருப்பதாகவே எண்ணுகிறேன்''.

கட்டுரை:
திண்டுக்கல் டி.எம். அர்ஜுனன்



# எங்களை வாழ்த்துங்கள்!

எம்.ஜி.ஆர். தந்த காதுகேளாதோர்
பள்ளியின் மாணவர் நாங்கள் – எங்கள்
பாட்டை நீங்கள் கேட்டு
எங்களை வாழ்த்துங்கள் – அன்புடன்
எங்களை வாழ்த்துங்கள் - **எம்.ஜி.ஆர்.**

உழைப்பால் உயர்வோம் உண்மையைச் சொல்வோம்
ஊக்கத்தைக் கைவிட மாட்டோம்
செய்வன எல்லாம் திருந்தச் செய்வோம்
தலைவரின் பெருமையைக் காப்போம் - **உழைப்பால்**

எங்கள்... குறையைத்.... தீர்த்தார் தலைவர்
என்றும்.... நலமாய்.... வாழ்வோம் நாங்கள்
- **எம்.ஜி.ஆர்.**

(ராமவரம் தோட்ட வளாகத்தினுள் செயல்படும் டாக்டர் எம்.ஜி.ஆர்., வாய்பேசாத இயலாதோர் மற்றும் செவித்திறன் குறைவுடையோர் பள்ளி மாணவ, மாண வியர் காலையில் 'இறைவணக்கம்' நேரத்தில் பாடும் பாடல் இது)

---

நீதியும் நியாயமும் எங்கே இருக்கிறதோ
அங்குதான் கடவுள் இருக்கிறார்.
-நம் நாடு

## எம்.ஜி.ஆர். பேசிய ஆங்கில வசனம்

1967- ல் எம்.ஆர். ராதாவால் துப்பாக்கியால் சுடப்பட்டு சிகிச்சை பெற்று திரும்பிய எம்.ஜி.ஆரது குரலில் சிறிது பழுதடைந்திருந்தது. ஆனாலும் படங்களில், அரசியல் மேடைகளில் பேசிப் பேசி அதை சரி செய்து கொண்டு வந்தார். அப்படியும் 'ரிக்ஷாக்காரன்' படத்தில் 'ஓரம்' 'ஓரம்' என்று சொன்னதை 'ஓயம்' 'ஓயம்' என்று கேலி செய்தார்கள்.

அதில் ஒரு காட்சியில் எம்.ஜி.ஆர்., தான் பி.ஏ. படித்தவராக மஞ்சுளாவிடம் அறிமுகம் செய்து கொள்ளும் போது "If you have tears, shed them now" என்று ஷேக்ஸ்பியர் சொன்னதாக ஆங்கில வார்த் தைகளைச் சொல்வார். அதற்கு தியேட்டரில் பெரும் ஆரவாரம் எழும். ஆனால் எத்தனை பேர்களுக்கு அந்த ஆங்கில வசனம் புரிந்திருக்கும் என்பது கேள்விக்குறி. இன்றைக்கும் அதே நிலைதான்.

---

'நவரத்தினம்' படத்தில் ஒரு வேசி ரோல் பண்ணினேன். ரொம்பச் சின்ன ரோல். ஒன்றரை நாள் வேலைதான். எம்.ஜி.ஆருடன் வேலை செய்யும் பேது அவரே நம்மை மதித்து நடப்பதால், மற்ற சின்னச் சின்ன ஆட்களும் நம்மை மதிக்கிறார்கள் என்பதைக் கவனித்தேன். இது நான் நிறைய நடிகர்களிடம் பார்க்காத, எம்.ஜி.ஆரிடம் மட்டுமே கண்ட ஒரு சிறப்பு.

-நடிகை ஸ்ரீப்ரியா,
15.11.90 குமுதம் இதழில்...



## எம்.ஜி.ஆர். அணிந்த மாவுக்கட்டு

1967 ல் எம்.ஜி.ஆர். துப்பாக்கியால் சுடப்பட்டு சிகிச்சை பெற்ற போது அவருக்கு இரண்டு முறை மாவுக்கட்டு போடப்பட்டது. குணமாகிய பின் எம்.ஜி. ஆர். அதைத் தூக்கி எறிந்து விடவில்லை. கிலோ கணக்கில் எடையுள்ள கனமான அந்த மாவுக்கட்டு இரண்டும் எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்தில் காட்சிப் பொருளாக உள்ளது.

## யார் செய்வார்?

தத்துவக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் காலமானவுடன் எம்.ஜி.ஆர். செய்த முதல் காரியம் என்ன தெரியுமா?

கண்ணீர் விட்டுக் கதறியதோடு நின்றுவிடவில்லை, "நாடோடி மன்னனில்" பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல்களுக்குரிய(இசைத் தட்டில் விற்று வரும்)வருமானம். அவரது குடும்பத்தினர் அடையும் உரிமையை அளித்தார்! இப்படி இதுவரை யார் செய்திருக்கிறார்கள்?

## நிருப்ரின் நண்பர்

ஒருமுறை கன்னியாகுமரியில் நிருபர்களுக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். பேட்டி அளித்தார். சுமார் ஒன்றே முக்கால் மணி நேரம் நடந்த பேட்டி முடியும்போது மணி இரவு பத்தை எட்டி விட்டது.

பேட்டியை முடித்துக் கொண்டு நாகர்கோவிலில் நடக்கும் பொதுக் கூட்டத்துக்கு முதல்வர் செல்ல வேண்டும். ஆனால் நிருபர்களுக்கு தர்மசங்கடமான நிலை. பேட்டி செய்தியை ஆபீசுக்கு தருவதா அல்லது முதல்வருடன் பொதுக் கூட்டத்துக்கு செல்வதா என்ற கேள்வி எழுந்தது.

எதற்கும் முதல்வரிடம் நிலைமையை கூறலாமே என்று அவரிடமே ''நாங்கள் பேட்டியை ஆபீசிற்கு டிரங் கால் போட்டு சொல்லி விட்டு மீட்டிங் வரலாம் என்று பார்க்கிறோம். உங்கள் ஒத்துழைப்பு தேவை'' என ஒரே குரலில் கூறினர்.

உடனே முதல்வர் ''அப்படியானால் எத்தனை மணிக்கு மீட்டிங் குக்கு வரவேண்டும். நீங்களே சொல்லுங்கள்'' என்றார். பன்னிரெண்டு மணிக்கு (நள்ளிரவு) பேசும்படி வாருங்கள் என்று நிருபர்கள் கேட்டுக் கொண்டனர். அதன்படியே சரியாக பன்னிரெண்டு மணிக்கு பொதுக் கூட்டத்திற்கு வந்த முதல்வர் அங்கு நிருபர்களை பார்த்து சரிதானா என்று தலையாட்ட, நிருபர்களும் ஆமாம் என்று தலையசைக்க... பிறகு என்ன? சோர்வாவது! சோம்பலாவது!



'தேர்த்திருவிழா'

# அன்புள்ளம் கொண்டவர்களுக்கு...

நன்றி : 'தினமலர்'
**திரு. ரமேஷ்**
அவர்களுக்கு

'எம். ஜி. ஆர் நினைவுகள்' என்ற பெயரில் இதற்குமுன் வெளியான அபூர்வ எம். ஜி. ஆர். ஆல்பம், பதிப்பக உலகில் அபூர்வ முயற்சி என்று சொல்லவேண்டும். ஆங்கில புத்தகங்கள் வெளியிடும் பதிப்பாளர்கள் மேற்கொள்ளவேண்டிய வேலை அது. ரூபாய் 30 என்று மிகக் குறைந்த விலையில் நாம் வெளியிட்டது (பெரிய பதிப்பகங்கள் குறைந்த பட்சம் ரூ 100 - என்று விலை நிர்ணயித்திருப்பார்கள்). வசதிக் குறைவானவர்களையும் வாங்கத் தூண்ட வேண்டும் என்பதற்காகவே. அதே வரிசையில் இப்போது 'சாதனை நாயகன் எம். ஜி. ஆர்' என்ற பெய.ரில் எம். ஜி. ஆரது திரையுலக சாதனைகளைக் கொண்ட 2-வது புகைப்பட ஆல்பத்தினை வெளியிட்டுள்ளோம்.

சுமார் ஓராண்டு முயற்சியில் வந்திருக்கும் 'சாதனை நாயகன் எம். ஜி. ஆர்' புத்தகத்திற்கு கேட்ட மாத்திரத்தில் விளம்பரம் அளித்து உதவியவர்களுக்கும், குறிப்பாக டாக்டர். திருமதி கமலி ஸ்ரீபால் அவர்களுக்கும் திரு. ஜி.அசோகன் (ஜியே பப்ளிகேஷன்ஸ்) அவர்களுக்கும் எனது நன்றிகள் பல.

'எம். ஜி. ஆர். நினைவு இல்லம்' மற்றும் எம்.ஜி.ஆர். உயில் பொறுப்பாளர் திரு. ராஜேந்திரன், எம். ஜி. சக்ரபாணி அவர்களின் புதல்வர்கள் திரு. எம். சி. ராஜேந்திரன், திரு. எம். சி. சுகுமார், திண்டுக்கல் திரு. டி. எம். அர்ஜீனன், ஜானகி எம். ஜி. ஆர். மருமகன் மயிலை திரு. கே. விஜயகுமார், இவர்களுடன் எம். ஜி. ஆரின் மீது பேரன்பு கொண்ட ரசிகர்களான திரு. டி.எஸ். ஜெயபாபு, அம்பேத்கர் பஸ் கண்டக்டர் திரு. கன்னையா ஆகியோருக்கும் என் நன்றிகள்.

விளம்பர உலகில் விளம்பரம் வேண்டாமென்று முகம் காட்ட மறுத்து, தொடர்ந்து எனக்கு பேருதவிகள் புரிந்து வரும் 'தினமலர்' திரு ரமேஷ் அவர்களுக்கு வெறும் நன்றிகளைச் சொல்லிவிட்டுப் போய்விடமுடியாது. அவரது அன்புள்ளத்திற்கு தலைவணங்குகிறேன். மறுபடியும் 'நிலைத்து நிற்கும் எம். ஜி. ஆர்' என்ற புத்தகத்தின் மூலமாக (தினமலர் வாரமலரில் 'எம். ஜி. ஆர். நினைவுகள்' என்ற பெயரில் தொடராக வெளிவந்தது) சந்திப்போம்.

- பத்திரிகையாளர் **எஸ். விஜயன்** என்ற ராமகிருஷ்ணன்








எஸ். விஜயன் என்ற
ராமகிருஷ்ணன்

---

பத்திரிகையாளர் எஸ். விஜயன் என்ற ராமகிருஷ்ணன் எழுதிய விற்பனையில் சாதனைபுரியும் 'எம். ஜி. ஆர். கதை' முதல் பாகம் (விலை ரூ20) இரண்டாம் பாகம் (விலை ரூ 20) மற்றும் 'எம். ஜி. ஆர். நினைவுகள்' (அபூர்வ புகைப்பட ஆல்பம்) (விலை ரூ40) பார்த்திராதவர்கள் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**அருள்மொழி பதிப்பகம்**
6, அஜிஸ் மூல்க் 1-வது தெரு, ஆயிரம் விளக்கு சென்னை-6

**சாதனை நாயகன் எம். ஜி. ஆர்.**

*முதல் பதிப்பு ஜனவரி 1997.*
*கருப்பு வெள்ளை கலர் ஸ்கேனிங்- ஸ்பெக்ட்ராகிராபிக்ஸ்*
*அச்சிட்டோர்: கார்த்திக் ஆப்செட் பிரிண்டர்ஸ் சென்னை-5*
*வண்ண பக்கங்கள்: மெர்க்குரி பிரிண்டர்ஸ், சென்னை - 2*

மூத்த பத்திரிகையாளர் நாகை தருமன் எழுதிய
'பாரத ரத்னா எம்.ஜி.ஆர்.' விலை ரூ. 15.00
இதயக்கனி எம்.ஜி.ஆர். விலை. ரூ.15.00
கிடைக்குமிடம்
**பேரறிஞர் அண்ணா பதிப்பகம்**
16/1 பீட்டர்ஸ் காலனி
சென்னை - 14

மல்லிகா பிரபாகரன் எழுதிய
எம்.ஜி.ஆர். ஆய்வடங்கல்
விலை. ரூ. 15.00
கிடைக்குமிடம்
**எம்.ஜி.ஆர். நிலையம்**
14, கோபுரம் பழனியம்மாள்
தெரு, குமாரசாமிப்பேட்டை
தருமபுரி - 3




ராசி
நிகழ்கால நாகரிகத்தின் தேர்வுக்கு

சாந்தினி- வெள்ளி ஜரிகையில் உருவாகும் நவ நாகரிகம்.

ஊடும் பாவுமாய் நவீனமும் பாரம்பரியமும்.
காலத்தை வெல்லும் கருவூலமாக
ராசி வழங்கப்படுகிறது — நிகழ்காலத்தின்
நவ நாரீமணியான தங்களுக்கு.

இப்போது சிங்கப்பூரிலும் No. 4, Short Street
என்ற முகவரியில் 'ராசி' பரிமளிக்கிறது

1. சன்னதி தெரு, மயிலாப்பூர்,
சென்னை-600 004.

E-57. இரண்டாவது பிரதான சாலை,
அண்ணா நகர் கிழக்கு,
சென்னை-600 102.


சாதனை நாயகன்
எம்.ஜி.ஆர்